புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 7 25-9-1977



உழைப்போம் வாரீர்!

பேராசிரியர் தமிழ்க்குடிமகன்

தானுகத் தங்களுக்குள் வேறு பட்டுத்
தடுக்கிவிழும் பல்வேறு பிரிவும் உண்டு;
மீனுக எதிரேறி நீந்தி னுலும்
மீக்கிலரால் வாழ்விழக்கும் கூட்டம் உண்டு;
வினுத வன்எதிர்க்க வேண்டும் என்றும்
வெறுப்பினைப் பூச்சிகளும் இங்கே உண்டு;
தேனுக வாயொழுகப் பேசி நாட்டைத்
தின்றுவரும் பெருச்சாளிக் கூட்டம் உண்டு!

வீசுகின்ற தென்றலதும் சாதி பார்த்து
வேறுபட்டு நடக்கவில்லை; குரலெடுத்துப்
பேசுகின்ற எவரேனும் கேட்போர் தம்முள்
பிரிவுகளை நினைப்பதில்லை; நூல்கள் எல்லாம்
மாசுகளைப் பொதுவாகச் சாடல் அன்றி
மாந்தர்க்குள் வேற்றுமையை விதைக்க வில்லை;
கூசுகின்ற படிநாமும் இன்று காணும்
கோணல்நிலைச் சமுதாயம் வந்த தேனே?

எல்லாரும் உயர்தற்கு முயல்தல் நன்றே;
எழிலான வாழ்வதனைக் காணல் நன்றே;
பல்லோரும் அவரவராய் முயற்சி செய்து
பயனுள்ள பலசெயலைச் செய்தல் நன்றே;
சொல்லாலும் செயலாலும் நேர்மை இன்றிச்
சூழ்ச்சிகளை வித்திட்டுப் பகைவளர்த்தே
இல்லாரை வதைப்பதுவும் இருப்போர்க் காக
இளித்துக்கொண் டோடுவதும் என்ன போக்கோ?

புதியதொரு சமுதாயம் படைக்க வேண்டும்;
புத்துணர்ச்சி உள்ளமெல்லாம் பரவ வேண்டும்;
முதியவர்கள் காலமெல்லாம் முயன்று ழைத்த
முறையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்;
எதிலவர்கள் வென்றார்கள், எந்த வேளை
இடர்ப்பட்டு நின்றார்கள் என்ப தையும்
பதியவைத்து நெஞ்சத்தில் பணிமேற் கொண்டால்
பட்டறிவு துணையாகும்; நன்மை சேரும்!

அன்றைக்கு நாம்கண்ட காட்சி வேறு
அனைத்துலகும் போட்டியிட்டு முன்னே ஓடும்
இன்றைக்கு நம்நிலைமை என்ன? நாட்டில்
இனிதான வாழ்வமைக்கத் தேவை என்ன?
தன்தேவை என்பதெல்லாம் பிறரும் எய்தச்
சரியான பாதையெது என்று கண்டால்
என்றைக்கும் சமுதாயம் தாழ்ந்தி டாமல்
எழிலான நிலைகாணும்; உழைப்போம் வாரீர்!

அட்டைப்படம்

வளர்ந்துவரும் சமுதாயத்தில் கடைச் சிப்பந்திகளாப் பணியாற்றும் பெண்களும் சிறப்பான அங்கம் வகிக்கின்றனர்.

வண்ண வண்ணச் சேலைகளைப் புன்னகை தவழும் முகத்தோடு விற்பனை செய்வதில் பாவையர்களுக்கு உள்ள திறமை வேறு யாருக்கு வரும்?

தலைநகரில் புதிய புதிய சேலைரகங்களை அறிமுகம் செய்துவருகிற அஜந்தா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் திருமதி ஜாய்ஸ் தம்பிராஜா, திருமதி மேரிதாஸ், குமாரி சுசீலா கோவிந்தசாமி ஆகிய மூவரும் இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கின்றனர். படம்: மாயன்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 புரட்டாசி 9
கம்பம் 1 :. (25-9-1977) :. குடும்பம் 13

வெளிநாட்டு மூலதனம்

வெளிநாட்டு முதலீடுகளையும் குறிப்பாக அனைத்துலக வர்த்தக நிறுவனங்களின் மூலதனத்தையும் அதிகம் ஈர்ப்பதற்காகத் தனித் துறை ஒன்றை அரசாங்கம் அமைக்குமென்று பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன், ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் மூன்று வார வருகை மேற்கொண்டு தாம் புறப்பட்ட சமயத்தில் அறிவித்திருக்கிறார். அனைத்துலக நிறுவனங்கள் தங்களின் தென்கிழக்காசிய-பசிபிக் வட்டாரத் தலைமையகத்தை மலேசியாவில் அமைக்கும்படி உற்சாகம் அளிப்பதும் இந்தத் துறையின் முக்கியப் பணியாக இருக்கும்.

மலேசியாவைப் பொறுத்தவரையில் அரசியல், பொருளாதார நிலைத்தன்மை வெளிநாட்டு மூலதனங்களுக்குப் பெரிய கவர்ச்சியாக அமைந்திருக்கிறது. தென்கிழக்காசியாவில் வெளிநாட்டுத் தொழில் முதலீடுகளை அதிகம் ஈர்க்கின்ற நாடு மலேசியா என்று சொல்வதும் மிகையாகாது. என்ருலும் அந்நியத் தொழில் அதிபர்களுக்கு இங்கு முதலீடு செய்வதில் நேரக்கூடிய சங்கடங்களைக் களைந்து அவர்களுக்கு இமிகிரேஷன், வேலைப் பெர்மிட், நிதிவசதி, தொலைபேசிச் சேவை முதலான வசதிகள் தடையின்றியும், தாமதமின்றியும் ஒரே இடத்தில் கிட்டுவதற்கு இந்தத் துறை துணைபுரிந்து இதுவரை அந்நிய முதலீட்டாளர்களிடையே நிலவிவந்த அதிருப்தியையும், முணுமுணுப்பையும் போக்குமென்று நம்புகிறோம்.

வெளி மூலதனங்களையும், அனைத்துலக நிறுவனங்களையும் அனுமதிக்கின்ற அதே சமயத்தில் அரசாங்கம் பிற ஆசிய நாடுகளின் அனுபவங்களையும் இத்துறையில் நமக்கு வழிகாட்டியாகக் கொள்வது நன்மையாக இருக்கும். அண்மையில் இந்தியாவின் உள்துறை மந்திரி சரண்சிங் இந்தியாவுக்கு அனைத்துலக நிறுவனங்களே தேவையில்லை என்றும், தற்சமயம் இந்தியாவிலுள்ள அந்நிய மூலதனத்தில் 90 சதவீதம் தேவையற்றதென்றும் குறிப்பிட்டிருப்பது சிந்திக்க வேண்டிய அம்சமாகும். அதுமட்டுமின்றி அனைத்துலக நிறுவனங்களினால் பல்வேறு நாடுகளிலும் எழுந்துள்ள பிரச்சினைகளையும் கவனிப்பதும் பயனுள்ளதாக இருக்கும். அனைத்துலக எண்ணெய் நிறுவனங்கள் மலேசியாவில்

அலுவலக முகவரி

131, ஜாலான்துவாங்கு அப்துல்ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர்01-08, தொலைபேசி: 80839

...ளப்பிய பலமான விவாதங்களையும், விதித்த நிபந்தனைகளையும்கூட நாம் எளிதில் மறந்துவிட முடியாது.

ஆகவே வெளி மூலதனங்களை அனுமதிக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன், பாதுகாப்பாக நடந்துகொள்வது இன்றியமையாதது. அதே சமயத்தில் நாட்டுக்குத் தேவைப்படும் நியாயமான முதலீட்டாளர்களுக்குப் போதிய வாய்ப்பும், பூரண வசதியும் தடங்கலின்றிக் கிடைப்பதற்கும் வகைசெய்வதும் அவசியமாகும்.

குடிக்காதே

இந்தியாவின் ஆளுங்கட்சியான ஜனதா கட்சி தன் உறுப்பினர்களுக்கு ஒரு புதிய கட்டுப்பாட்டை விதிக்க இருப்பதாகப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அறிவித்திருக்கிறார். குடிப்பழக்கம் உள்ள உறுப்பினர் மீது ஜனதா கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களைக் கட்சியிலிருந்து விலக்குமென்று அவர் கூறியிருப்பது தமது ஜனதா கட்சியின் தூய்மையில் அவருக்குள்ள அக்கறையையே காட்டுகிறது. ஆனால் இந்தத் துப்புரவு இயக்கம் எந்த அளவு சாத்தியப்படும் என்பது போகப் போகத்தான் தெரியும்.

பிரதமர் மொரார்ஜி தீவிரமான காந்தியவாதி. அந்த முறையில் தமது ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் இந்தியாவைத் ...தாகவும் அதற்கு ... எதிர்ப்பு வரினும் தாம் பொருட்படுத்தப்போவதில்லை என்றும் அறிவித்திருக்கிறார். இத்தகைய கொள்கைப் பிடிப்புள்ள பிரதமர் ஒருவரை இந்தியா பெற்றிருப்பது பாக்கியமே ஆகும். தூய்மையான இந்தியாவைக் காண்கின்ற முயற்சியில் பாரத மக்கள் தங்களின் பிரதமருக்குத் துணை நிற்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

போட்டி நிறுவனம்

மலேசியத் தொழிற்சங்கக் காங்கிரசுக்குப் போட்டி நிறுவனம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஒரு சில தொழிற்சங்கங்கள் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். தேசிய பத்திரிகை ஊழியர் சங்கத்தின் தலைவர் திரு. ஏ. ரகுநாதன் கூறியிருக்கிறபடி இந்த முயற்சி தொழிலாளர்களின் நம்பிக்கையையும், அவர்களின் பொது நலனையும் பெரிதும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. மலேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தொழிலாளர்களின் நம்பிக்கையையும், அரசாங்கத்தின் நம்பிக்கையையும் அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் நம்பிக்கையையும் ஒருங்கே பெற்று நெடுங்காலமாக நன்கு இயங்கி வருகிற ஓர் அமைப்பாகும். அந்த அமைப்பின் நடைமுறைகளில் அதிருப்தியோ, மாறுபட்ட எண்ணமோ ஏற்பட்டால் அதற்காக மற்றொரு போட்டி காங்கிரசை அமைக்க முனைவது சிறுபிள்ளைத்தனமாகும். அதிருப்தியாளர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்குமானால் அவர்களுக்கு...கங்களின் ஆதரவு கிட்டுவது பிரச்சினையாக இராது. அத்தகைய ஜனநாயக நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமே ஒழிய, போட்டி நிறுவனம் அமைத்துத் தொழிற்சங்கங்களின் ஒற்றுமையையும், பலத்தையும் குலைப்பதற்கு முயல்வது முறையாகாது.

முத்தமிழ் விழா

ம.இ.கா.வின் தேசிய கலாச்சாரப் பகுதி வருகிற நவம்பர் மாதம் 18, 19, 20 தேதிகளில் மாபெரும் முத்தமிழ் விழா ஒன்றை நடத்தவிருப்பதாக அப்பகுதியின் தலைவர் திரு. வி. கோவிந்தராஜ் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த விழாவின் ஒரு பகுதியாக மலேசியாவில் 1976-ஆம் ஆண்டு வெளிவந்த உள்நாட்டுத் தமிழ்ப் படைப்புக்களுக்கு முதல் பரிசு 1001 வெள்ளியும் இரண்டாவது பரிசு 501 வெள்ளியும் வழங்கப்படும் என்றும் இந்தப் பரிசளிப்பு ஆண்டுதோறும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இயல், இசை, நாடகத் துறையில் சிறப்பான தொண்டு புரிந்த மூவருக்குச் சிறப்பு விருதுகள் வழங்குவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஓவியப் போட்டி, பட்டிமன்றம், கவியரங்கம், இலக்கிய ஆய்வுரை, புத்தக ஓவியக் கண்காட்சி ஆகியவற்றுக்கும் முத்தமிழ் விழா திட்டமிடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ம. இ. கா. வின் தேசிய கலாச்சாரப் பகுதி மேற்கொள்ளும் இம்முயற்சி வெற்றி அடைவதற்கு எல்லா ம. இ. கா. கிளைகளும் முழு ஒத்துழைப்பு நல்குமென்று நம்புகிறோம். மாநிலந்தோறும் இத்தகைய முத்தமிழ் விழாக்கள் நடைபெறுவதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் தேசிய கலாச்சாரப் பகுதி திட்டமிடுமென்றும் எதிர்பார்க்கிறோம். "பக்காட் டி. வி." போன்று தேசிய ரீதியில் இந்தியக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் போட்டி நடத்தி பரிசளிக்கவும் வகை செய்யும்படி ம. இ. கா. கலாச்சாரப் பகுதியைக் கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்குப் பாதி

புகழ் பெற்ற நாடகாசிரியரான பெர்னுட்ஷா, அமெரிக்காவில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, "அமெரிக்காவில் பாதிப்பேர் முட்டாள்கள்" என்றார்.


உடனே கூச்சலும் குழப்பமும் எழுந்தது. "மன்னிப்பு வாங்கு" என்று கூக்குரல் வந்தது.

ஷா, மிக அமைதியாக, "அவையோர்களே, நான் கூறியதற்கு வருந்துகிறேன். அமெரிக்காவில் பாதிப்பேர் புத்திசாலிகள்" என்றார். உடனே ஆரவாரம் அடங்கி அமைதி நிலவியது.

-கே. எஸ். எம். ஹாமீம் முஹம்மது, சபாக் பெர்ணம்

புதையல் 50 கோடி

எஸ்.பி.ராஜன்
பட்டர்வொர்த்



அந்த மனிதனைப் பார்த்தால்-நாம் எல்லாரும் ஒரு கனவான் என்று தான் எண்ணுவோம். அவனுடைய அழகிய தோற்றமும், அவன் உடுத்திக்கொண்டிருந்த ஆடம்பரமான உடைகளும் அவன் ஏறிவந்த அரண்மனை போன்ற காரும் "சீமான்" என்ற பட்டத்தையே அவனுடைய நெற்றியிலே எழுதி ஒட்டியிருந்தன.

ஆனால் அமெரிக்கத் துப்பறியும் அதிகாரிகள் மட்டும் அவனை ஒரு "சீமான்" என்று ஏற்க மறுத்தனர். அவர்களுடைய ஏடுகளிலே எல்லாம் அவனைப் பற்றிச் சந்தேகக் குறிப்புகள்தாம் இருந்தன. அவனிடம் திரண்டிருக்கும் செல்வம் எல்லாம் திருட்டுச் சொத்து என்றுதான் கூறின.

ஆர்தர் பாரி என்ற பேர் கொண்ட அவன் பள்ளி மாணவனாக இருக்கும் பொழுதே பக்கத்து வீட்டில் இருந்த ஒரு கிழவியிடம் சுமார் 1000 பவுன்கள் பெறுமானமுள்ள நகைகளைத் திருடித் தன்னுடைய "திருவிளையாடலை"த் துவக்கினான். பின்னர் சிறிது காலத்திற்கெல்லாம் பள்ளியை விட்டு விலகி பக்காத் திருடனாகவே மாறிவிட்ட பாரி, கிராமத்தைவிட நகரம் தான் தன் தொழிலுக்கு ஏற்ற இடம் என்று கருதி அங்கு வந்து சேர்ந்தான்.

நகரத்திற்கு வந்ததில் இருந்து இவனுடைய திருட்டு மூளை மிக மிக வேகமாக வேலைசெய்தது. புகழ் வாய்ந்த துப்பறியும் நிபுணர்களின் கண்களில் கூடப் பொடியைத் தூவிவிட்டு இவன் தன் தொழிலை "ஜாம் ஜாம்" என்று செய்து கொண்டிருந்தான்.

பெரிய மனிதர்களுடைய வீடுகளிலே பெரும்பாலும் வேட்டை நாய்கள் இருக்குமாதலால் முதலில் நாய்களை மயக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டான். எப்படிப்பட்ட முரட்டு நாயையும் ஒரே ஒரு அன்பான தடவலினால் எப்படிச் சாந்தப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொண்ட அவன், திருடப் போகும் போதெல்லாம் தன்னுடன் "பிரியாணி" பொட்டலம் ஒன்றையும் தவறாது கொண்டு போவான். மயக்கமருந்து கலந்து செய்யப்பட்டிருக்கும் அந்த பிரியாணியை வேட்டை நாய் ருசிபார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அதனுடைய எஜமானனை அவன் மொட்டை-அடித்து விடுவானாம்.

மற்றவர்களைப்போல அவன் இரும்புப் பெட்டியை உடைத்துக்கொண்டு கஷ்டப்படுவதில்லை. அவன் தேர்ந்தெடுப்பதெல்லாம் லேடி மவுண்பாட்டன், ராக்பெல்லர், இச்சாக், மாட்சிமை தங்கிய டால்போட் போன்ற செல்வச் செருக்கு மிக்கவர்களாக இருந்ததால் அவர்கள் அணிந்துகொண்டிருக்கும் மோதிரம், அல்லது காதணியைக் கழற்றிக்கொள்வதாலேயே இவனுக்கு மொத்தம் 50,000,000 டாலர்கள் கிடைத்ததாம்.

அவன் மற்றவர்கள் விஷயத்தில் எல்லாம் எவ்வளவோ திறமையாக நடந்துகொண்டும் ராக்பெல்லர் விசயத்தில் மட்டும் சற்று ஏமாந்து விட்டதால்-சரியாக மாட்டிக் கொண்டான். இவனைப் பிடிக்க மற்றவர்களைப்போல ராக்பெல்லர், அரசாங்கத்தையே நம்பியிருக்காது, தனிப்பட்ட துப்பறிவாளர்களை நியமித்ததால் அவர்கள் பாரியை மானைத் துரத்தும் வேட்டை நாய்கள்போலத் துரத்தித் துரத்திப் பிடித்துவிட்டனர்.

ஒருமுறை வேல்ஸ் இளவரசருக்கு அமெரிக்காவில் நடத்தப்பட்ட விருந்தில் தன்னை டாக்டர் கிப்ஸன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பாரியும் கலந்துகொண்டான். அன்று இரவு அதே விருந்திற்கு வந்திருந்த திருமதி லிவர் மோர் என்பவரிடம் நகைகளைப் பறித்துக்கொண்டு வரும் போது, ஏற்கனவே இப்படிப்பட்ட விருந்து ஒன்றில் 35,000 டாலர் பெறுமான நகைகளைப் பறிகொடுத்திருந்த ராக்பெல்லர், இந்த விருந்திற்கும் அவன் வருவான் என்று தன்னுடைய தனிப்பட்ட துப்பறிவாளர்களை நிறுத்தியிருந்தார். இந்த உளவு தெரியாத பாரி, தன் நண்பன் பில்லியுடன் சென்று அந்த வலையில் சரியாக மாட்டிக் கொண்டான்.

கைதுசெய்யப்பட்டபோது உண்மையை ஒத்துக்கொண்டதால், அவனுக்கு 25 ஆண்டுகளும், குற்றத்தை மறுத்ததால் அவனுடைய நண்பனுக்கு 40 ஆண்டுகளும் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

போலிஸார் அவனிடம் சாம, தான, பேத, தண்டங்களைப் பயன்படுத்திப்பார்த்தும் அவன், தான் கொள்ளை அடித்த 50 கோடி டாலர்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்பதை மட்டும் கண்டிப்பாகச் சொல்ல மறுத்துவிட்டான். உண்மையைச் சொன்னால் தண்டனையைக் கூட ரத்துச் செய்வதாக உயர்தர அதிகாரிகள் ஆசை காட்டிய போதும் அவை அனைத்தையும் செலவழித்து விட்டதாகக் கூறினானே தவிர அவை இருக்கும் இடத்தைப் பற்றிச் சிறு மூச்சுக்கூட விடவில்லை.

இந்த நிலையில் ஒரு நாள் அவனைப் பார்க்கவந்த அவனுடைய மனைவி, எப்படியோ சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் ஒரு ரிவால்வாரையும் கொஞ்சம் திராவகத்தையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

அன்று இரவு மற்றவர்கள் எல்லாம் அயர்ந்து தூங்குகையில் பாரி தன்னிடம் உள்ள திராவகத்தைக் காவல் காத்துக்கொண்டிருந்த வார்டனின் முகத்திலே ஊற்றி அவனைக் குருடாக்கிவிட்டு மதிற்சுவரை அவன் தாண்டிக் குதிக்கும்போது ஜெயிலர் ஒருவர் சுட்ட தோட்டா அவனைப் பிணமாக்கிவிட்டது.

அவன் பிணமானதோடு அவன் ஒளித்து வைத்திருந்த திரண்ட செல்வமும் புதையலாகிவிட்டது. அவனுடைய வீட்டைச் சுற்றி ஒரு மைல் சுற்றளவுக்குப் போலீஸ் தோண்டிப் பார்த்தும் அது கிடைக்கவில்லை. அந்தப் புதையல் எந்த அதிர்ஷ்டக்காரருக்குக் கிடைக்கப் போகிறதோ...? யார் அதற்கு உரியவராகப் போகின்றாரோ என்பது இன்னமும் புரியாத புதிராகத்தான் இருந்துவருகிறது...!

‘புருடா விடுறானுங்க’

நடிகவேள் எம்.ஆர். ராதா சாட்டை

‘கோபம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும்’ என்னும் பழமொழி, நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களை வர்ணிப்பதற்கு மிகவும் பொருத்தம். படங்களில் வில்லாதி வில்லனைகத் தோன்றி, கணக்கு வழக்கின்றி அட்டூழியங்களைச் செய்து ரசிகர்களின், குறிப்பாக ரசிகைகளின் வயிற்றெரிச்சலுக்கு ஆளாகும் எம். ஆர். ராதா, நேரில் பழகுவதற்கு மிகவும் நல்லவர்; அமைதியானவர்.

தனக்கென ஒரு தனி குரல்வளமும், நடிப்புத்திறனும் வைத்துக்கொண்டு, 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கலைத்துறையில் இருந்து வரும் இவருக்குத் தற்சமயம் 68 வயதாகிறது.

"என்னைப் பொறுத்தவரைக்கும் யோக்யனுங்கல்லாம் ஜெயிலுக்குள்ளே தான் இருக்கானுங்க" என்று 1972-ஆம் ஆண்டு "பிலிமாலயா" பத்திரிகையில் சூடாகக் கருத்துரைத்திருந்த எம். ஆர். ராதா, தமிழ்நாட்டில் மிசா சட்டத்தின் கீழ் கைதாகிச் சிறையில் இருந்தார். அண்மையில் தான் விடுதலையானார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது!

எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி, ஜெய்சங்கர், ஜெயலலிதா, சரோஜா தேவி, சாவித்திரி போன்ற பல நட்சத்திரங்களுடன் சுமார் 100 படங்களில் நடித்திருக்கும் "கலைத் தென்றல்" எம். ஆர். ராதா, ‘புதிய சமுதாயம்’ இதழுக்குச் சிறப்புப் பேட்டி அளித்தார்.

"உங்களிடம் கொஞ்சம் பிளெய்னைக் கேள்விகள் கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து கோபித்துக்கொள்ளாதீர்கள்" என்று பேட்டியின் ஆரம்பத்திலேயே சொன்னதற்கு, "தாராளமாகக் கேளுங்கள், நீங்க தயங்காமல் கேட்டுங்கன்னு நானும் பதில் சொல்ல ரெடி...!" என்றார் ராதா, தமக்கே உரிய சிரிப்போடு.

கே: உங்கள் பெருக்கு முன்னால் இருக்கும் "எம் ஆர்." என்னும் இரண்டு எழுத்துக்கும் என்ன பொருள்?

ப: ஒண்ணு நான் பொறந்த ஊரோட பேரு; இன்னொண்ணு என் தகப்பனாரோட பேரு. அதாவது எம்முன்னு மெட்ராஸ். ஆர்னு ராஜகோபால் நாயுடு.

கே: இன்றையத் தமிழ்ப்படங்களின் மூலம் நம் சமுதாயத்துக்கு அதிகம் விளைவது நன்மையா தீமையா?

ப: தீமைதான் ரொம்ப விளையுது. அதுவும் இப்ப சில பேருங்க எடுக்கிற படங்களினாலே நம்ம சமுதாயத்துக்கு நன்மை கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஏனென்றால் தமிழ்ப்பட உலகம் யாராலும் சீர்படுத்த முடியாத அளவுக்கு ரொம்ப நலிந்து போயிடுச்சு. இந்தப் பதிலைப் படிச்சுட்டு சில பயலுக என்னைத்திட்டுவானுங்க! ஏன் தீமை, எப்படிக் கெட்டுப் போச்சுன்னு விளக்கம் கேட்க விரும்பினா அவனுங்களையே நேரிலே வந்து என்னைக் கேட்கச் சொல்லுங்க!



கே: இப்போது நம் படங்களில் கதாநாயனுக்காகவே கதை எழுதப்படுகிறதாமே, உண்மையா?

ப: அந்தக் காலத்திலே நானு, கணேசன், ராமச்சந்திரன், சரோஜாதேவி எல்லாம் நடிச்சப்போ, நாங்கல்லாம் ஒரு "டீமாக" நடிச்சோம். குடும்பத்துக்கு ஏற்ற கதை இருந்துச்சு. மக்களும் விரும்பிப்பார்த்தாங்க. ஆனா இப்ப நிலைமை ரொம்ப மாறிப் போயிடுச்சு. துட்டு கொடுத்து, தனக்கு ஏற்றாற்போல கதாநாயக நடிகன்களே எழுத்தாளர்களைக் கதை எழுதச் சொல்றானுங்க! தங்கள் புகழ்பாடும்படி பாட்டு எழுதச் சொல்றானுங்க...! அதனாலேதான் இப்ப வர்ற படங்கள்லே கதையைக் காண முடியலே!

வேசித்தனம்

கே: சில தமிழ்ப்படங்களில் "நியூ வேவ்" என்ற ஒரு பாணி கையாளப்படுவதை நீங்களும் பார்த்திருக்கலாம்; இதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

ப: நியூவேவ், புதுமை, அது இதுன்னு இப்ப சில பேரு "புருடா" விடுறானுங்க...! வேசித்தனத்தை உயர்வாக எடுத்துக்காட்டிவிட்டால் அது புதுமையா? இப்படிப்பட்ட படங்களால் சமுதாயத்துக்கு எப்படிச் சீர்திருத்தம் கொண்டு வர முடியும்?

கே: நீங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு "சினிமா ஃபீல்டுலே திருட்டுப்பயல்கள் ஜாஸ்தி" என்று கூறியிருந்தது இப்போது என் நினைவுக்கு வருகிறது. ஏன் அப்படிச் சொன்னீர்கள்?

ப: ஓ... எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் சொல்றேனே! வறுமையிலே வாடுற எழுத்தாளன் தமிழ்நாட்டுலே ரொம்பப் பேரு இருக்காங்க. ஆனால் கற்பனைகளுக்குப் பஞ்சமே இருக்காது. அப்படிப்பட்ட ஒரு எழுத்தாளன் கஷ்டப்பட்டுச் சுயமா சிந்திச்சு நல்லா ஒரு கதையை எழுதிக்கிட்டு வருவான். சினிமா புரடியூசர் அவனைத் தன் பக்கத்திலே உட்கார வைச்சி அந்தக் கதையைச் சொல்லச் சொல்லுவாரு. அவனும் தனது கதை படமாகப் போகிறதே என்கிற ஆசையிலே உருக்கமா கதை சொல்லுவான். புரடியூசருக்கு மறு பக்கத்திலே இருக்கிறவன் இவன் சொல்ற கதையின் சாராம்சத்தை அப்படியே திருடிப்புடுவான்! கதை நல்லா இல்லைன்னு அவனை அனுப்பிப்புட்டு, அங்கேயும் இங்கேயும் மாத்தி இவனுங்க புதுசா ஒரு படத்தை எடுத்து வெளியிட்டு விடுவானுங்க! இதைத்தான் அன்றைக்கு அப்படிச் சொன்னேன்.

கே: "கலைஞர் மு. கருணாநிதியைத் தலைவராகக் கொண்டுள்ள தி. மு. க., அண்ணாவின் பாதையை விட்டு விலகி ஊழலாட்சி நடத்தியது" என்று குற்றஞ்சாட்டிய எம். ஜி. ஆர்., இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகியுள்ளார். ஒரு நடிகர் முதலமைச்சரானது குறித்து நீங்கள் பெருமைப்படுகிறீர்களா?

ப: ஒரு நடிகர் முதலமைச்சரானது மகிழ்ச்சிதான். ஆனா நாட்டை ஆளும் சாமர்த்தியமும், நிர்வாகத் திறமையும் கலைஞர் கருணாநிதியிடம் நிறைய இருந்தது. அதனாலேதான் அவர் எல்லோராலும்

போற்றப்பட்டிருக்கிறார். புதிதாக வந்திருப்பவரிடமுள்ள திறமை இனிமேல்தான் எப்படி இருக்குன்னு ஜனங்க பார்க்கப் போறாங்க!

கே: இன்றுள்ள தமிழ்நாட்டுத் தலைவர்களில் உங்களைக் கவர்ந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா?

ப: சுயமரியாதையையும் பகுத்தறிவையும் எனக்குப் பகட்டியவர் என் தலைவர் பெரியார். அடுத்து என்னைக் கவர்ந்த நாட்டுத் தலைவர் கருமவீரர் காமராஜ். ஆனா இப்ப இருக்கிறவங்கஎல்லாம் என்னைப் பொறுத்தவரைக்கும் நாட்டுத்தலைவர்களாகவே தெரியலே, என் கண்ணுக்கு எல்லோரும் கட்சித் தலைவர்களாகத்தான் தெரியிறாங்க.

கே: உங்களைச் சிலர் நாத்திகன் என்கிறார்களே, அப்படியென்றால் உங்களுக்குக் கடவுள் மீது நம்பிக்கை இல்லையா?

ப: உண்மையான, பழமையான கடவுள் மீது பக்தி இருக்கிறது. வாழ்க்கையிலே பக்தி இல்லாமல் முன்னேற முடியாது. ஆனால் புதுசு புதுசா "கிரியேட்" ஆகிற கடவுளை மட்டும் நான் நம்புறதில்லை.

கே: நீங்கள் நாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியிருந்த ரோஷன் புரொடக்ஷன் நம்பர் 1, படம் இன்னும் வெளிவரவில்லையே என்ன காரணம்?

ப: அந்தப் படத்தைத் தயாரிக்கிறதாக இருந்த ரோஷனு பேகத்தின் தந்தை முஸ்தபா திடீரெனக் காலமாகிவிட்டதால் அந்தப் படத் தயாரிப்பும் கைவிடப்பட்டு விட்டது

இரண்டு படங்கள்

கே: இதுவரைக்கும் வெளிவந்துள்ள தமிழ்ப்படங்களில், சமுதாயத்துக்கு ஒரு படிப்பினையாக அமைந்தது என்று எந்தப் படத்தையாவது சொல்ல முடியுமா?

ப: திரைப்படங்கள் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டுமென்றால், சீர்திருத்தக் கருத்துக்கள் இருக்கணும், வாழ்க்கைக்கு வேண்டிய கருத்துக்கள் இருக்கணும்! அப்படிப் பார்த்தால் "தேவதாஸ்", "ரத்தக் கண்ணீர்" ஆகிய இந்த இரண்டு படங்கள் மட்டுமே சமுதாயத்துக்குப் படிப்பினையை உண்டு பண்ணியுள்ளன என்று நினைக்கிறேன்.


கே: சில ரசிகர்- ரசிகைகள், சினிமா நட்சத்திரங்களைத் தெய்வமாகக்கூடக் கருதி அவர்களைச் சந்திக்கத் துடிக்கிறார்களே...?

ப: சினிமா நட்சத்திரங்களெல்லாம் புனிதத் தன்மையுள்ளவர்கள் அல்ல! அவர்களும் ஆசாபாசங்கள் உள்ள சாதாரண மனிதர்கள்தாம். அவர்களைத் தெய்வமாக மதிப்பது, நினைப்பது எல்லாம் முட்டாள்தனம்!

கே: இங்கிருந்து சென்னைக்கு வந்து சினிமாவில் நடித்துப் புகழ் பெற வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கும் இளைஞர்களுக்கும் செல்விகளுக்கும் தங்களுடைய அறிவுரை என்ன?

ப: நான் புதுசா எதையும் சொல்ல விரும்பலே...! இங்கிருந்து செலவு செய்துகிட்டு அங்கே வர வேண்டாம். "துட்டுக்கொண்டுகிட்டு வா, உன்னைப் பெரிய ஸ்டாராக்கிவிடுவேன்னு" சில பேருங்க புருடா விடுவானுங்க! அவனுங்க பேச்சைக்கேட்டு வீணா ஏமாந்து போயிடாதிங்க. அதோட உங்களைச் சினிமா ஃபீல்டுலே முன்னேறவும் விடமாட்டானுங்க. உங்களிடமுள்ள கலைத்திறனை இந்த நாட்டு மேடையிலேயே காட்டி முன்னுக்கு வர முயலுங்க! இதுதான் என்னுடைய அறிவுரை, ஆலோசனை எல்லாம்.

பேட்டி: ராமதாஸ் மனோகரன்



"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி –இந்த
நாடே இருக்குது தம்பி –சின்னஞ்
சிறு கைகளை நம்பி –ஒரு
சரித்திரம் இருக்குது தம்பி"

"அண்ணா நீ என் தெய்வம்" படத்தில் எம். ஜி. ஆர் லதா, சங்கீதா-பண்டரிபாய்.

பொம்மை



"சில பொம்மைகள் இருக்கின்றன. சாவி கொடுத்தால் ஒரே மாதிரியான வித்தையைத்தான் செய்யும். இப்போதுள்ள பல நடிகைகளும் இந்தப் பொம்மைகள் போன்றவர்களே.

டைரக்டர் சொல்லிக் கொடுத்தால்தான் நடிப்பார்கள். இல்லாவிட்டால் சாவி கொடுக்காத பொம்மைகள்தாம். "கிளாமர்" நடிகை, பார்க்கெட் உள்ள நடிகை இப்படித்தான் பலவிதமாகப் பெயர்கள் அடிபடுகின்றனவே தவிர, திறமையுள்ளவர் என்று அழைப்பதே இல்லை."

இப்படி இன்றைய இளைய தலைமுறை நடிகைகளைச் சாடி இருப்பவர் யார் தெரியுமா?

நடிகை சௌகார் ஜானகிதான்

மதிப்புரை

உருவகக்கதைகள்

கண்ணால் காண முடிந்தவையும் காண முடியாதவையுமாக உலகத்தில் எவ்வளவோ கோடிக்கணக்கான பொருள்கள் உள்ளன. இவற்றில் உருவத்தால் சிறியவையும் உண்டு; பெரியவையும் உண்டு. உயிரற்றவையும் உண்டு; உயிருள்ளவையும் உண்டு. நம் கருத்துப்படி உயர்ந்தவையும் உண்டு; தாழ்ந்தவையும் உண்டு. ஆனால் அனைத்திற்கும் ஒரு பொதுப்பண்பு உண்டு. ஏதோ ஒரு வகையில் ஒவ்வொன்றிற்கும் ஒரு சில இயற்கையாக அமைந்த இயல்புகள் உண்டு. இந்த இயல்புகள் இல்லாத பொருளும் இல்லை; உயிரும் இல்லை. மொழியில் வழங்கும் எல்லாச் சொற்களுக்கும் பொருள் உண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவ்வாறே, உலகில் காணப்படும் இயங்கு பொருள், இயங்காப் பொருள் ஆகிய அனைத்திற்கும் சில இயல்புகள் உண்டு; பயன்களும் உண்டு. மற்றொரு வகையில் கூறினால், ஒவ்வொரு பொருளும் தன்னளவில் ஏதோவொரு வாழ்க்கை நெறியையோ, உண்மையையோ உணர்த்திக் கொண்டுள்ளன. அதன் விளைவாகவே பல அனுபவ மொழிகளான பழமொழிகள் தோன்றியுள்ளன. "சிறு துரும்பும் பல் குத்த உதவும்", "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" முதலிய ஆயிரக்கணக்கான பழமொழிகள் இதற்குச் சான்றாக உள்ளன. நாயை நன்றிக்கும், நரியை வஞ்சகத்திற்கும், எருமையை மந்தத்திற்கும் உருவகப்படுத்தி எழுதப்பட்ட பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப் கதைகள் முதலியவை இதனை இன்னும் சிறப்பாக விளக்குபவை.

இதே அடிப்படையில் எழுந்த மற்றொரு இலக்கிய வகை உருவகக் கதை. அகக்கண்ணும் அகச்செவியும் கூர்மையாகவும் நுட்பமாகவும் அமைந்த ஒரு சில கலைஞர்களிடம் புல்லும், நாயும், நரியும், மரமும், பிறவும் தங்கள் கதைகளையெல்லாம் மறைக்காமல் கூறுகின்றன. அவற்றைத் தம் கற்பனையில் புடம் போட்டு இக்கலைஞர்கள், மனித குலம் பயனடையக் கதை வடிவில் படைத்துத் தருகின்றனர். உருவகக் கதைகள் இப்படித்தான் பிறக்கின்றன. மலேசிய, சிங்கை வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான சிங்கை முகிலன் இத்தகைய கலையுணர்வு பெற்றவர்களில் ஒருவர்; சிறந்தவர். இவரிடம் பசு தன் கதையைச் சொல்கிறது; நாய் தன் துன்பத்தைக் கூறுகிறது; ஊதுபத்தி தன் ஆற்றலைக் கூறிக்கொள்கிறது; வான்கோழி தன் பொறுமையை வெளிப்படுத்திக்கொள்கிறது; மேகங்கள் உலக தத்துவத்தை விளக்குகின்றன; பட்டம் தன் கர்வ பங்கத்தை உரைக்கிறது; சிகரெட், பீடித் துண்டுகள் தங்கள் நிலையைக் கூறுகின்றன; மூலாம் பழங்களும் மாங்கிஸ் பழங்களும் தம் எண்ணங்களை உணர்த்துகின்றன; போக்குவரவு ஒழுங்கிற்காக நிறுத்தப்பட்ட விளக்குக் கம்பமும் வாழ்க்கை உண்மை ஒன்றைச் சுவைபடச் சுட்டிக்காட்டுகின்றது. இவற்றையே அவ்வப்போது அவர் கதைகளாக்கி, அவற்றில் நாற்பத்தொன்றைத் தேர்ந்தெடுத்து, "உருவகக் கதைகள்" என்ற பெயரில் தொகுத்து நூலாகத் தந்துள்ளார். சுவைக்காகவும், அறிவுரைகளுக்காகவும் சிறுவரும் பெரியோரும் படிக்க வேண்டிய ஒரு நூல் இது.

நூலில் காணப்படும் 41 கதைகளும் பல்வேறு பொருள்களின் அடிப்படையில் பிறந்து, பல்வேறு வாழ்க்கை உண்மைகளை உணர்த்துகின்றன. இரக்கம், தகுதி, ஒழுக்கம், படிப்பினை, தாய்ப்பாசம், விருப்பும் வெறுப்பும், வாழ்வு, பதுக்கல், நன்றி, போலிப்புகழ், குடும்பக்கட்டுப்பாடு, தாய்மொழி, ஆணவம், காதல், இரவல், விமர்சனம், தியாகம் முதலிய பலவும் உருவகக் கதைகளின் மூலம் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பரந்துபட்ட வாழ்க்கைக் களமும், எல்லாப் பகுதிகளையும் கற்பனைக் கண்ணோடு காணும் ஆசிரியரின் திறனும் எடுத்த எடுப்பிலேயே நன்கு புலனாகின்றன.

இக்கதைகளில் பல ஒரு முறை படித்தவுடன் நெஞ்சில் அழகாகப் பதிகின்றன. குடும்பக்கட்டுப்பாட்டை மாமரத்தின் மூலம் விளக்கியிருக்கும் அழகும், ஆன்மா அழிவில்லாதது என்பதை மேகங்களின் உரையாடல் மூலம் உணர்த்தியிருக்கும் பக்குவமும், வாழையடி வாழையை- அதன் சிறப்பை-நல்ல கதையாக்கி இருக்கும் திறனும், தரத்தில் தாழ்ந்ததாகக் காணப்படும் ஒரு பொருள் உயர்ந்த பொருளுக்குச் சமயத்தில் உதவுவதைப் பருத்தி-இலவம்பஞ்சின் மூலம் காட்டியிருக்கும் உத்தியும், தவளைக் கத்தல் மூலம் விமர்சனத்தை விமர்சனம் செய்யும் நேர்த்தியும், போக்குவரத்து விளக்குக் கம்பத்தின் மூலம் கட்டுப்பாடான வாழ்க்கையின் சிறப்பை உணர்த்தும் சிறப்பும் குறிப்பிடப்பட வேண்டியவை. உருவகக் கதைகளின் அருமையை இவை அழகாக உணர்த்துகின்றன.

பல கதைகளில் பொருள்களின் இயற்கைப் பண்பு கதைகளின் அடிப்படையாக அமைந்திருந்தாலும், ஒரு சில கதைகளில் உண்மைகள் வலிந்து கதை வடிவமாக்கப்பட்டுள்ளன. பதுக்கல், நன்றி மறப்பது, தாய்மொழி, அந்த உருவங்கள் முதலியவை இவ்வாறு அமைந்தவை. அன்றியும் உருவகக் கதைகளின் உயிரே அவற்றின் சுருக்கத்திலும், உய்த்துணர வைக்கும் பக்குவத்திலுமே அடங்கியுள்ளது. ஆனால் இக்கதைகள் பலவற்றில் அறியப்படும் உண்மைகள் விளக்கமாக இடம் பெற்றுள்ளன. உய்த்துணரலாக (Suggestive) இவை அமைந்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். சில கதைகளின் நீளமும் இதனால் குறைந்திருக்கும். மற்றொன்று: உயர்ந்தவர்களும், தியாகிகளும் தங்கள் சிறப்பைத் தாங்களாகவே கூறிக்கொண்டால் அதில் பெருமையில்லை; சிறப்பும் இல்லை. இக்கதைகள் சிலவற்றில் அவ்வாறு நேர்கிறது. மெழுகுவர்த்தி தன் தியாகம் ஏன் சிறந்தது எனத் தானே விளக்குவதும், நெல், பதரை இழிவுபடுத்தித் தன் உயர்வு கூறுவதும் இவ்வாறு அமைந்தவை. இத்தகைய சிறுசிறு குறைகள் ஆங்காங்கு தென்பட்டாலும், படித்துச் சுவைக்க, பயன் பெற யாதொரு தடையும் இல்லை. ஆசிரியரின் சரளமான நடையும், இயற்கையான உரையாடல்களும் படித்துச் சுவைக்க மேலும் துணை செய்கின்றன.

நூலின் பெயர்: உருவகக்கதைகள். ஆசிரியர்: சிங்கை முகிலன்.
வெளியீடு: சிங்கப்பூர் தமிழர் இயக்கம், 35, நோரிஸ்தெரு, சிங்கப்பூர்-8.
கிடைக்குமிடம்: சோமசன்மா பதிப்பகம், புளோக் 125, எண் 643-D,
தா சிங் தெரு, சிங்கப்பூர்-22. விலை: $3.00.

தீயகுணம்

"மனிதனில் உள்ள (மிகப்) பெரும் தீய குணம் (ஒரு காசு) செலவழித்துவிட்டாலும் (அதன் காரணமாக) அவனை அமைதி இழக்கச் செய்யும் கஞ்சத்தனமாகும். மேலும் பதற்றமுள்ள கோழைத்தனமான மனமுமாகும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

—அல்ஹதீஸ்

19. "நீல நயனங்களில் ஒரு நீண்ட கனவு"

லல்லி வனிதாவை இமைக்காமல் பார்த்துக்கொண்டு நின்றாள். லல்லியின் அந்தப் பார்வையில் குறும்புத்தனம் பிளிரவில்லை! அவளுக்கே உரித்தான அந்தக் கேலிப் பார்வையுமல்ல! வனிதாவின் மன உணர்வுகளை அலசி ஆராய்வது போல் இதயத்தின் அடித்தளம்வரை ஊடுருவிச் சென்று உலுக்குவது போன்ற உணர்வு ஏற்பட்டது. பிரமை பிடித்தவள்போல் பேசாமல் நின்றுவிட்டாள் வனிதா.

"லல்லி... நான் வந்து, வந்து..." வனிதா வார்த்தைகளை மென்று கொண்டிருந்தாள்.

"ம்... அப்படி வா வழிக்கு! நீயும் கனவு காண ஆரம்பித்து விட்டாய் என்று சொல்! அதுதான் உன் விழிகளைப் பார்த்தாலே தெரிகிறதே?"

"என்ன தெரிகிறதாம்...?"

"கனவுகள் பல கோடி...!"

வனிதா பேசவில்லை! ஏதோ நினைவுகளில் தன்னை மறந்திருந்தாள். அந்த நீல நயனங்களில் நிழலாடிய இன்பக் கனவுகளைக் கலைக்க மனமின்றி லல்லியும் மௌனமாக இருந்தாள்.


தேன். ம்...! எப்போதிருந்து இந்த நாடகம் ஆரம்பமானதோ? எனக்குக்கூடச் சொல்லாமல்!"

"போடி லல்லி! சும்மா கேலி பண்ணாதே" -வனிதா நாணத்தோடு சிணுங்கினாள்.

ஸ்கூட்டரில் ஊர்வலம் வரும் அளவுக்கு வந்துவிட்டதென்றால் நெருக்கம் அதிகமாகிவிட்டது என்றுதானே அர்த்தம்!"

"லல்லி...ப்ளீஸ்! நான் சொல்வதைக் கேளேன்!"

"ஓகே, சொல்லு! கேட்கச் சுவையாக இருக்குமே..." லல்லி வாய்விட்டுச் சிரித்தாள்.



லல்லியின் சுபாவத்தோடு ஒன்றிப் போயிருந்த கேலியோ கிண்டலோ துளியும் தென்படாததால் அந்தப் பார்வையின் சக்தியைச் சமாளிக்க முடியாதவள்போல் மெல்லத் தலையைத் தாழ்த்திக்கொண்டாள்.

அந்த மௌனத்தை விரும்பாதவள்போல லல்லி பார்வையைச் சற்றே விலக்கினாள். குற்றம் செய்துவிட்டவளைப்போல் குறுகிக்கொண்டிருக்கும் வனிதாவின் நிலையைக் காண அவளுக்குச் சங்கடமாகவே இருந்தது.

அந்த வினாடிநேர மௌனமே பயங்கரமானதாகத் தோன்றியது வனிதாவுக்கு. அதைக் கலைத்துவிடவே விரும்பினாள். ஆனால் அவளால் எதுவும் பேச முடியவில்லை. சில வினாடிகள் வெளியில் அலைபாய்ந்துவிட்டதால் விழிகளில் மட்டுமின்றி உணர்வுகளிலும் சிறிது மாற்றம் ஏற்பட்டிருந்தது லல்லிக்கு.

அவள் சகஜமான நிலைக்கு வந்துவிட்டவள்போல் காணப்பட்டாள். பெருவிரலால் தரையில் கோலம் போட்டுக்கொண்டிருந்த வனிதாவைப் பார்த்து மெல்லச் சிரித்துக்கொண்டாள். அவளது தாமரை முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்திவிட்டுக் கனிவோடு நோக்கினாள்.

"வனிதா! என்ன ஊமையாகி விட்டாய்! நான் கோபியல்ல! உன் லல்லிதான்! என்னைப் பார்க்கக்கூடவா வெட்கம்?" - லல்லியின் குரலில் புதைந்து கிடந்த கேலியைப் புரிந்துகொண்டவள்போல முகத்தை இன்னும் தாழ்த்திக்கொண்டாள் வனிதா. அவளது விரல்கோலம் துரிதகதியை அடைந்தது!

"வனிதா பேபி, உன்னை நான் குழந்தை என்றல்லவா இவ்வளவு நாளும் நினைத்துக்கொண்டிருந்

"போ லல்லி! நீ கேலி செய்யாமல் கேளு! நான் நடந்ததை முழுதும் சொல்லிவிடுகிறேன்!"

"உன் காதல் அனுபவங்களைக் கேட்க எனக்கும் ஆவல்தான்! சீக்கிரமாய்ச் சொல்லு!"

வனிதா பட்டென்று தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அவள் அழ ஆரம்பித்துவிட்டாளோ? லல்லி திடுக்கிட்டு அவள் தோளைப் பிடித்துக் குலுக்கினாள். என்ன ஆச்சரியம் இது?

கன்னங்களில் நாணச் சிவப்பேறி செவ்வானத்தின் எழில் கோலம் படர்ந்தது. அந்தச் செவ்வானத்தில் இரு நட்சத்திரங்கள் கண்சிமிட்டும் அழகை வர்ணிக்க வார்த்தைகள் ஏது?

தொட்டதற்கெல்லாம்குழந்தை போல் அழத் தொடங்கிவிடும் அந்த வனிதாவா இவள்?

லல்லி வியப்போடு அவளை நோக்கினாள். கனி இதழ்களில் மின்னி மறையும் இந்தப் புன்னகை ஒன்றே ஆயிரம் கதைகள் சொல்லுமே என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள் லல்லி!

"ஏய் வனிதா! நீ எதையும் சொல்லவேண்டாம்! எல்லாம் எனக்குத் தெரியும்! அந்த நவீனைப் பார்த்துப் பயந்து போய்க் கோபியின் ஸ்கூட்டரில் ஒட்டிக்கொண்டு வந்திருக்கிறாய்! பாவம் கோபி! நீ என்னவோ அவரை ஒரேயடியாய்க் காதலிப்பதாக எண்ணிக் கனவு காண ஆரம்பித்திருப்பார்! நான் போய் அவரிடம் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று சொல்லிவிடட்டுமா?"– லல்லி முகத்தைச் சீரியசாக வைத்துக்கொண்டு அவளைப் பார்த்தாள்.

வனிதா தனது பட்டுக் கூந்தலைச் சுருட்டிக் கொண்டே என்னவோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அதைச் சொல்ல முடியவில்லை அவளால்.

அவளது தடுமாற்றத்தைப் புரிந்துகொண்டவள்போல லல்லி அவள் தோள்களைப் பற்றினாள்.

"வனிதா! காதல் தோன்றுவது எளிது! ஆனால் நிலைத்து நிற்பதோ, நிறைவேறுவதோதான் அபூர்வம்!"

"கோபியும் என்னை விரும்புகிறார் லல்லி!"

"அழகான பெண்ணைக் கண்டால் யார்தான் விரும்பமாட்டார்கள்?"

"அப்படியானால்...? நீ என்ன சொல்கிறாய்?"

"இந்தக் காலத்தில் இது ஒரு வேடிக்கையாக, விளையாட்டாக ஏன், பொழுதுபோக்காகக் கூட ஆகிவிட்டது என்பதை மறந்துவிடாதே!"

"லல்லி"-வனிதா அதிர்ச்சியடைந்தவள்போலக் காணப்பட்டாள்.

"பயப்படாதே வனிதா! கோபியைப் பொறுத்தவரை நீ கவலைப்படவோ அஞ்சவோ தேவையில்லை! அந்த வரையிலும் நீ அதிர்ஷ்டக்காரி என்றுதான் சொல்வேன்! ஆனால் நீ..." லல்லி தயங்கினாள்.

"என்னைப்பற்றி உனக்குச் சந்தேகம் வந்துவிட்டதா?"

"நீ கள்ளங்கபடம் அறியாத குழந்தை போன்றவள் என்பதைச் சொல்ல வருகிறேன்! உன்னால் சமாளிக்க முடியுமா என்ற அச்சம் ஒன்றுதான் என் கவலையெல்லாம்"

"நீ என்ன சொல்கிறாய் லல்லி? நான் கோபியை மனப்பூர்வமாக விரும்புகிறேன்! அவர் மீது உண்மையான அன்பு கொண்டிருக்கிறேன்!

இதில் நீ அஞ்சும்படி எதுவும் இல்லையே!"

"உன் அன்பு உறுதியானதுதானே?"

"நிச்சயமாக... அவரை மறக்க என்னால் முடியாது! முடியவே முடியாது லல்லி! கோபியின் அன்பு தூய்மையானது. அதைப்போலவே நான் கொண்டதும் தூய்மையான களங்கமில்லாத அன்புதான்!"

"உங்கள் இருவரின் மனமும் எனக்குத் தெரிந்ததுதானே? ஆனால் உன் அப்பா இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமே!"

வனிதா சிலிர்த்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்!

20. 'இனிய நினைவுகளில் இதயம் நினைகிறது'

அந்த இனிய அனுபவத்தை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்த கோபிக்கு உடல் புல்லரித்தது!

வனிதா தன்னைப் பிடித்துக்கொண்டு தன் பின்னால் அமர்ந்து ஸ்கூட்டரில் வந்தாள் என்பதை எண்ணும்போது எண்ணங்கள் இன்பச் சிறகடித்துப் பறப்பதுபோல ஒரு நினைவு.

அது நிஜமாகவே நடந்ததா அல்லது கனவா என்று கூடச் சந்தேகம் தோன்றியது அவனுக்கு.

பூமாலையைப்போல முதுகில் அவள் சாய்ந்து கொண்டிருந்த அந்த வினாடியில் அப்படியே ஸ்தம்பித்துப் போயிருக்கக் கூடாதா என்ற பேராசை அவனுள் பெருக்கெடுத்தது.

தியேட்டர் வாசலில் முதன்முதலாக ஏற்பட்ட இனிய சந்திப்பு! ரிச்சர்ட்டின் வீட்டில் எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தபோது இணைந்த உள்ளங்களின் பிணைப்பு! அதன் மூலம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடிந்த இன்பச் சிலிர்ப்பு!

யாவும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துவந்து அவனை இனம் புரியாத இனிய உணர்வுகளில் மூழ்கடித்தன.

இதயத்தினுள் ஓர் இனிய ராகம் மெல்லிசை மீட்டியது. ஸ்கூட்டரின் படபட ஓசையால் அதற்குத் தாளமிடுவதுபோல மெல்ல ஸ்கூட்டரை செலுத்திக் கொண்டிருந்தான்.

வனிதாவை இறக்கிவிடும்போது அங்கே லல்லியும் அவளது தோழியும் நிற்பார்கள் என்று சற்றும் எதிர்பார்த்திராத அவனுக்கு அதனால் கூச்சம் ஏற்பட்டதையும் வனிதாவை அவர்கள் கேலிசெய்யத் தொடங்கியதையும் நினைத்து மீண்டும் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

அவள் சொன்ன அந்தவார்த்தைகள் இன்னும் காதுக்குள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.



"மிகவும் வேண்டியவர்" என்று அவள் சொல்லும்போது ஏற்பட்ட அந்த உரிமையும் அதில் பொதிந்திருந்த அர்த்தமும்...!

அப்படியே ஸ்கூட்டரைத் திருப்பிக் கொண்டு மீண்டும் வனிதாவிடம் போய்விடலாமா என்று உள்ளம் துடித்தது.

அங்கே லல்லி நிற்பாள்! அவளோடு அந்த வம்புக்காரியும் அல்லவா கூடநிற்பாள்! சே, வேண்டாம்! வனிதாவை வீண்வம்பில் மாட்டிவிடப் போகிறோமோ என்ற அச்ச உணர்வு, அவன் ஆவலுக்கு அரண் கட்டியது.

கூடவே அந்தத் தாடிக்காரனின் நினைவும் அவனைத் தீண்டி வேடிக்கை காட்டியது.

நவீனைப் பற்றி நினைக்கும்போதே உடம்பு பற்றி எரிவதுபோல இருந்தது. வனிதா அவனைக் கண்டு பயந்து போயல்லவா பாவம், ஓடி வந்திருக்கிறாள்.

அவளுக்கு ஆறுதலாக எதுவும் சொல்லக்கூட முடியாமல் போய்விட்டதே என்று உள்ளுக்குள் வருந்தினான்.

நாளைக்கு எப்படியும் அவளைச் சந்திக்கவேண்டும்! அவளுக்கு ஆறுதல் தரும்படிப் பேசி அவளது திகிலைப் போக்கவேண்டும். லல்லி சொன்னபோது மிகவும் சாதாரணமாக நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை இப்போது நினைத்துக்கொண்டான். அவன் ஏன் வனிதாவை விரட்டிக்கொண்டு வருகிறான்? கோபியின் அரும்பு மீசை ஆத்திரத்தால் துடித்தது. அடுத்த வினாடியே வனிதாவின் எழில் கொஞ்சும் இன்பமுகம் அவன் மனக்கண் முன் நிழலாடியது.

அந்தத் தேன் சிந்தும் தெய்வீக மலரை வண்டுகள் வட்டமிடாமல் இருக்க முடியுமா? அந்த அழகு யாரைத்தான் மயங்க வைக்காது? ஆனால் அவள் தனக்கே உரியவள்! தான் பட்டுமே நெருங்க முடியும் என்ற பெருமிதம் அவன் இதயத்தை விம்மச் செய்தது.

தனக்கே உரியவளான வனிதாவைக் கண்ணை இமை காப்பது போலக் காக்கவேண்டும்! இல்லாவிடில் அந்தத் துஷ்டனால் அவளுக்கு எந்த நேரமும் எதுவும் நேரக் கூடும்!

கோபி உணர்வலைகளால் உந்தப்பட்டு நோக்கமின்றிப் போய்க் கொண்டிருந்தான்.

திடீரென்று அலறிய ஹாரன் ஒலி அவன் நினைவோட்டத்தை மீட்டது. திடுக்கிட்டு நோக்கிய போது எதிரே ஒரு மோட்டார் சைக்கிள் அவனை இடித்துக்கொண்டு வந்து நின்றது.

பயங்கரமான காட்டுமிராண்டியைப்போலப் பரட்டைத் தலையோடும் தொங்கும் மீசையோடும் ஒருவன் அதில் காணப்பட்டான். அவனை அடுத்து இரண்டு பக்கமும் இரு மோட்டார் சைக்கிள்கள் வந்து வழி மறிப்பது போல நின்றன.

திகைத்துப்போன கோபி இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். அவர்களில் ஒருவன் அதே தாடிக்காரன்! நவீன்! லல்லி சொன்ன அந்த நவீன்! சற்று முன் வனிதாவை விரட்டிக்கொண்டு வந்த அதே நவீன்!

இவன் எதற்காக இப்படி வலுவில் வம்புக்கு வருகிறன்? மூன்று முரடர்களின் மத்தியில் ஒருவனுக வசமாக மாட்டிக்கொண்டோமே!

அன்று லல்லி எச்சரிக்கை செய்தது சரியாகப் போய்விட்டது! இன்று ஏதோ நிகழப்போகிறது. இவர்கள் வலிய வம்புக்கு வருகிருர்கள். விலகிப் போய்விடுவதுதான் புத்திசாலித்தனம்! இவர்கள் விலகிப் போனுலும் விட்டுவிடுவார்களா?

கோபி என்ன செய்யலாம் என்று யோசித்தபடியே ஸ்கூட்டரை மெல்லப் பின்னேக்கி நகர்த்தினுன்.

பரட்டைத் தலையன் தனது மோட்டார் சைக்கிளைக் கோபியின் ஸ்கூட்டரில் மோதுவது போல முன்னுக்குத் தள்ளினுன்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ற கோபியை மேலும் உலுக்கிவிடுவது போலப் பின்னுலிருந்து பலவித்மான ஹாரன் சத்தங்கள் கேட்டன. அச்சவுணர்வு. இதயத்தில் மெல்ல எழும்பியது. கோபி திடுக்கிட்டுத் திரும்பினுன்!

"ஹாய் கோபி! என்ன, ஆக்ஸிடெண்டா...?" ரிச்சர்ட்டின் குரல் அழுத்தமாய்க் காதில் பாய்ந்தது. அவனேடு நண்பர்கள் ஐந்தாறு பேர்!

"இல்லே ரிச்சர்ட்! ஆக்ஸிடெண்ட் ஏற்பட இருந்தது; நல்ல வேளையாக ஒன்றும் ஏற்படவில்லே!" கோபி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

நவீனும் அவன் நண்பர்களும் படுவேகமாகத் திரும்பிக்கொண்டு காற்ருய்ப் பறந்தார்கள். அவர்களின் ஏமாற்றமும் ஆத்திரமும் அசுரத்தனமான அந்த வேகத்தில் தெரிய வந்தன.

"ரிச்சர்ட்! நல்ல சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்! எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லே!"

ரிச்சர்ட் கடகடவென்று சிரித்தான். "இதை லல்லியிடம் போய்ச் சொல்லு...!"

"என்ன? நீ என்ன சொல்கிருய் ரிச்சர்ட்?"

"லல்லியிடம் போய் நன்றி சொல்லு என்றேன்! அவள்தான் சற்று முன் டெலிபோன் செய்தாள். வெளியில் போகக் கிளம்பிக்கொண்டிருந்த எல்லோரும் அப்படியே ஓடி வந்தோம்! உன் வீட்டுக்குத்தான் போக இருந்தோம்! வழியிலேயே பிடித்துவிட்டோம்!"

கோபிக்கு உடலும் உள்ளமும் சிலிர்த்துவிட்டன! லல்லிக்கு எப்படித்தான் நன்றி செலுத்துவது?

(வளரும்)



தொலைக்காட்சி

25-9-77 ஞாயிறு மாலே 4.00க்கு இந்திப்படம் "மா அவுர் மந்தா"

29-9-77 வியாழன் மாலே 5.31க்கு இந்திப்படம் Budda Mil Gaya.

2-10-77 தமிழ்ப்படம்: ராணி லலிதாங்கி

6-10-77 தமிழ்ப்படம்:

இதர நிகழ்ச்சிகள்

வியாழக்கிழமை தோறும் இரவு மணி 7.25க்கு ஜெமினி மேன் (மாய மனிதன்)

சனிக்கிழமைதோறும் மாலே 6.45-க்கு தும்புவான் மிங்கு (தமிழ் நிகழ்ச்சி)

சனிக்கிழமைதோறும் இரவு 7.20க்கு சிக்ஸ் மில்லியன் டாலர் மேன். (லீ மேஜர்ஸ் நாயகனுகத் தோன்றி நடிக்கும் ஆங்கிலப் படம்)

ஞாயிறுதோறும் இரவு மணி 10க்கு கோம்பெட்.

தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கடைசி நேர மாற்றங்கள் செய்யப்படலாம்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலே 10·30க்கு ஒலிபரப்பாகிறது)

2-10-77 சுங்கைவே ஏ. பாவை எழுதிய "மருத்துவச்சி"

9-10-77 எஸ். வைரக்கண்ணு எழுதிய "என் பெயர் சுவர்ணலதா"

நாடகம்

[சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

1-10-77 "ஒரு அத்தியாயத்தின் புதிய தொடக்கம்" செர்டாங் எல். முத்து எழுதியது. (பினங்கு நிலயத் தயாரிப்பு)

8-10-77 "பெற்ற மனம்" புக்கிட் பெர்டாஜம் ஆ. திருச்செல்வி எழுதியது.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

1-10-77 "வீட்டுக்கு ஒரு பெண்" எழுத்து: சுப்பிரமணியம் சக்கரவர்த்தி.

8-10-77 "தெட் மேன் பிரம் முருங்கட்டை" எழுத்து: சுங்கை சிப்புட் ஆர். சண்முகம்.

தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)


எஸ். எலிசபெத் எழுதிவரும் "உறவு முள்" 26-9-77 எட்டாம் பகுதி, 3-10-77 ஒன்பதாம் பகுதி, 10-10 77 பத்தாம் பகுதி.

17-10-77 முதல் எம். ஜெயலெட்சுமி எழுதும் "இதய வாசல் உனக்காக" என்னும் புதிய தொடர் நாடகம் ஒலியேறவிருக்கிறது. இதனை எல். ராமன் தயாரிக்கிருர்.

சிறுகதை

(ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

25-9-77 ஆர். முத்தரசன் எழுதிய "விடிந்தால் திருமணம்"



இரா. முத்தரசன்

2-10-77 கம்பார் எஸ். வேலுமதி எழுதிய "தங்கைக்காக"

9-10-77 ஈப்போ குமாரி எஸ். எலிசபெத் எழுதிய "இப்படியும் ஓர் அம்மா"

திரை மலர்

புதிய திரைப்படக்காட்சிகள், நேயர்கள் பங்கு பெறும் பரிசு அங்கமான "திரைப்புதிர்" ஆகிய சுவையான அம்சங்களைக் கொண்ட "திரைமலர்" நிகழ்ச்சி சனிக்கிழமைதோறும் மாலே 6-31க்கு ஒலியேறுகிறது. தயாரிப்பு எல். ராயன்.

இஸ்லாமிய நாடகம்

(வியாழன்தோறும் இரவு 8.30க்கு ஒலியேறும்)

29-9-77 கிள்ளாங் எம். பாத்திமா எழுதிய "புது வாழ்வு"

கலையும் கவியும்

குட்டிக் கதைகள்



"நீ கலைஞனை விரும்புகிறாயா? கவிஞனை விரும்புகிறாயா?"

"கலைஞனைத்தான்!"

"ஏன்?"

"கலை என்பது கடல் போன்றது. குடித்தால் அது கலை; கொன்றால் அது கலை; ஓடினால் அது கலை; உட்கார்ந்தால் அது கலை; எதைச் செய்தாலும் கலைஞனென்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் கவிஞனாவது அப்படி இல்லையே!"



வளையம்

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான்: "தாயே, சாவு என்பது என்ன?"

தாய் சொன்னாள்: "வாழ்வின் முடிவு!"

மகன் கேட்டான்: "வாழ்வு என்பது என்ன?"

தாய் சொன்னாள்: "சாவின் தொடக்கம்."

அது போதுமே!




கனவில் ஒருநாள் நான் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கினேன்.

சிங்கம் என்னிடம் கேட்டது:

"அடேயப்பா! உனக்கு எப்படி இவ்வளவு வீரம் வந்தது?"

நான் சொன்னேன்: "நானும் ஆடு சாப்பிடுகிறவன்தானே!"



பொருளா தாரம்

"நான் என் மனைவியை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா?" என்றான் ஒருவன் தன் நண்பனிடம்.

"என் மனைவி என்னை எவ்வளவு நேசிக்கிறாள் தெரியுமா?" என்றான் நண்பன்.

"நாம் அவளை நேசிப்பது நல்லதா? அவள் நம்மை நேசிப்பது நல்லதா?" என்று கேட்டான் முதல்வன்.

"நாம் அவளை நேசிப்பது அவளிடமுள்ள அழகைப் பொறுத்தது. அவள் நம்மை நேசிப்பது நம்மிடமுள்ள பொருளைப் பொறுத்தது!" என்றான் நண்பன்.

"பொருளா, தாரம்?" என்று கேட்டான் முதல்வன்.

"அதுதான் பொருளாதாரம்!" என்றான் நண்பன்.

கவிஞர் கண்ணதாசன்

நாற்காலிக்காரர்

டாக்டர் இரா. தண்டாயுதம்

நாம் அன்றாடம் சந்திக்கின்ற மனிதர்களையோ, அவர்களைப் போன்றவர்களையோ பாத்திரங்களாக்கி, அவர்களுடைய பிரச்னைகளைக் கதைக் கருக்களாக்கி, அவற்றைக் காட்சிகளாக விரித்து, நடிப்பின் மூலமும் சொற்களாலாகிய உரையாடல்களின் மூலமும் அக்காட்சிகளை நிகழ்த்திக் காட்டுவது ஒருவகை நாடகம்; மிகப் பெரும்பாலோர் கண்டு சுவைக்கின்ற நாடக வகை இது. சில சமயங்களில் கருத்துக்களே உருவகங்களாகி நாடகமாக மலர்கின்ற நிலையும் உண்டு. இதுவும் இருவகைகளில் அமைய முடியும். முதல் வகையில் கருத்துக்கள், சுவையான கதை ஒன்றில் உருவகம் பெறும். சாதாரண சுவைஞர்க்கு நல்ல நாடகமாகவும், சிந்திக்கத் தெரிந்தவர்க்குக் கருத்து விளக்க நாடகமாகவும் இது அமையும். இவ்வாறன்றி, கருத்துக்களுக்கே முதன்மை தந்து, நடைமுறை உலகையும் அதன் அமைப்பையும் பற்றிக் கவலைப்படாமல், கருத்தை விளக்கும் வகையில் பெயருக்குச் சில காட்சிகளை அமைத்து எழுதப்படும் நாடகம் இரண்டாம் வகையைச் சேர்ந்தது. இவ்வகை நாடகங்களில் வரும் காட்சிகள், கருத்தை விளக்கும் கருவிகளே அல்லாமல் பிற நாடகங்களில் வரும் காட்சிகள் போல் உண்மையியலைச் (Realism) சார்ந்தவையாக இரா. இந்த அளவுகோலைக்கொண்டு பார்த்தால் பெரும்பாலும் அவை நாடகமாகவே கருதப்படமாட்டா. எனினும், நாடக வகைகளில் இவ்வாறு எழுதுவது அருமையானது. ஆழ்ந்து சிந்திக்கும் திறனும், கூர்ந்து பார்க்கும் பார்வையும், சொற்களை ஆளும் ஆற்றலும், பிறரினின்று தனித்து நிற்கும் தனித்துவமும் ஒருசேரக் கொண்டவர்களே இவ்வகை நாடகங்களை எழுத முடியும். எந்த மொழியிலும் இவ்வகை நாடகங்கள் அருகியே காணப்படும். எழுதுவதில் வேண்டிய அருமைப்பாடு, படிப்பதிலும் வேண்டும். பொறுமையும் நிதானமும் கொண்டு படித்தால், ஓர் உயர்ந்த கவிதையைப் படிக்கும்-அனுபவிக்கும்-இன்பம் கிடைக்கும். தமிழில் இவ்வாறு அமைந்த ஒரு நாடகத் தொகுதி "நாற்காலிக்காரர்." இத்தொகுதியில் உள்ள 'நாற்காலிக்காரர், அப்பாவும் பிள்ளையும், காலம் காலமாக' என்னும் மூன்று நாடகங்களையும் ந. முத்துசாமி எழுதியுள்ளார். எதையும் மற்றவரிலிருந்து தனித்துப் பார்க்கும் ஒருபார்வையும், மற்றவரிலிருந்து தனித்து உணர்த்தும் ஆற்றலும் இவரிடத்தில் நிறைந்திருப்பதை இந்நாடகங்கள் அழகாகக் காட்டுகின்றன.

நாடகம் என்ற சொல்லின் பொருளையும் அமைப்பையும் ந. முத்துசாமி நன்கு ஆராய்ந்து தெளிந்தவர் என்பதுடன் தம்முடைய நாடகங்கள் எப்படிப்பட்டவை என்பதையும் அவர் நன்கறிந்தவர். மற்ற நாடகங்களிலிருந்து தம் நாடகங்கள் தனித்து நிற்கவேண்டும் என்று திட்டமிட்டே இந்நாடகங்களை அவர் எழுதியுள்ளார். "நாடகம் என்பது நிகழ்த்திக்காட்டுவது. எதை, ஏன் என்ற கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்லப்படுகிறது என்பதைப் பொறுத்து நாடகம் பலவிதமாகிவிடுகிறது. எழுத்துக் கலைஞனுக்கு நாடகம் என்பது சொல்லை நிகழ்த்திக்காட்டுவது. இது ஒரு கதையை மேடையில் நடித்துக் காட்டுவது என்பதிலிருந்து வேறுபட்டது ... எழுத்துக் கலைஞனாக இருப்பவன் சொல்லைக் கொண்டு நாடகத்தை அர்த்தப்படுத்தப் பார்க்கிறான். சொல் ஒரு வெளியீட்டுச் சாதனமாக இங்கு இருக்கிறது; அவ்வளவுதான். இந்த நாடகத்தில் படைப்பாளியாக இருப்பவன் அடிப்படையில் எழுத்துக் கலைஞனாதலால் நாடகம் சொல்லாலாகி விடுகிறது... நான் சொல்லைச்சார்ந்திருக்கிறவன். எனக்கு எழுதிக் காட்டத்தான் தெரிகிறது. எனவே இந்த எல்லைக்குள்தான் நான் செயல்பட்டாகவேண்டியிருக்கிறது. இந்நிலையில் எழுதி என் மனதில் தோன்றுகின்றவற்றை அபிநயித்துக் காட்டி வெளிப்படுத்தப் பார்க்கிற சிரமங்களே என் சொற்கள்" என்று அவர் தம் நாடகங்களைப் பற்றிக் கூறுகின்ற சொற்கள், இந்நாடகங்களைப் புரிந்துகொள்ளத் துணை செய்வதுடன், நாடகாசிரியரின் சோதனைத் திறனையும் உணர்த்துகின்றன.

இத்தொகுப்பில் காணும் மூன்று நாடகங்களில் 'நாற்காலிக்காரர், காலம் காலமாக' ஆகிய இரண்டும் கருத்துக்களை நாடகமாக்கும் முயற்சிகள். "அப்பாவும் பிள்ளையும்" நினைப்பை நாடகமாக்கிக் காட்டுகின்ற முயற்சி. இவ்வகையில் கருத்துக்களையும் நினைப்பையும் நாடக வடிவில் தரும் முயற்சிகளாகவே இவை காணப்படுகின்றன. எந்தக் கலைப் படைப்பிற்கும் அடிப்படைத் தேவைகளான உருவம், உள்ளடக்கம் (Form and Content) ஆகிய இரண்டில், இந்நாடகங்களில் உருவம் மிகச் சிறந்து விளங்குகிறது.

முதல் நாடகமான "நாற்காலிக்காரர்" ஓர் அரசியல் நாடகம். அரசியல், இன்று ஒரு விளையாட்டுப் போலாகி, தீர்வுகளுக்குச் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் ஒரு முயற்சியாக மாறிவருவதை இந்நாடகத்தில் கேலி செய்திருக்கிறார் நாடகாசிரியர். இந்நாடகத்தில் இருபது பாத்திரங்கள் பங்கேற்கின்றனர். காட்சி தொடங்கும்போது மேடையில் நாற்காலியில் ஒருவர் அமர்ந்துள்ளார். ஒரு பக்கத்திலிருந்து ஒன்பதுபேர் அரங்கத்திற்கு வருகின்றனர். அவர்களில் ஐந்துபேர் சீட்டாட, நால்வர் வேடிக்கை பார்க்கின்றனர். சிறிது நேரத்திற்குப்பின், மற்றொரு புறத்திருந்து இன்னும் ஒன்பது பேர் வருகின்றனர். வந்த வேகத்தோடு கோலி விளையாடத் தொடங்குகின்றனர். பின்னர் வேறொருவன் வந்து வேடிக்கை பார்க்கத் தொடங்குகிறான். சிறிது நேரத்தில் ஆட்டம் சலிப்பைத் தந்துவிட, வேடிக்கை பார்ப்பவன் ஒரு புதிய ஆட்டம் சொல்லித் தருகிறான். இரண்டு ஆட்டக்காரர்களும் இரண்டு குழுக்களாகின்றனர். "வாழ்க", "ஒழிக" எனக் கோஷம் போடுவதுதான் புதிய ஆட்டம். தொண்டை வரள்கிறது. பகைமை வளர்கிறது. இரண்டு பக்கத்தாரும் இரண்டு கூஜாக்களில் தண்ணீர் கொண்டு வந்து குடிக்கின்றனர். இந்த நேரத்தில் வெற்றி தோல்வி இல்லாமல் என்ன ஆட்டம் என்ற பேச்சு எழுகிறது. வேடிக்கை பார்ப்பவனே யோசனை ஒன்று சொல்கிறான். எல்லோரும் ஆளுக்கொரு கூழாங்கல்லாகக் கூஜாக்களில் போட, எதில் முதலில் தண்ணீர் மேலே வருகிறதோ அந்தக் குழுவினரே வென்றதாக முடிவு செய்யப்படுகிறது. பிரச்சாரம் தொடங்குகிறது. தங்கள் கூஜாவில் உள்ளதைப் பால் என்றும், தேன் என்றும், அமுதம் என்றும் கூறிக்கொண்டு, அடுத்த கூஜாவில் உள்ளதை விஷம் என்றும், கஞ்சி என்றும், ஆலகாலம் என்றும் பழிக்கின்றனர். திக்கெட்டும் பிரச்சாரம் நடக்கிறது. அனைவரும் கற்களைப் போட, இரு கூஜாக்களிலும் தண்ணீரின் அளவு சமமாக ஆகிறது. நாற்காலிக்காரரை வற்புறுத்தி ஒரு கல்லைப் போடச் செய்கின்றனர். அவர் கோலிக் குண்டு குழுவினரின் கூஜாவில் கல்லைப்போட, அவர்கள் வெல்கின்றனர். கலகம் மூள்கிறது. நாற்காலிக்காரரை எதிர்க் குழுவினர் பழிவாங்க முனைய, நாடகம் முடிகிறது. அரசியல், சிலருடைய விளையாட்டு என்றும் இந்நாடகத்தில் நளினமாகக் காட்டப்பட்டுள்ளது.

இரண்டாம் நாடகமான "அப்பாவும் பிள்ளையும்" நாடகாசிரியரின் சொந்த வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. தம்

தங்கையைப் பற்றிய சொந்த நினைப்புக்களையே அவர் இங்கு நாடகமாக்கி உள்ளார். "கிராமத்தோடு எனக்குள்ள உறவு, அன்பும் வெறுப்பும் கலந்தது. மனிதனாக வளர்ந்து கிராமத்தைவிட்டு நகரத்தில் வேலைக்கு வந்த பிறகும் அக்கிராமத்தில் முளைத்த ஒரு தாவரமாகவே என்னை உணர்கிறேன்... என்னுடைய ஏழாவது வயதில் என்னுடைய தந்தை இரம் வயதில் இறந்துவிட்டார்...ஏழுவயதிலிருந்து தந்தை என்னுடைய மனதில் விஸ்வரூபம் கொள்ளும்படி கிராமம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செய்து கொண்டிருந்தது. எனக்குத் தோன்றுகிறது, இதனால் புஞ்சை என்னை ஏழு வயது மகனாகவே தங்க வைத்துவிட்டிருக்கிறது என்று..." என்று தம் கிராம நினைவுகளை அவர் கூறியுள்ளார். நினைப்பு இவ்வளவு தெளிவாக இருந்தும், இதற்கு நேர் எதிரிடையான ஒரு சிக்கலான நாடக அமைப்பை அவர் இந்நாடகத்தில் பயன்படுத்தியுள்ளார். மனதில் பல்வேறாகத் தோன்றும் எண்ணங்களையே உருவங்களாக்கி, நினைவுகளைக் காட்சிகளாக்கி உரையாட வைத்து, வேண்டியபோது உரிய பாத்திரங்களை மேடையில் வரவழைத்தோ அல்லது குரல்கள் மூலம் உணர்த்தியோ இந்நாடகத்தை அவர் அமைத்துள்ளார். நாடக முழுவதிலும் இறுதியிலும் மேடையில் இருப்பதென்னவோ ஒரு பாத்திரம் தான். அதனைப் படிப்படியாக விரிவாக்கிக் காட்டி முடிப்பதிலேயே ஆசிரியரின் திறமை வெளிப்படுகிறது.

மூன்றும் நாடகமாகிய "காலம் காலமாக" ஒரு தலைமுறையை உள்ளடக்கமாகக் கொண்ட நாடகம். ஒரு தலைமுறையினர் அடுத்த தலைமுறையினர் மாறுபடுவதாகக் கூறும் குற்றச்சாட்டை நையாண்டி செய்யும் நாடகம் இது. இரண்டு முந்திய தலைமுறையினர், இரண்டு இளைய தலைமுறையினர், இரண்டு நோயாளிகள் ஆகியோரை நாடக மாந்தர்களாகக் கொண்டு இந்நாடகம் அமைந்துள்ளது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டு, நோயாளியை இறக்க வைத்து விடுவதாக இந்நாடகத்தை அவர் முடிக்கிறார்.

இம்மூன்று நாடகங்களுமே ஒவ்வொரு காட்சியமைப்பையே கொண்டவை என்பது இவற்றின் தனிச்சிறப்பு. நாடகாசிரியர் மனத்தில் நினைத்த கருத்துக்கள் அப்படியே வெளிப்பட்டுள்ளனவா என்பது சில இடங்களில் கேள்விக்குறியாகவே உள்ளது. குறிப்பாக முதல் நாடகத்தைக் கூறலாம். நாடகாசிரியரும் இதனை மறுக்கவில்லை. "என் மனத்திற்குத் தெரிகிறது. என்னுடைய கருத்து முழு அளவில் எழுதிக்காட்டப்படவில்லை என்று. முயன்று பார்த்த தோல்விகளே என் நாடகங்கள்" என்று அவர் குறிப்பிடுகிறார். அவரளவில் அத் தோல்வியாகக் கருதினாலும், தமிழ் நாடக உலகின் தனித்த வெற்றியாகவே இந்நாடகத் தொகுதி அமைந்துள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

'ஏரியர்ஸ்' சிரிப்பு

சரோ

வெளி விவகாரம்



தொழிற்சங்கத் தலைவர்:- "சம்பளப் பாக்கியை மொத்தமாகத் தராதது அநீதி!"

உள்விவகாரம்



தொ. ச. தலைவரின் மனைவி: ஒரு தவணை ஏரியர்சிலும் எனக்கு நகை வாங்கித் தராதது அக்கிரமம்!"




"ஏரியஸ் ஞாபகமா என்ன வாங்கினீங்க?"

"மேற்கொண்டு கடன் வாங்கினேன்!"



"இப்பத்தான் கடனை அடைச்ச. அதுக்குள்ளாற கடன் கேக்கிறியே?

"அடுத்த ஏரியஸிலே தந்துடறேனே!"




"என், பாக்கெட் இவ்வளவு பெரிசா இருக்கு?"

"ஏரியர்ஸ் வாங்குறதுக்குன்னே தைச்சேன்!"



"ஏரியர்ஸுக்குச் சேலை வாங்கித் தர்றேனீங்களே!"

"ஏரியர்ஸுக்கு மேலே சேலை விலை ஏறிப்போச்சே!"



"கோபாலன் அப்பாவாயிட்டான் தெரியுமா?"

"ஆமா! போன ஏரியர்ஸுக்குக் கலியாணம் செஞ்சான். இந்த ஏரியர்ஸுக்கு அப்பாவாயிட்டான்?"

வேனல்

திருமதி பாக்கியம் முத்து

"ஒண்ணுமே சொல்லாம எல்லாருமா எழுந்திருச்சிட்டீங்களே ஐயா!" மனத்தின் நடுக்கத்தை மறைக்க முயல்கிறேன். ஆனால், குரல் காட்டிக்கொடுத்து விடுமோ?

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டே என்னைத் தீர்க்கமாகப் பார்க்கிறார், பிள்ளையின் தந்தை. அவர் முகத்தை ஏறெடுத்து நோக்கத் தைரியமில்லாமல் என் தலை தானாகவே கவிழ்ந்துபோகிறது.

"ஆமாய்யா...! உம்ம யோக்கிதைக்கு உம்ம குடும்பத்திலே பெண்ணெடுத்தா...! சரி, சரி... எதுக்கு வீண் பேச்சு? ஏன் நின்னுகிட்டு இருக்கீங்க...? ம்... கௌம்புங்க!"- அவர் குரல் தேய்ந்து மறைகிறது.

அந்தத் தூணைப் பற்றிக்கொண்டு எவ்வளவு நேரமாக நானும் இன்னொரு தூணாக மாறிப் போயிருந்தேன் என்பது புரியவில்லை.

"அப்பா !" இந்தப் பிரபஞ்சத்தில் தன்னந்தனியாகிவிட்ட ஒரு ஜீவனின் தீனக்குரலோ அது. ஓ, என் மகள் பூர்ணிமாவின் குரலல்லவா அது? மீண்டும் என் உணர்வுகளில் தீப்பற்றிக்கொண்டு விடுகிறது.

"என்னம்மா?"-என் குரலில் ஒளித்த பரிதாபத்தை என்னாலேயே சகிக்க முடியவில்லை.

"எவ்வளவு நேரமா இப்படியே நின்னுகிட்டு இருப்பீங்க? வாங்கப்பா...சாப்பிடலாம்!"

"இல்லேம்மா...! எனக்குப் பசிக்கல. நீ போயி சாப்டு!" என்றேன் என் உணர்வுகளை உள்ளடக்கிக் கொண்டு.

"என்னைக்குமே இல்லாம இன்னைக்கு எனக்கு ரொம்பப் பசிக்குதுப்பா !"-அந்த வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்பதை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லையென்றாலும் இனம் புரியாத ஏதோ ஒன்று என் இதயத்தை அதிரவைக்கிறது.

"அப்பா! இனிமேல் யாரையும் இந்த வீட்டுக்குள்ள நீங்க கூட்டிக்கிட்டு வரவேணும். அப்படி யாரையும் நீங்க அழைச்சிக்கிட்டு வந்தாலும் அவங்க முன்னாலே வந்து நிக்க நான் நிச்சயமா சம்மதிக்கமாட்டேம்பா. இந்த வீட்டுல இனிமே அந்த மாதிரி ஒரு நெல நேரவே வேணாம்பா! கால்ல இருந்து தலை வரைக்கும் அவங்க பாக்கற பார்வையில, தாயைப்போலத் தான் இவளும் இருப்பாளோன்னு நெனச்சி ஒரு புழுவ பார்க்கிறது போல! என்னால அத சகிச்சிக்கவே முடியலப்பா...!"- அவள் உடல்தான் என்னமாய் அதிர்ந்து குலுங்குகிறது. உடலே இப்படி என்றால் அவள் இதயம்...? என் மகளே . பூர்ணிமா...உனக்கா ...உனக்கா இந்த...! என் உள்ளம் பதறித் துடிக்கிறது. ஆனால் உடல் கற்சிலைபோலவே அப்படியே அசைவற்று நிற்கிறது.

"அப்பா!"-அவள் குரல் நிதானமாய் ஒலிக்கிறது. எப்படி இவ்வளவு விரைவில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள அவளால் முடிந்தது. என் மகளல்லவா? இந்த நிலையிலும் பெருமைபட்டுக் கொள்ள என் மனம் தவறவில்லை.

"கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லங்கற முடிவுக்கு நான் வந்திட்டேம்பா! எந்த வேதனைய மறக்கறதுக்கு இத்தன வருஷமா நீங்க உங்களையே வதைப்படுத்திக்கிட்டீங்களோ, அந்த நினைவ மட்டுமல்ல, அதையே ஒரு கேவலச் சின்னமாக்கி இந்தக்குடும்பத்து மேலஆழப் பதிச்சிட்டுப் போயிட்டாங்க. அந்த சந்தர்ப்பத்த இனிமே நாம யாருக்கும் கொடுக்க வேணாம். எனக்கொரு வேலைய தேடிக்கிட்டு இப்படியே காலத்த ஓட்டிட என்னால முடியும்பா. தம்பிங்களப் பத்திக் கவலையில்ல. அவனுங்க ஆம்பளைங்க!"

என்ன பேசுவது? சிதைந்து போன அந்தப் பிஞ்சு இதயத்திற்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று புரியாமல் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், என் மௌனம் என் மகளுக்கு என்னமாய் அர்த்தப்பட்டதோ?

"அப்பா! எம்பா பேசாம இருக்கிறீங்க? இப்படியே வேதனைப்பட்டுக்கிட்டு இருந்தா இதுக்கு ஒரு முடிவே இருக்காது. உங்க மனைவியால நீங்க அனுபவிச்சிக்கிட்டு இருக்கிற துன்பம் என் திருமணத்தால அதிகமாகும்னு, அப்படி ஒரு திருமணம் எனக்குத் தேவையே இல்ல. மனைவியும் பிள்ளைகளுமே ஒருத்தரோட நிம்மதிக்கு எமனா வர்ற துர்பாக்கிய நெல எவ்வளவு கொடுமையான துன்னு என்னால கொஞ்சமாவது புரிஞ்சிக்க முடியுது. உங்க மனைவி உங்களுக்குச் செஞ்ச துரோகத்தினால கொஞ்சங் கொஞ்சமா நீங்க செத்துகிட்டு வர்ற நிலைக்கு என்னால எதுவும் செய்ய முடியலன்னாலும், என் பங்குக்கு எந்தத் துன்பமும் உங்களுக்கு நேர்ரத என்னால அனுமதிக்க முடியாது. என்னோட இந்த முடிவுக்காக என்னை மன்னிச்சிடுங்கப்பா!"- அவள் குரல் ஆயாசத்தோடு ஒலிக்கிறது.

"என்னம்மா சின்னப்பிள்ளை மாதிரி அர்த்தமில்லாம ஏதேதோ பேசற? உன்னால எனக்கு எந்தத் துனபமும் நேரலேயே. ஒருத்தர் செய்யற தவறுக்காக ஒரு குடும்பத்தோட ஒழுக்கத்தையே சந்தேகிக்கிற சிலருக்காக நாம வருத்தப்படக் கூடாதும்மா. இந்த நியாயத்த உணர்ந்தவங்க நிச்சயமா இருக்கத்தான் செய்வாங்க. அப்படிப்பட்டவங்க நம்மல தேடி வரத்தான் செய்வாங்க. அதுவரைக்கும் நாம காத்திருப்போம். அத விட்டுட்டு திருமணமே வேண்டான்னு முடிவெடுக்கக் கூடாதும்மா. என் கடமைய நான் செய்யவேணாமா? அதுக்காக எவ்வளவு அவமானம் நேர்ந்தாலும் சரிதான். இனிமே புதுசா எதுவும் எம்மனச வேதனப்பட வைக்கிறதுக்கில்ல!"- பூர்ணிமா மேலும் பேச இடங்கொடுக்காமல் சாப்பிட எழுந்து விடுகிறேன்.


அவளுக்குப் பிறந்தவள்தான் அந்தப் பூர்ணிமா என்றாலும் என்னை எவ்வளவு தூரம் புரிந்துகொண்டிருக்கிறாள். என்னோடு தன் வாழ்க்கையை ஒப்பந்தப்படுத்திக் கொண்டவள், எப்படி என்னைப் புரிந்து கொள்ளாமல், என்னிடம் என்ன தவற்றைக் கண்டு அவள் வேறொருவனை நாடினாள் என்பது இன்னமும் என்னால் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

என் வாழ்க்கையில் நடந்து போன அந்த விபத்து இன்னமும் அன்று நடந்தது போலவே புதிய காயத்திலிருந்து வடியும் புது இரத்தமாகவே கொட்டிக்கொண்டிருக்கிறது.

எங்கள் ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு பாராட்டி மகிழ்ந்தவர்களை விட, பொறாமை கொண்டவர்களே அதிகம் என்பதை இருவருமே அறிந்திருந்தோம். புது வாழ்க்கையின் ஆரம்பத்தில் மட்டுமல்ல; எங்களிடையே தொடர்ந்த ஐந்தாறு ஆண்டு காலத்தாம்பத்திய வாழ்க்கை முழுவதிலுமே அவளிடம் எப்படியெல்லாம் பிரேமை கொண்டிருந்தேன்! பூஜைக்குரிய மலராக எத்தனைப் புனிதத்தோடும், பயபக்தியோடும் அவளை நான் ஆராதனை செய்து வந்திருக்கிறேன். அன்றலர்ந்த ரோஜாவைப்போல் புத்தெழில் கொண்ட அவளை எத்தகைய உன்னத ரசனையோடும், அன்போடும் போற்றி இருக்கிறேன்! புனித மலராகப் பக்தனின் மென்மையான கரங்களுக்குள் இருக்க விரும்பாமல் சேற்றிலேயே விழுந்து, எருமையின் காலடியில் நசுங்கிப் போக அந்த மலருக்கு அப்படியொரு விபரீத ஆசை எப்படி எழுந்தது? என்னால் அதை விளங்கிக் கொள்ள முடியவில்லையென்றாலும் அவள் வாழ்ந்துகொண்டிருந்த வாழ்க்கையைக் கேள்விப்பட்ட போது என்னுள் நான் எப்படியெல்லாம் துடித்துப்போனேன் என்பது எனக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

அடியும், உதையும், பட்டினியும், பசியுமாக அவள் வதைபடுவதை அறியவந்த போதெல்லாம் என் உணர்வுகள் பொங்கியெழுந்து என் குருதியைக் கொதிக்கவைத்தன. "வேனலை நீர் என்று மயங்கிய

தன் பலனை அனுபவிக்கிறாள்" என எனக்கு நெருங்கியவர்கள் எக்களிப்புக் கொண்டதைப்போல என்னால் அதை அவ்வளவு எளிதாகச் சீரணித்துக்கொள்ள முடியவில்லை. தீர்க்கமான சிந்தனைக்குப் பின் நான் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். அவளின் செயலால் விளைந்த அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, ஊரில் எங்கள் குடும்பத்தைப் பற்றியும் அவளுக்கும் எனக்கும் வழங்கப் பெற்ற கௌரவப் பெயர்களையும் நான் அறிந்திருந்தேன். என்றாலும் என்னுடைய இந்த முடிவு தளரவேயில்லை. அது மேன்மேலும் வலுப் பெற்று விளங்கியது. அதனால் எனக்கு இன்னும் என்னென்ன பெயர்களெல்லாம், வசவுகளெல்





லாம் கிடைக்கும் என்பது எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. அதைப்பற்றியெல்லாம் நான் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளவோ கவலைப்படவோ இல்லை.

எனக்கும் அவளுக்கும் இருந்த உறவையும் அந்த உறவுகளுக்கிடையே ஊடுருவிக்கிடந்த சத்தியமான அன்பையும் பிரேமையையும் நான் இன்னமும் மதிக்கிறேன். என் உயிருள்ள வரையிலும் அதனைக் காப்பேன் என்பதிலும் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையிருந்தது. யாருக்காகவெல்லாமோ அதனை அழித்துக்கொள்ளவோ, மாற்றிக் கொள்ளவோ என்னால் முடியவில்லை. அவளால் அது முடிந்திருக்கிறது. ஒருக்கால் அது அவளின் மனதில் எங்கோ எழுந்த பல வீனத்தால் என்றால், அந்தப் பலவீனத்திற்கும் நான்தானே காரணகர்த்தன்! என்னால் நேர்ந்து போன ஒரு தவற்றுக்கு நானே பொறுப்பு என்றால், அதனைத் திருத்த வேண்டிய கடமை மட்டுமல்ல அத்தவற்றுக்குரியதண்டனையைப் பெறுவதும் என்னைச் சார்ந்ததுதான் என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புகிறேன்.

அதற்காக யார் என்ன சொன்னால்தான் என்ன? எப்படி வேண்டுமானாலும் பழித்துவிட்டுப் போகட்டும் என்ற திடச்சித்தம் என்னுள் வலுவாக வேர் கொண்டது. எவ்வளவு தீமைகள் புரிந்திருந்தாலும், அடியோடு கெட்டழிந்து போயிருந்தாலும் ஒரு தாய், தன் பிள்ளை தன் கண் முன்னாலேயே வதைபடுவதைப் பொறுத்துக் கொண்டிருப்பாளா? அவள் எனக்கு மனைவியாக மட்டுமல்ல, தாயாகவும் பரிவு காட்டியிருக்கிறாளே. என்னை அவளின் தாயாகக் கருதி அவள் தவற்றை நான் ஏன் மன்னிக்கக் கூடாது?

இறுதியாக ஒரு நாள் அவளைத் தேடிப்போயே விடுகிறேன். அவள் தான் எப்படி வதங்கிப் போய்க் கிடந்தாள்! என்னுடைய "அவள்" தானா இவள்? ரோஜா இதழ்கள் அங்கங்கே சிதைக்கப்பட்டதைப்போல அவள் முகமெங்கும் காயங்களின் கீறல்கள் கோரமாகக் காட்சியளித்தன. என் நரம்புகளில் பாய்ந்தோடிய குருதியோட்டத்தில் ஊசிகளைக் கொட்டியது யார்? அவை உடலெங்கும் ஓடி அங்கங்கே வலியை உண்டாக்கிவிட்டு இறுதியாக அத்தனையும் ஒரு சேர இதயமெங்கும் பாய்ந்து குத்திட்டு நிற்கின்றனவே! எவ்வளவு கொடூரமான உயிரின் வதை என்னுள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது!

என் வரவு அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டதை நான் புரிந்து கொள்ளுகிறேன். என்னை ஏறெடுத்து நோக்கவோ, என் முன் நின்று பேசவோ அவள் மனம் இடங்கொடுக்கவில்லையோ?

"இனிமேல உங்க கூட வந்து வாழ நான் தகுதியில்லாதவ. நான் செத்துப் போயிட்டதா நெனச்சி என்ன மறந்துடுங்க...! என்னை மன்னிச்சுடுங்க..! பிணத்தோட கழுத்தில விழுந்த மாலைய கோயிலுக்குள்ள கொண்டு போக முடியுமா? அது அந்தப் பிணத்தோடயே சுடுகாட்டுக்குத்தானே போகணும்! ஏன், உங்களையும் களங்கப்படுத்திக்காதீங்க. தயவுசெஞ்சு இந்த இடத்த விட்டுப்போயிடுங்க. இனி எப்பவுமே இங்கே வராதீங்க" உள்ளிருந்து எழுந்த அவள் அழுகையின் அவலம் என்னை மேலும் அங்கே விடவில்லை.

அதன் பிறகுஎன்னளவில் அவளை இறந்து போனவளாகவே கருதி மறக்கத் தொடங்கினேன். அது

இயலாத ஒன்று என்பது எனக்கு நன்றாகவே புரிந்திருந்தது. என்னுள்ளே அவள் எப்போதும் போலவே வாழ்ந்துகொண்டுதான் இருந்தாள். எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கும் அவனைப் பற்றி எப்போதாவது என் காதுகளுக்கு ஏதாவது செய்தி வரும்போது என் காதுகள் மட்டுமே அந்தச் செய்தியை வாங்கிக் கொள்ளும். என் ஆத்மாவுக்குள் ஒன்றிக் கலந்து போன அவளை என் மனக்கதவுகளுக்குள் பாதுகாப்பாகப் பூட்டி வைத்துப் பிரேமையோடு காத்துவருகிறேன்.

எனக்கு இன்னொரு மறுமணம் தேவைப்படவில்லை. என் பிள்ளைகளைக் காரணம் காட்டி என் உறவுகள் பின்னிய வலையிலும் நான் ஆட்படவில்லை. அவள் என்னை விட்டு எங்கோ போய்விட்டால் தான் என்ன? நான் அவளோடுதானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆனால், அது மற்றவர்களுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை தான். அவள் நினைவாக, அவளின் சின்னமாக அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதற்கு நான் சிரமப்படவேயில்லை. ஆனால், என்னையும், குழந்தைகளையும் விட்டுப் பிரிந்து போகுமளவுக்கு அவள் மனம் சலனப்பட்டுப் போனது எதனால் என்பது என் மனதுக்கு ஒரு பெரும் உறுத்தலாகவே இருந்து வந்திருக்கிறது. என் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கியது ஒன்றும் பெரிய காரியமாக எனக்குத் தோன்றவில்லை. மணப்பருவமெய்திய என் மகளுக்குத் திருமணம் முடிக்க முயற்சி மேற்கொண்ட போதே என்றோ நிகழ்ந்து போன அந்தத் தவற்றுக்குரிய பாதிப்பு நேர்ந்தது.

"பெண்ணுக்குத் தாயார் இல்லிங்களா? பாவம் பிள்ளைகளுக்கு நல்லது நடக்கிறப்ப, இருந்து பார்க்கக் கொடுத்து வைக்காம பூவும் பொட்டுமா போயிட்டாங்க!"

எது நடக்கக் கூடாதுன்னு என்னுள்ளே நான் தவித்துக் கொண்டிருந்தேனோ அது நடந்து விடுமோ என்கின்ற ஒரு திகில் என் நெஞ்சைப் பிசைகிறது. அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்து விடுகிறேன். நான் மௌனமாக இருந்து விடுவதால் என்னைச் சுற்றியுள்ளவர்களும் அப்படியே இருந்துவிட வேண்டுமென்று கட்டாயமா என்ன?

"நல்லா சொன்னீங்க. உயிரோட இருக்கிற மகராசிய செத்துப் போயிட்டதாகவா நெனச்சிக்கிட்டீங்க?" உள்ளிருந்து என் உறவுகளில் ஒன்று குரல் கொடுக்கிறது. திடுக்கிட்டுப் போன பிள்ளையின் தகப்பனார் வருத்தப்பட்டுக் கொள்கிறார். "தவறா நெனைச்சு சொல்லிட்டேன். மன்னிச்சுக்குங்க. மாலையோட மாட்டியிருக்கிற அந்தப் படத்த பாத்துதான் அப்படி நெனச்சுட்டேன்!" என்கிறார் படபடப்போடு.


என் தவறு இப்போதுதான் எனக்குப் புரிகிறது. என்னவில் அவள் இறந்து போய்விட்டாள் என்பதற்காக ஊராருக்கும் அப்படியொரு பாவனையை நான் ஏற்படுத்தியிருக்க வேண்டியதில்லை தான்.

பிள்ளை வீட்டாருக்குத் தொடர்ந்து உள்ளிருந்து விளக்கம் கிடைத்தது. "புருஷனையும், பிள்ளைகளையும் விட்டு ஓடிப்போயி ரொம்ப காலமாவுதுங்க!"

"அப்படின்னா?" பிள்ளையின் தந்தை எதையோ ஊகிக்கிறார் என்பதை அவர் முகம் புலப்படுத்தியது. அதற்குக் கூட அவருக்குச் சிரமம் கொடுக்கக்கூடாதென்று ஒரு பரந்த மனம். "இவ்வளவு அழகான பிள்ளைகளையும், புருஷனையும் விட்டுட்டு எவனையோ இழுத்துக்கிட்டு ஓடிட்டாங்க அந்தப் பாவி! அவளுக்கு அப்படி என்னதான் மருந்து மாயம் பண்ணினாேனா தெரியலீங்க. பிஞ்சு வயசா இருந்த பெத்த பிள்ளைங்கள கூடவா மறந்துட்டு ஒரு பொம்பளையால போயிட முடியும்? இந்த மனுசன் ஒரே பிடிவாதமா இருந்து வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்காம காலத்தை ஓட்டிட்டாருங்க பிள்ளைங்களையும் ரொம்ப யோக்கியமா வளர்த்திருக்காரு. இந்த மாதிரி ஒரு உத்தமர இந்தக் காலத்தில பார்க்க முடியுங்களா?"

ஒத்தாசை செய்வதாக வலிய வந்த உறவுகள். என் குடும்பத்திற்குச் செய்கின்ற உதவி இது. அவளைத் தாக்கவும் என்னை உயர்த்திக் காட்டவும் நினைக்கின்ற அந்த மனங்களுக்கு, என் குடும்பத்திற்கு அதனால் நிகழப் போகின்ற இழப்பு புரியவில்லையோ?

பிள்ளை வீட்டாரின் முகங்களைக் கூர்ந்து நோக்கிய எனக்கு எதுவோ புரிய ஆரம்பிக்கிறது. அதை உதறிவிட்டு ஆவலோடு அவர்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். ஆனாலும் என்ன? நான் மட்டும் ஒழுக்கமுள்ளவனாகவோ, ஏகபத்தினி விரதனாகவோ இருந்து பயனில்லையோ? என் குடும்ப மானத்தைக் காக்கவோ, என் பிள்ளைகளின் வாழ்வுக்கு உத்தரவாதமாகவோ அது அமைய முடியாதோ?



நிலைத்திடுக!

கரு. தாண்டவன், காப்பார்

காற்றுள்ள போதினிலே தூற்றிக் கொள்வாய்;
காலத்தின் வழிசென்று வெற்றி கொள்வாய்!
மாற்றாரின் தோட்டத்து மல்லி கைக்கும்
மணமுண்டு என்பதனை அறிந்து கொள்வாய்!
தேற்றாத உள்ளத்தில் தீமை தானே
தினந்தோறும் மூண்டெழுமென் றறிந்து கொள்வாய்!
நேற்றோடு நம்கடமை முடிந்த தென்று
நினைத்தால்நீ என்றென்றும் துன்பங் கொள்வாய்!

சமுதாய வளர்ச்சிக்கு நீயும் உன்றன்
சமயநெறி மாறாத தொண்டு செய்வாய்!
குமுகாய மேல்பூச்சின் கவர்ச்சி தன்னின்
குணங்கண்டு இனங்காணின் குழப்பங் கொள்வாய்!
சமுதாய மென்னும்நாற் றங்கால் தன்னில்
சமயமெனும் வரப்பின்றேல் சாய்ந்தே போகும்!
குமுகாய வயல்தன்னில் அறிவு நீரைக்
கூடும்வரை நீயூற்றி வளர்த்துச் செல்வாய்!

அறிவென்னும் நீரூற்றாய் அமைவாய்; என்றும்
அன்னைதமிழ்ப் பணிசெய்தே ஆக்கங் கொள்வாய்!
பரிவென்ற சொற்கொண்டு பாரோ ருன்னைப்
பார்ப்பதுவும் இழிவென்றே பகர்ந்து செல்வாய்!
உரிமைக்குச் சங்கெடுத்தே ஊதிச் சென்று
உண்மைதனை நிலைநாட்ட ஊக்கங் கொள்வாய்!
நெறியற்ற வாழ்வென்றும் நிலையா தென்று
நெஞ்சுயர்த்தி நீயுரைத்து நிலைப்பாய் நன்றே!


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
12
சேரன் கனகவிசய மன்னர்களை வென்று அவர்களைக் கல்சுமக்க வைக்கிறான்!
கங்கைப் பெரியாற்றில் கல்லுக்கு நீராட்டு விழா செய்யப்படுகிறது
அங்கு வந்த மாடலன், சேரனிடம் கோவலன் கண்ணகி பெற்றோரின் நிலையைக் கூறுகிறான்!
கோவலனைப் பிரிந்ததும் அவன் தந்தை மாசாத்துவான் துறவியானான்; தாய் துயரம் தாங்காது இறந்தாள்... கண்ணகியின் தந்தை மாநாய்கனும் துறவியானான். அவன் மனைவி....
கவலையில் இறந்தாள். துறவுக் கோலம் பூண்ட மாதவி, கோவலனுக்குப் பிறந்த தன் மகள் மணிமேகலையையும் துறவியாக்கி விட்டாள்
மாடலனே, நீ கூறிய கதை என் நெஞ்சைப் பிழிகிறது
கண்ணகி கோயில் எழுப்பப் படுகிறது!
சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மன்னர்கள், இலங்கை மன்னன் கயவாகு முதலியோரும், மக்களும் கண்ணகி கோயிலில் வலம் வந்தனர். அன்று முதல் கண்ணகி பத்தினிக் கடவுள் என வழிபாடு செய்யப்பட்டாள்
முற்றும்.

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள் அறப்பாலில் அருளுடைமை என்னும் அதிகாரத்தின் கீழ் இடம்பெற்றிருக்கிற 250-வது குறளாகும்.

'வலியார்முன் தன்னை
நினைக்க, தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து'
(250)

இக்குறளுக்கு டாக்டர் மு. வ. தந்திருக்கும் தெளிவுரை வருமாறு: (அருள் இல்லாதவன்) தன்னைவிட மெலிந்தவர்மேல் துன்புறுத்தச் செல்லும்போது, தன்னைவிட வலியவரின் முன், தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்க வேண்டும்.

அந்தப் பகுதிக்கு அமெரிக்காவின் போர்க்கப்பலோ, அல்லது ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பலோ செல்வதை நாம் காணமுடிகிறது. அந்தக் குறிப்பிட்ட ஒரு நாட்டை மிரட்டுவதற்காகவே, அச்சுறுத்திப் பணியவைப்பதற்காகவே இத்தகைய சாகசங்களை வல்லரசுகள் அவ்வப்போது கையாண்டு வருகின்றன. ஒரு நாட்டுக்கு மற்றொரு நாடு தெரிவிக்கின்ற கண்டனங்கள், ஆட்சேபங்கள், ஐ. நா. சபையில் போடுகின்ற கண்டனத் தீர்மானங்கள் - இவற்றையெல்லாம்விட ஒரு போர்க்கப்பலின் பிரசன்னம் சாதிக்கக்கூடிய மாற்றம் மிக மிக அதிகமாகும். இன்னும் சொல்லப்போனால் நிச்சயமான பலனும் அதனால் கிட்டும்.

ஆகவே இன்றைய உலகத்தின் வல்லரசுகளிடையே மட்டுமின்றித் தனி நபர்கள் மத்தியிலும் பலசாலியே புத்தி

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

வலியோரும் எளியோரும்

● முருகு சுப்பிரமணியன்

"தடி எடுத்தவன் தண்டல்காரன்" என்று ஒரு பழமொழி உண்டு. பலசாலியே, வலிமை மிக்கவனே தலைவனாகவும், மற்றவர்களை ஆட்டிப்படைக்கிறவனாகவும் விளங்கி வருவதை நடைமுறை அனுபவங்களின் மூலம் கண்டுவருகிறோம். "புத்திமானே பலவான் ஆவான்" எனும் முதுமொழி அறிவாளிக்கு உள்ள பெரு வலிமையைப் புலப்படுத்தும் நோக்கத்தில் எழுந்ததாகும். ஆனால், இன்றைய உலகத்தில் புத்திசாலியைவிட ஆயுத வலிமையும், தற்காப்பு வலிமையும், அடக்குமுறை வலிமையும் கொண்ட பலசாலியே புத்திமான் என்று கருதக்கூடிய நிலையைக் கண்டுவருகிறோம்.

உலக நாடுகளையும் அவற்றுக்குள்ள வலிமையையும் ஒருமுறை கண்ணோட்டமிட்டால் இந்த உண்மை நன்கு நமக்குப் புரியும். படைபலமும், ஆயுத பலமும் எந்த நாட்டில் குவிந்திருக்கின்றனவோ அந்த நாடுதான் அண்டை நாடுகளையும் மற்ற சகோதர நாடுகளையும் ஆட்டிப் படைக்கின்ற ஆற்றல் படைத்ததாக விளங்கி வருகின்றது. ஆயுதக்குறைப்பு, படைக்குறைப்பு, அணு ஆயுத ஒழிப்பு போன்றவை, அனைத்துலக மாநாடுகளில் வல்லரசுகளின் தலைவர்கள் பேசுகின்ற நல்ல வார்த்தைகளாக இருக்கின்றனவே ஒழிய, மனப்பூர்வமாகச் செயல்படுத்தக்கூடிய திட்டங்களாக உருவடையாமல் இருப்பதற்கு இதுதான் காரணம்.

இன்று அமெரிக்கா, ரஷ்யாவைப் பார்த்து அஞ்சுவதற்கும், ரஷ்யா, அமெரிக்காவைப் பார்த்து அஞ்சுவதற்கும், இரண்டு வல்லரசுகளும் சீனாவைப் பார்த்து உள்ளுக்குள்ளே புழுங்கிக்கொண்டிருப்பதற்கும் இந்த மூன்று நாடுகளிலும் பெருகி நிற்கும் படைபலமும், ஆயுத பலமுமே காரணமாகும்.

ஒவ்வொரு வல்லரசும் நவீனமான ஆயுதங்களைப் புதிது புதிதாக உற்பத்தி செய்து மற்ற வல்லரசுகள் தன்னை விழுங்கிவிடாதபடி பாதுகாத்துக் கொள்ளவே ஒவ்வொரு நாளும் பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாய் இருந்துவருகிறது. வல்லரசுகளுக்குத் தங்களின் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் மற்ற எந்த வல்லரசும் தங்களை மிஞ்சிவிடாதபடி பார்த்துக்கொள்வதில் எப்பொழுதும் மிகுந்த அக்கறை உண்டு. அதனால்தான் ஆயுதக்குறைப்பு பேச்சளவிலும், ஆயுதப்பெருக்கம் நடைமுறையிலும் வல்லரசுகளின் மத்தியில் நீடித்து நிகழ்ந்து வருகிறது. இந்த வல்லரசுகளின் ஆயுதப் பெருக்கப் போட்டா போட்டியைப் பின்பற்றி உலகில் உள்ள மற்ற நாடுகளும் அணுஆயுதங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்ய முனைந்து தங்களின் சக்திக்கு மீறிய இச்செயலால் தங்களின் பொருளாதாரத்திற்கும் கேட்டை உண்டாக்கிக் கொள்கின்றன.

பிரசன்னம்

உலகத்தில் எங்கே மிரட்டல் ஏற்பட்டாலும்

மானாக விளங்கி வருவது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய கசப்பான உண்மையாகும். அதிகாரத்தில் இருப்பவர்களாயினும், செல்வம் படைத்தவர்களாயினும் தங்களைத் பலசாலியாக மற்றவர்கள் பார்த்து அஞ்சக்கூடிய நிலையில் வைத்துக்கொள்ள விரும்புவதற்கு இந்த உலக நடைமுறைதான் காரணமாகும்.

எவ்வளவுதான் வேதாந்தங்கள், தத்துவங்கள் பேசினாலும், அறிவு பலத்தைவிட மிருக பலத்திற்கு அதாவது போக்கிரித்தனத்திற்கும், அடாபிடிதனத்திற்கும் வலிமையும், பிறரை அஞ்சி நடுங்க வைக்கும் ஆற்றலும் கூடுதலாக இருப்பது வெளிப்படை. ஒரு போக்கிரி தன் முரட்டுத்தனத்தால் சாதிப்பது எளிதாக இருப்பதற்கும், பயந்த சுபாவமுள்ள ஒரு படிப்பாளி தன் புத்திக் கூர்மையால் சாதிப்பது கடினமாக இருப்பதற்கும், வன்செயல்களுக்கும், மிருக பலத்திற்கும் அஞ்சி நடுங்குகிற உலக இயல்பே காரணமாக அமைகிறது.

வள்ளுவரைப் போன்ற சான்றோர்கள் வலியோர் சிலர், எளியோர் தம்மை வாட்டிவதைக்கின்ற பொல்லாத கொடுமையைக்கண்டு தாங்கமுடியாமல் அந்த அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க, முடிவுகாணத் துடிப்பதில் வியப்பில்லை. அந்த நல்லெண்ணத்தின் பலனாக எழுந்ததுதான் இந்தக் குறள். போக்கிரிகளை அழைத்து அவர்களைத் நியாயத்தின்பக்கம் திருப்புவதற்கு வள்ளுவர் முயற்சி செய்கிறார். செவிடன் காதில் ஊதிய சங்காக, காட்டில் எரித்த நிலவாக, விழலுக்கு இறைத்த நீராக வள்ளுவரின் இந்த உபதேசம் வீணாகிப் பயனற்றுப் போகும் என்றுதான் நாம் கருதுவோம்.

துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். போக்கிரிகளை அழைத்து, அவர்களை அமர வைத்து உபதேசம் செய்கிற இந்த முயற்சியைப் பைத்தியக்காரத்தனம் என்றுதான் காரியக்கார உலகம் கருதும். என்றாலும் வள்ளுவரின் இந்தக் குறள் தடி எடுத்துத் தான்தோன்றித்தனமாகக் கோயில் மாடுகளைப்போல மற்றவர்களை உருட்டி, மருட்டிப் பணிய வைத்து அதிலே இன்பம் காண்கின்ற மிருக உள்ளங்களுக்கு அருமருந்தாக அமையும் என்பதே என்னுடைய திடமான நம்பிக்கையாகும். மிருக பலத்திலும், அதிகார அடக்குமுறையிலும், ஆயுத பலத்திலும், பணச் செருக்கிலும், போதை ஏறி, தங்களால் எதையும் சாதிக்க முடியும்; தாங்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஆணவம் பிடித்து அலையும் தனி நபர்களுக்கு மட்டுமன்றி, கும்பல்கள், கோஷ்டிகள், குண்டர் கூட்டங்களுக்கும் கூட வள்ளுவரின் இந்தக் குறள் தர்க்க ரீதியான முறையில் நியாயத்தைத் துல்லியமாக எடுத்துக் காட்டி அவர்கள் மனம் திருந்தி நேரிய வழியில் நடப்பதற்கு வழிகாட்டும் கைவிளக்காகப் பயன்படக்கூடியது என்பதே என்னுடைய திடமான நம்பிக்கை.

வள்ளுவரின் நியாயம்

வள்ளுவர் அநியாயக்காரர்களையும், அக்கிரமக்காரர்களையும் அழைத்து அவர்களிடம் பேசுகிற நியாயம் இதுதான்: "தம்பி, உன்னைவிட வலிமை குறைந்த ஒருவனிடம் உன் உருட்டல் மிரட்டலை எல்லாம் காட்டுகிறாயே! சற்று யோசித்துப்பார். உன்னிடம் தடி இருக்கிறது. மற்றவர் அஞ்சக் கூடிய தோள் வலிமை இருக்கிறது. உன் எதிரில் நிற்கும் அந்த அப்பாவியிடம் அவனைத் தற்காத்துக் கொள்ளக்கூடிய உடல் வலிமையோ ஆயுதங்களோ ஏதுமில்லை. அவன் உன் உருவத்தைக் கண்டே நடுங்குகிறான். உன் கையிலுள்ள குண்டாந்தடி அவனை நடுங்க வைக்கிறது. அந்தப் பொடியனிடம் உன் கைவரிசையை ஆட்ட பாட்டத்தோடு காட்டுகிற நீ மறுபடியும் நினைத்துப்பார். உன்னைவிட பராக்கிரமசாலி ஒருவன் கையிலே குத்துக்கத்தி ஏந்தி தீயெனச் சிவந்து நிற்கும் கண்களோடு உன்னை மருட்டினால் அப்பொழுது உன் மனம் என்ன நினைக்கும்? அந்தப் பொல்லாத கொலைகாரனைப் பார்த்து உன் உள்ளம் எப்படிக் குமுறும்? 'நான் சிறியவன். என்னிடம் தடி மட்டுமே உண்டு. என்னைப் பார்த்துக் குத்துக்கத்தியை நீட்டி மருட்டுவது நியாயமா? எத்தனை அக்கிரமம், எத்தனை அநியாயம்' என்று உன் உள்ளம் குமுறி வெடிப்பது நிச்சயம்.

இதே மனக்குமுறலை நீ தடி கொண்டு விரட்டுகிற அப்பாவியிடமும் நீ எதிர்பார்க்க வேண்டும் அல்லவா? உன்னைவிட வலிமை வாய்ந்தவனைக் கண்டு நீ அஞ்சி நடுங்குவதைப் போல, உன்னைவிட வலிமை குறைந்தவன் உன்னைக்கண்டு, உன் வலிமையைக்கண்டு, அஞ்சி நடுங்குவான் என்பதை உணர்ந்தால் மெலியோரை மிரட்டுகின்ற தகாத காரியத்தை நீ ஒரு போதும் செய்ய மாட்டாய்."



ஒருநாள் ஒரு பசுவும் பன்றியும் சந்தித்துக்கொண்டன.

"மக்கள் உன்னை மதிக்கிறார்கள்; ஆனால் என்னை மதிக்கவில்லையே, ஏன்?" என்று பன்றி கேட்டது.

"நான் மக்களுக்குப் பால் கொடுக்கிறேன்" என்று பசு கூறியது.

"என் முடியினால் "பிரஷ்" செய்கிறார்கள். என் கொழுப்பு மருந்தாகப் பயன்படுகிறது. என் இறைச்சியையும் சாப்பிடுகிறார்கள். நானும் தான் மக்களுக்குப் பயன்படுகிறேன்" என்று சொன்னது பன்றி.



"ஆனால், உயிரோடு இருக்கும் போதே நான் பயன்படுகிறேனே!" என்றது பசு.

"மகாத்மா காந்தி சொன்ன கதை"

அனுப்பியவர்: தாரா எழிலழகன், சுங்கைவே.

வள்ளுவர் சொல்கின்ற இந்தத் தர்க்கரீதியான நியாயம் அறிவுமழுங்கிப் போயிருக்கும் முரட்டு மிருகங்களின் உள்ளத்தில் கூடத் தெளிவையும், திருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும்.

மிருக பலத்தால், அடக்குமுறை நடவடிக்கைகளினால் தங்களின் எண்ணிக்கை பலத்தால், அதிகார மமதையால் எளியோரை அடக்கி ஒடுக்க முனையும் தனிநபர்களுக்கும் கும்பல்களுக்கும் இந்தக் குறள் நல்ல படிப்பினையை வழங்குகிறது.

"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பார்கள். எந்தப் பலசாலியும் தங்களுக்கு நிகரானவர் உலகத்தில் எவருமே இல்லையென்று இறுமாந்து, மதிமயங்கி நிற்கக்கூடாது. உலகக் குத்துச்சண்டை வீரர்கள், மல்யுத்த வீரர்கள் இவர்களின் வெற்றி—தோல்விகளைத் தொடர்ந்து பார்த்துவரும் எவரும், வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு என்பதைத் தெளிவாக அறிவர். ஆகவே, யாரும் தன்னைவிட பராக்கிரமசாலி எவருமே இல்லை; தான் வைத்ததுதான் சட்டம், இட்டதுதான் திட்டம் என்று தலைவிரிகோலமாய் ஆடுவதற்கு முன்பு வள்ளுவரின் இந்தக் குறளைப் பன்முறை நன்கு பயில வேண்டும். எளியோரை வதைக்கத் தடியும், வாளும் எடுப்பதற்கு முன்பு தம்மைவிட வலியோர் படை திரண்டு வந்தால் தம் கதி என்னவாகும் என்பதைத் திர யோசிக்க வேண்டும்.

முரடர்களையும், போக்கிரிகளையும், மிருக பலத்தில் நம்பிக்கை கொண்ட கல்நெஞ்சங்களையும் திருத்துவது கடினம் என்பது உண்மையே. ஆனால், இந்தக் குறள் முரடர்களுக்கு நியாயத்தை எடுத்துக் கூறுவதோடு, அவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கிறது. "இன்று நீ அவனைத் துன்புறுத்துகிறாய்; நாளை உன்னைவிடப் பராக்கிரமசாலி ஒருவன் உன்னை வதைக்க வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்" என்று மறைமுகமாகப் போக்கிரிகளுக்கு அச்சத்தை உண்டாக்குகிறார் வள்ளுவர். முரடர்களுக்குப் புரியக்கூடிய முரட்டுத்தனமான மொழியில்தான் வள்ளுவர் பேசுகிறார். வள்ளுவரின் இந்த உபதேசம் சாந்தமான உபதேசம் அன்று. போக்கிரிகளுக்கு உபதேசம் செய்யும்போது அவர்களை அச்சுறுத்தினால்தான் அந்த உபதேசம் பலிக்கும் என்பது வள்ளுவருக்கு நன்கு தெரியும். அதனால்தான் அறிவுரையாகவும், தர்க்கரீதியான நியாயமாகவும், நடைமுறை உண்மையாகவும் அமைந்திருக்கிற இந்தக்குறள் கொடியவர்களை அச்சுறுத்துகிற தந்திரத்தையும் உள்ளடக்கி இருக்கிறது.

உலகத்தில் அருள்நெஞ்சம் படைத்தவர்கள், எளியவர்களுக்கு எல்லா வகையாலும் உதவக்கூடிய கருணை உள்ளம் படைத்தவர்கள், தம் சகோதர மக்களைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஈர நெஞ்சமுடையவர்கள் பெருக வேண்டும் என்பது வள்ளுவரின் உள்ளக்கிடக்கை ஆகும். ஆனால், உலகத்தில் சாதிச்சண்டைகள், வகுப்புக் கலவரங்கள், மதப் பூசல்கள் நாளும் பெருகி எளியோரை வலியோர் வாட்டுகின்ற கொடுமை, அநியாயம், அக்கிரமம் மிகுந்து நிற்பதை வள்ளுவர் கண்டார். இத்தகைய மிருக உலகத்தில் கருணை நெஞ்சங்கள் எப்படிப் பெருவாரியாகப் பல்க முடியும். உலகத்தில் அருள் நெஞ்சங்களின் எண்ணிக்கை பெருக வேண்டுமானால் இத்தகைய இருள் நெஞ்சங்களின் எண்ணிக்கை குறைய வேண்டும். மிருக பலத்தால் பிறரை அடக்கி, ஒடுக்கி வசப்படுத்திவிடலாமென்று மனப்பால் குடிக்கிற இருள் நெஞ்சங்களுக்கு வள்ளுவர் தந்திருக்கும் இந்த அரிய குறள் அவர்களின் பித்தத்தை, அறியாமையை, ஆணவத்தைத் தெளிய வைக்கின்ற அரு மருந்தாகும். அத்தகைய அருமருந்தாகிய இக் குறளை மீண்டும் நினைப்போம். அதன்படி நடப்போம்!

'வலியார் முன் தன்னை
நினைக்க, தான் தன்னின்
மெலியோர்மேல் செல்லும் இடத்து'
[250]



யாருக்குத் தெரியும்?

"லட்சுமி கல்யாணம்" என்ற படத்தில் "ராமன் எத்தனை ராமனடி" என்ற பாடல் ஒலித்தது. இதைத் தொடர்ந்து "ராமன் எத்தனை ராமனடி" என்ற படம் வந்தது.

"ராமன் எத்தனை ராமனடி" என்ற படத்தில் "பொண்ணுக்குத் தங்க மனசு" என்ற பாடல் வந்தது. இதைத் தொடர்ந்து "பொண்ணுக்குத் தங்கமனசு" என்ற படம் வந்தது.

"பொண்ணுக்குத் தங்க மனசு" படத்தில் "தேன் சிந்துதே வானம்" என்ற பாடல் ஒலித்தது. இதைத் தொடர்ந்து "தேன் சிந்துதே வானம்" என்ற படம் வந்தது.

"தேன் சிந்துதே வானம்" என்ற படத்தில் "உன்னிடம் மயங்குகிறேன்" என்ற பாடல் ஒலித்தது. இதைத் தொடர்ந்து "உன்னிடம் மயங்குகிறேன்" என்றொரு படம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இந்தப் படம் வந்ததும் இதில் என்ன பாடல் ஒலிக்கிறதோ! அதைத் தொடர்ந்து என்ன படம் வருமோ? யாருக்குத் தெரியும்?

சிகரெட் பிடித்தார் ஸ்ரீபிரியா

"ஓடி விளையாடு பாப்பா" என்று அமரகவி பாரதியார் பாடியிருக்கிறார். ஆனால் டைரக்டர் டி. என். பாலு "ஓடி விளையாடு தாத்தா" என்னும் பெயரில் ஒரு படத்தை டைரக்ட் செய்துவருகிறார். இப்படத்தில் முன்னணி நட்சத்திரம் ஸ்ரீபிரியா சிகரெட் பிடிக்கும் காட்சி ஒன்று வருகின்றது. அந்தக் காட்சியில் அவர் கொஞ்சங்கூடக் கூச்சப் படாமல் சிகரெட் பிடித்துச் சிறப்பாக நடித்துவிட்டார்.

இந்தக் காட்சியில் ஸ்ரீ பிரியாவின் நடிப்பு வெகு இயற்கையாக அமைந்துவிட்டதைக் கண்ட டைரக்டர் பாலு அவரை வெகுவாகப் பாராட்டினார்.

இதைப்பற்றி ஸ்ரீபிரியா குறிப்பிடும்போது "அந்நாளில் கே. டி. ருக்குமணி, லட்சுமிதேவி போன்றவர்கள், "மின்னல் கொடி", "வீரரமணி", ரூபான் குவீன்" ஆகிய படங்களில் சிகரெட் பிடித்து வெகு சிறப்பாக நடித்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். இந்தத் தலைமுறையில் நான்தான் இப்படி முதன்முறையாகச் சிகரெட் பிடித்து நடித்திருக்கிறேன். எல்லாம் நடிப்புத்தானே! ரசிகர்களுக்காக இப்படியும் நடிக்க வேண்டியதிருக்கிறது" என்றார் சிரித்துக்கொண்டே!



"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்
தரத்தினில் குறைவதுண்டோ –உன்
அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்
அன்பு குறைவதுண்டோ?"

இணை: ஜெய்சங்கர் ஸ்ரீபிரியா.
திரை: சொந்தமடி நீ எனக்கு

பால்மரக் காட்டினிலே

அகிலன்

13. நண்பன் அஜீஸும் அண்ணன் முருகனும்

பழனியின் குடும்பத்தாரை வழியனுப்பி வைப்பதற்காக அவர்களோடு கோலாலம்பூர் ரெயிலடிக்கு வந்த பாலன், அங்கே தன் அண்ணன் முருகனைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் முன்னதாகவே அவன் அங்கு வந்து காத்துக்கொண்டிருந்தான். கூட்டம் அதிகமாக இருந்துங்கூட எப்படியோ முருகன் தன் தம்பியையும் மற்றவர்களையும் கண்டு பிடித்துவிட்டான்.

அன்றைக்கு ரெயிலடியில் ஏகப்பட்ட கூட்டம். பெரும்பாலும் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்க்குடும்பங்களே அங்கே காணப்பட்டன. ஸாபாவுக்குச் செல்பவர்கள் மட்டிலும் அல்லாமல் பினங்கு, மலாக்கா முதலிய பல்வேறு பகுதிகளுக்குச் செல்வோரும் அங்கு நிறைந்திருந்தனர். பாலன் மௌனமாக அந்தக் காட்சியில் மனதைக் கரையவிட்டு நின்றான்.

பழனியின் மூத்த மகள் காமாட்சி, முருகனைச் சுட்டெரித்துவிடுவதுபோல் ஒருமுறை பார்த்துவிட்டுச் சட்டென்று வேறுபுறம் திரும்பிக்கொண்டாள்.

பிறகு ரெயில் புறப்படும்வரையில் அவள் அவனைச் சட்டை செய்யவில்லை. விவரம் தெரிந்த நாளாய் முருகனைப் பற்றிக் கனவு கண்டு வந்தவள் அவள்; அவனுக்காகக் காத்திருந்தவள் அவள்; சென்ற ஒரு மாதத்துக்கு முன்புவரை அவனையே நம்பிக்கொண்டிருந்தவள் அவள்.

காமாட்சியின் கோபத்தைக் கண்டுகொள்ளாதவன்போல், பழனியிடமும் தங்கம்மாவிடமும் சென்று கண்ணம்மாவின் பிரிவுக்காகத் துக்கம் விசாரித்தான் முருகன். அதோடு காமாட்சியைத் தான் கல்யாணம் செய்துகொள்ள முடியாமல் இருப்பதற்காக வருத்தமும் தெரிவித்தான்.

"இங்கே வேலை பார்க்க வந்த இடத்திலே ஒரு தொடர்பு ஏற்பட்டுப் போச்சு. அதனாலேதான்..." என்று மென்று விழுங்கிக்கொண்டே தலையைக் குனிந்துகொண்டான் முருகன்.

பழனி அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை; தான் அவனிடம் சொல்ல நினைத்ததைச் சொல்லிவைத்தான்.

"முருகா, நீ எங்கே இருந்தாலும் நல்லாயிருக்கணும். படிக்காத முட்டாள் சொல்றேனென்னு நீ நினைச்சாலும் நினைச்சுக்க. உங்க குடும்பத்திலே நீதான் மூத்த பிள்ளை. மூத்த பிள்ளைக்குத் தன்னோட தம்பி தங்கச்சிகளைக் கவனிச்சுக்க வேண்டிய பொறுப்பு இருக்கு. எங்களை மறந்திட்டாப்பிலே அவுங்களை மறந்திடாதே. வேறே எதை நான் உனக்குச் சொல்லப் போறேன்?"

ரெயிலடியில் பாலன் யாரிடமும் எதுவும் பேசவில்லை. அவனுடைய நெஞ்சு கனத்திருந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எப்படி அவன் மாமன் பழனி முன்பின் தெரியாத காட்டுக்கு வந்து சேர்ந்தானோ, அப்படியே இப்போது மற்றொரு முன்பின் தெரியாத காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான்.

முன்பாவது பழனியின் உடலில் இளமை இருந்தது; வலிமை இருந்தது; உள்ளத்தில் தெம்பு இருந்தது. இப்போதோ வயதுச் சுமை, குடும்பச் சுமை, வறுமைச் சுமை, துன்பச் சுமை... பாலன் பெருமூச்சுவிட்டான்.

பெருமூச்சு விட்டபடி ரெயிலும் நகர்ந்தது. கையை அசைத்து அவர்களுக்கு விடைகொடுத்தபடி ரெயில் சென்ற திசையைப் பார்த்துக்கொண்டு நின்றான் பாலன். அந்த இடத்தைவிட்டு நகர வேண்டுமென்ற நினைவே அவனுக்கு அப்போது ஏற்படவில்லை.

அவன் தோளைப்பற்றி உலுக்கிய முருகன், "நாம போலாமா?" என்றான். திரும்பித் தன் அண்ணனைப் பார்த்தான் பாலன். "நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்பதுபோல் இருந்தது அந்தப் பார்வை.

"இப்ப என்னோட வந்து தங்கியிருந்திட்டு நாளைக்கு நீ தோட்டத்துக்குப் போகலாம்" என்று அழைத்தான் முருகன்.

உடனே திரும்பிவிட வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் பாலன் தலைநகரத்துக்கு வந்திருந்திருந்தான். ஆனால் தன் அண்ணனின் அழைப்பை அவனால் தட்ட முடியவில்லை. ஒப்புக்கொண்டான். இருவரும் வெளியே வந்தார்கள். முருகன் பாலனைத் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

மாலை வேளையாதலால் ஏரிக்கரைப் பூங்காவுக்குச் செல்ல வேண்டுமென்று தோன்றியது முருகனுக்கு. நகரத்தின் ஓர் ஓரத்திலிருந்த அந்த பெரிய பூங்காவை நோக்கிச் சென்றது மோட்டார் சைக்கிள். புல்தரையின் அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு இருவரும் இறங்கி நடந்தார்கள். ஒரு பெஞ்சில் அமர்ந்தார்கள். காற்று சுகமாக வீசியது.

"மாமா குடும்பத்தை வழியனுப்பறதுக்காக நான் வரலே. உன்னைச் சந்திக்கிறதுக்குத்தான் ரெயிலுக்கு வந்தேன். எல்லா விவரத்தையும் எனக்கு அப்பா எழுதியிருந்தாங்க" என்றான் முருகன்.

பாலன் பதில் ஏதும் பேசவில்லை.

"கண்ணம்மாவோட முடிவைக் கேட்டப்ப என்னாலேயே அதைத் தாங்க முடியலே."

பாலனுக்கு அன்று முருகனைச் சந்திக்காமலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றியது. கண்ணம்மாவை அடியோடு மறந்துவிட்டு வேறு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி முன்பு உபதேசம் செய்த அதே அண்ணன் இன்று இப்படிப் பேசுகிறான். மறந்துவிட முயன்றுகொண்டிருந்த நினைவுகளை முருகன் பாலனிடம் கிளறிவிட்டுக் கொண்டிருந்தான். வேறு வழியின்றி முருகனின் உதட்டிலிருந்து வெளிவந்த ஆறுதல் மொழிகளுக்குச் செவிசாய்த்தான் பாலன்.

பூங்காவில் ஆங்காங்கே இருவர் இருவராகவும் மூவர் நால்வராகவும் மக்கள் உலவிக்கொண்டிருந்தார்கள். பூங்காவை ஒட்டிய சாலையில் கார்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. உலவுவதற்காக வந்தவர்களில் பெரும்பாலோர் இளம் காதலர்களாகவோ புதுமணத் தம்பதியராகவோ இருக்கவேண்டும். மலாய்க்காரர், சீனர், தமிழர் ஆகிய மூன்று இனத்தவரும் அங்கே காணப்பட்டனர்.

முருகனின் பேச்சிலிருந்து தப்புவதற்காக, "காலாறக் கொஞ்சம் நடந்துவிட்டு வரலாமா?" என்று சொல்லிப் பெஞ்சிலிருந்து எழுந்தான் பாலன். இருவரும் புல்வெளியில் மெதுவாக நடந்தார்கள்.

எதிரில் கரத்தோடு கரம் கோத்துக்கொண்டு நெருங்கி நடந்து வந்த ஓர் ஆணையும் பெண்ணையும் பாலன் சரியாகக் கவனிக்கவில்லை.

ஆனால் எதிரில் வந்த இளைஞன் பாலனைக் கவனித்துவிட்டான்.

"அடே, பாலன்! இங்கேயா இருக்கிறாய்?" என்று மலாய்மொழியில் கேட்டபடி, அந்தப் பெண்ணின் கரத்தை விட்டுவிட்டுப் பாலனின் முன்னே வந்து நின்று, அவன் தோளைப் பற்றி உலுக்கினான்.

"அஜீஸ்!" -அப்படியே அவனை அன்போடு தழுவிக்கொண்டான் பாலன். அஜீஸும் பாலனைத் தழுவிக்கொண்டான்.

சட்டென்று பின்னால் திரும்பி, தன்னோடு வந்த பெண்ணைக் காட்டி, "இவள் என் மனைவி; கல்யாணமாகி இரண்டு மாதமாகிறது" என்று

சொல்லிவிட்டு, அவளிடம் "பாலன் என்னோடு இங்கிலிஷ் பள்ளிக்கூடத்தில் படித்தவன். சிரம்பானில் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி இழுத்து வருவேன்; என் அம்மா டீ போட்டுக் கொடுத்தால் நாலு கப் உள்ளே தள்ளுவான்!" என்று கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தான்.

பாலன் தன் அண்ணன் முருகனை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். தான் தோட்டப் பள்ளியில் ஆசிரியராக இருப்பதையும் மறுநாள் நகரத்திலிருந்து திரும்பிப் போவதையும் சொன்னான்.

"அப்படியானால் கட்டாயம் நாளைக்குக் காலையில் நீ எங்கள் வீட்டுக்கு வரவேண்டும். இவள் கையாலேயே உனக்கு நாலு கப் டீ கிடைக்கும். உன்னோடு பேசி வெகு நாளாகிறது. சரியாக எட்டு மணிக்கு வந்துவிடு. நான் காத்துக்கொண்டிருப்பேன்."

ஒரு 'விஸிட்டிங் கார்டை' எடுத்து நீட்டி, "இது இவளுடைய அப்பாவின் வீடுதான்; வந்து சேர்" என்றான். அன்போடு கரத்தைப் பிடித்துக் குலுக்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டான். அவன் மனைவியும் தன் பங்கிற்கு அழைப்பு விடுத்துச் சென்றாள். இருவருமே உயரமாக, ஒல்லியாக ரோஜாப்பூ நிறத்தில் இருந்தனர்; சரியான ஜோடிதான்.

ஐந்து நிமிஷச் சந்திப்புத்தான் அது. என்றாலும் பாலனின் மனம் இந்தச் சந்திப்புக்குப் பிறகு பரவசமடைந்தது. உண்மையான அன்புக்கும், பாசத்துக்கும், பற்றுதலுக்கும், நட்புக்கும் ஏதோ ஓர் ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. இவ்வளவு நேரம் உடன்பிறந்த தமையனோடு இருந்துங்கூடக் கிடைக்காத இன்பம் இந்தச் சிறுவேளைச் சந்திப்பால் பாலனுக்குக் கிடைக்கவே செய்தது.

இவ்வளவுக்கும் அஜீஸ் மொழியாலும், இனத்தாலும், சமயத்தாலும் வேறுபட்டவன். பள்ளியில் சில ஆண்டுகள்தான் ஒன்றிப் பழகியவன். அப்படியிருந்தும்கூட, அவனைக் கண்ட மாத்திரத்தில், அதுவரை பாலனை அழுத்திக்கொண்டிருந்த மனச்சுமையெல்லாம் எங்கோ பறந்து விட்டனவே! தன் அண்ணன் அருகில் இல்லாதிருந்தால் அப்போதைக்கு அஜீஸ் தன்னைத் தனியே விட்டிருக்கமாட்டான் என்று பாலனுக்குத் தெரியும்.

நறுமணத்தைச் சிதறிவிட்டுச் செல்லும் மல்லிகைப் பூவைப்போல் அஜீஸ் அவன் மனைவியோடு புறப்பட்டு விட்டான். ஆனாலும் அவன் விட்டுச்சென்ற மணம் பாலனின் இதயத்துக்குள் சுழன்றது.

மூன்று இனத்தவரும் சேர்ந்து பயிலும் பள்ளிகளில்கூடப் பெரும்பாலும் மாணவர்கள் தத்தம் இனத்தவரோடுதான் நெருங்கிப் பழகுவது வழக்கம். அதிலும் பாலன அப்போது தோட்டக் காட்டிலிருந்து 'ரிமூவ்' வகுப்பில் படிக்கவந்த பிள்ளை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது பாலனுக்கு. ஒதுங்கியே வாழ்ந்து பழக்கப்பட்டதாலும் தாழ்மை உணர்ச்சி ஊட்டப்பட்டவர்களுக்கிடையே பிறந்து வளர்ந்ததாலும் பாலன் பள்ளியில் சேர்ந்தபோது மிகவும் கலக்கமுற்றிருந்தான். அப்போது அவனை வற்புறுத்தித் தங்கள்கூட்டத்தில் சேர்த்துக் கொண்டவன் இந்த அஜீஸ்தான். மலாய்க்கார இளைஞனான அவனுக்குத் தமிழர்கள் என்றோ சீனர்கள் என்றோ பிரித்து நோக்கத் தெரியவில்லை. எப்படியோ அவனுக்குப் பாலனிடம் பரிவு ஏற்பட்டு விட்டது. நாளடைவில் பாலன் அவனுடைய மிக நெருங்கிய நண்பனானான். அவர்களுக்கிடையிருந்த பொருளாதார வேறுபாடோ இன வேறுபாடோ அவர்கள் நட்புக்குக் குறுக்கே நிற்கவில்லை. சிரம்பானில் அஜீஸின் வீட்டில் பலமுறை சாப்பிட்டிருக்கிறான் பாலன். பள்ளி வாழ்க்கை முடிந்த பிறகு அவர்களுக்கு அவ்வளவாகச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. அஜீஸ் கோலாலம்பூருக்கு வந்துவிட்டான் போலும்.



அஜீஸ் கொடுத்துச் சென்ற முகவரிச் சீட்டை வாங்கிப் பார்த்த முருகன், வியப்போடு, "இவன் புளியங்கொம்பைத்தான் புடிச்சிருக்கான்; இவனோட மாமனார் இந்த ஊரிலே ரொம்பப் பெரிய புள்ளி" என்றான்.

அஜீஸின் மாமனார் பெரிய புள்ளியா சிறிய புள்ளியா என்ற கவலை பாலனுக்கு இல்லை. அன்றைக்கு இருந்த மனோநிலையில் அஜீஸைச் சந்திக்க முடிந்ததே பெரிய அதிர்ஷ்டம் என்று அவன் நம்பினான். மனத்தைப் பற்றி உலுக்கிக் கொண்டிருந்த கவலைகள் அவனைக் கண்ட மாத்திரத்தில் எங்கோ பறந்து விட்டன.


பூங்காவிலிருந்து திரும்பிய முருகனும் பாலனும் ஒரு சாப்பாட்டுக் கடைக்குச் சென்று இரவு உணவை முடித்துக் கொண்டார்கள். பிறகு பாலனைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றான் முருகன். பாலனுக்கு அஜீஸ் நண்பன் என்று தெரிந்த பிறகு, பாலனிடம் முருகனுக்குப் புதிய மதிப்பு ஏற்படத் தொடங்கியது. அஜீஸின் மாமனார் பெரிய கப்பல் வியாபாரி; அரசியலிலும் அரசாங்கத்திலும் செல்வாக்கு மிக்கவர். அப்படிப்பட்டவரின் மருமகனுக்கு நண்பனல்லவா பாலன்?

அறைக்குச் சென்ற பிறகு சகோதரர்கள் இருவரும் பொதுவான விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சு முருகனின் காதல், கல்யாணம், மேல்படிப்பு, லண்டன் பயணம் முதலியவை பற்றித் திரும்பியது.

"ராதா அண்ணியை எப்ப நீ கல்யாணம் பண்ணிக்கப் போறே? எப்ப நீ லண்டனுக்குப் போகணும்?" என்று கேட்டான் பாலன்.

உடனே பதில் அளிக்காமல் தன் முகத்தைக் கையால் அழுத்தித் தேய்த்துக் கொண்டான் முருகன். சற்று நேரம் யோசனை செய்துவிட்டு "சீக்கிரம் பண்ணிக்கச் சொல்லி அவங்க வற்புறுத்திக்கிட்டுத்தான் இருக்காங்க; ஆனாலும் அதிலே ஒரு சின்னச் சிக்கல் இருக்கு" என்றான்.

"என்ன சிக்கல் அது?"



"இது பொண்ணு இல்லீங்க; பொண்ணோட அம்மா!"

"கூடப் பிறந்தவன்கறதினாலே உன்கிட்ட மாத்திரம் இதைச் சொல்லிவைக்கிறேன். வெளியிலே இப்போதைக்குத் தெரியப்படாது."

மென்று விழுங்கிக்கொண்டு மேலும் கீழும் பார்த்துக் கொண்டு எப்படியோ சுற்றி வளைத்தபடி அதைச் சொல்லலானான் பாலன் "ஆரம்பத்திலே ராதாவோட பழகுகிற காலத்திலே, அவ நம்மோட குடும்பத்தைப் பற்றிக் கேட்டா. எனக்கு உண்மையைச் சொல்றதுக்கு வெக்கமா இருந்துச்சு. தோட்டத்திலே நம்ப அப்பா கிராணியா வேலை பார்க்கிறார்னு சொல்லி வச்சேன். மரம் வெட்டுற கூலியோட பிள்ளைன்னு தெரிஞ்சால் அவளோட பிரியத்தைச் சம்பாதிக்க முடியாதோங்கிற கவலை. அன்னைக்கு நீ வந்தப்பவே இதை உங்கிட்ட சொல்லப் பார்த்தேன். அவ கூட இருக்கிறப்ப நீ எதையாவது உளறி வச்சிடப்படாதில்ல?"

"நீ இவ்வளவு படிச்சும், இவ்வளவு கெட்டிக்காரனா இருந்தும் உன்கிட்டே இருந்து இன்னம் அந்தத் தாழ்மை உணர்ச்சி போயிடலை" என்றான் பாலன்; "கூலி வேலை செய்யறதிலே என்ன அவமானம்?"

"மத்தவங்க இன்னம் அதை மதிக்கலையே? ஒரு வேளை ராதாவுக்கு அது தெரிஞ்சிருந்தால், அவ திடீர்னு என்னோட பழகிறதையே நிறுத்தினாலும் நிறுத்தியிருப்பா."

"நாமே நம்மோட தொழிலை மதிக்கலேன்னு மத்தவங்க எப்படி மதிப்பாங்க? பால்மரப் பட்டையைச் சீவிப்பால் சேகரிச்சுப் பணம் தேடி வாழ்க்கையை நடத்தறதிலே என்ன கௌரவக் குறைச்சல்? திருடினோமா? ஏமாத்தினோமா? வஞ்சனை செய்யறோமா? சுரண்டறோமா? ஒருத்தன் இவ்வளவு அக்கிரமத்தையும் செய்து ஆயிரம் ஆயிரமா வெள்ளி சேர்த்தால் அது உயர்ந்த தொழில்! நாணயமாப் பாடுபட்டு உழைச்சு அம்பதும் நூறும் வாங்கினால் அது கேவலமான தொழில்! இது தானே உன்னோட கணக்கு?"

"நீ பேசுறது வறட்டு லட்சியம்; வாழ்க்கைக்கு இது ஒத்து வராது" என்றான் முருகன்.

"எனக்குப் பால்மரம் வெட்டவும் தெரியும்; பாடம் சொல்லிக் கொடுக்கவும் தெரியும். இதிலே எந்தத் தொழிலையும் பெரிசாகவோ சிறிசாகவோ நான் நினைக்கலே. 'வக்கீல் தொழிலையோ வாத்தியார் தொழிலையோ மோசமாகச் செய்யறவரைவிட, முடி வெட்டும் தொழிலையோ செருப்புத் தைக்கிற தொழிலையோ நல்லாச் செய்கிறவர் உயர்ந்த மனிதர்'னு காந்தி சொல்லியிருக்காராம். உனக்குத் தெரியுமா?"

தம்பியிடம் உபதேசம் கேட்டுக் கொள்வதற்காக முருகன் இந்த இரகசியத்தை அவனிடம் வெளியிடவில்லை.

அவன் ராதாவிடமும் அவள் வீட்டாரிடமும் சொல்லி வைத்திருக்கும் பொய் வெளிப்பட்டு விடாமல் இருக்க அவனுக்குப் பாலனின் ஆலோசனையும் உதவியும் தேவைப்பட்டன; அவ்வளவுதான்.

"இதோ பார், பாலா!" என்று அதட்டிவிட்டு, "என்னோட திட்டம் இதுதான்; நீயும், அப்பா அம்மாவும் எப்படி நடந்து கொள்வீங்களோ தெரியாது" என்றான் முருகன். "நம்மோட குடும்பத்தாரை இவங்க சந்திக்காமல் இருக்கறதுக்காக, 'எங்கள் வீட்டில் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கமாட்டேன்னுட்டாங்க'ன்னு ராதா வீட்டில் சொல்லப்போறேன். இங்கேயே கல்யாணம் நடக்கும். கல்யாணத்துக்குத் தோட்டத்திலேருந்து யாரையும் நான் கூப்பிடப் போறதில்லே. நீ மாத்திரம் கல்யாணத்துக்கு வந்தால் போதும்."

"கல்யாணத்துக்குப் பிறகு இந்த உண்மை தெரியாமலா போயிடும்."

"கழுத்திலே தாலி ஏறினதுக்கப்பறம் தெரிஞ்சா எனக்குக் கவலையில்லே."

"இப்பவேகூட அவங்களுக்கு உன்னைப் பத்தி எல்லா விபரமும் தெரிஞ்சிருந்தால், அதிலே ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணுமில்லே" என்றான் பாலன்; "அவங்க வீட்டிலே வேலை செய்யற நம்ம லட்சுமியோட தோட்டத்துப் பொண்ணு; அதுவுமில்லாமல் பொண்ணைக் கொடுக்கிறவங்களும் தீர விசாரிக்காமல் எதையும் செய்ய மாட்டாங்க."

திடுக்கிட்டான் முருகன். "அப்படீன்னு நீ என்ன சொல்றே?"

"ஒரு தோட்டக் கூலியோட பையன் படிச்சு முன்னுக்கு வர்ரது தான் பெருமையே தவிர, கிராணியோட பிள்ளையோ, மானேஜரோட பிள்ளையோ முன்னுக்கு வர்ரதிலே என்ன அதிசயம்? இப்பவாவது நீ உண்மையைச் சொல்றதுதான் நல்லது. மறைக்க முடியாததை நீ ஏன் மறைக்கப் பார்க்கிறே?"

முருகன் பதில் ஏதும் பேசாமல் மௌனம் சாதித்தான். உண்மையைத் தெரிந்துகொண்டே தெரியாதவர்கள்போல் ராதாவும் அவள் வீட்டாரும் நடிக்கிறார்களோ என்றுகூட முருகனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இதில் ஏமாறுகிறவர் யார், ஏமாற்றப்படுகிறவர் யார் என்பதே முருகனுக்குப் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. "சொல்லிவிடலாமா? கூடாதா? சொல்லிவிட்டால் கல்யாணம் நின்று போனால் என்ன செய்வது? சொல்லாமல் போனால் கல்யாணத்துக்குப் பிறகு இதையே ராதாவோ அவள் வீட்டாரோ ஒரு பிரச்னையாக்கி விட்டால் என்ன செய்வது...?"

தலை சுற்றியது முருகனுக்கு. அலமாரியிலிருந்து ஒரு பிராந்தி பாட்டிலை எடுத்துக் கோப்பையில் ஊற்றினான். தன் தம்பியிடம் பெயருக்கு அதை நீட்டி "நீயும் கொஞ்சம் குடித்துப் பாரேன்" என்றான். பாலன் இசையவில்லை. மளமளவென்று தான் மட்டிலும் உறிஞ்சிக் குடித்தான் முருகன்.

(தொடரும்)

மரபுத் தொடர்களும்...

வெ. ஆறுமுகம்

பழமொழிகள், மரபுத் தொடர்கள், சொற்றொடர்கள் முதலானவை அடிக்கடி மலேசிய மொழி வினாத்தாளில் இடம்பெறுகின்றன. 1966-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டுவரையிலான வினாத்தாட்களில் 1969, 1972, 1976 (Disember) தவிர, பிற தாட்களில் இத்தகைய கேள்விகள் இடம்பெற்றுள்ளன. இதைவைத்துப் பார்த்தால், இந்த ஆண்டும் இப்படிப் பட்ட கேள்விகள் வெளிவரலாம் என்று யூகிக்க இடமுண்டு.


நிறைய பழமொழிகள், மரபுத் தொடர்கள், சொற்றொடர்கள் முதலானவற்றை நீங்கள் இதுவரை படித்திருப்பீர்கள். அவற்றின் பொருளை நினைவில் இறுத்திக் கொள்ளுங்கள். இவை தொடர்பான கேள்விகள் எப்படி அமையும், விடைகள் எப்படி அமையவேண்டும் என்பதை மட்டும் இங்குக் காண்போம்.

பழைய வினாத்தாட்களை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் பல வகையான கேள்விகள் பொதுவாக இடம் பெறுவது தெரிய வரும்.

அ. விளக்குதல்

Pilih lima daripada peribahasa-peribahasa di bawah ini dan terangkan maksudnya. (1966)

i. gencatan senjata
ii. batu loncatan
iii. Kuran buruk
iv. nujum sangkamara
v. buaya darat
vi. melangkah bendui
vii. melepaskan batuk di tangga



Pilih lima daripada peribahasa-peribahasa dan ungkapan-ungkapan di bawah ini dan terangkan maksudnya. (1967)

i. sidang kemuncak
ii. daya utama
iii. lidah rasmi
iv. derma kilat
v. cogankata
vi. sampah masyarakat
vii. ekor kuda

இப்படிப்பட்ட கேள்விகள் வருமென்றால் உங்களுக்கு வேலை எளிதாக முடிந்துவிடும். ஏதேனும் ஐந்தைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு விளக்கம் எழுதிவிட்டால் போதும். உங்களின் விளக்கம் பொருத்தமாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம்.

buaya darat – orang kaya yang memerah orang-orang miskin dan yang tidak berdaya.

இப்படி வெறும் விளக்கத்தை மட்டுமே எழுதக்கோரும் கேள்விகள் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு அறவே இடம்பெறவில்லை. இத்தகைய கேள்விகள் மிக எளிதானவை என்று எண்ணி, வினாத்தாள் தயாரிப்பவர்கள் கேள்வி முறையை மாற்றிவிட்டார்களோ என்று கொள்ள இடமுண்டு. எனவே இப்படிப்பட்ட கேள்விகளை இந்த ஆண்டு எதிர்பார்க்காமல் இருப்பதே உசிதமானது. (எதிர்பாராமல் இவ்வாறான கேள்விகள் வினாத்தாளில் இவ்வாண்டு இடம்பெற்றுவிடுமானால் உங்களின் நற்பேறாக அதைக் கருதிக் கொள்ளலாம்)

ஆ. வாக்கியங்களின்வழி விளக்குதல்

Pilih lima daripada simpulan-simpulan bahasa di bawah ini, kemudian gunakan dia dalam karangan pendek tiga empat ayat bagi tiap-tiap satunya supaya dapat difahamkan maknaya. (1968)

i. sagu hati
ii. tabir besi
iii. tunjuk perasaan
iv. rumah haram
v. tenggelam punca
vi. ambil alih
vii. termakan bulan
viii. tempoh hari

Pilih lima daripada simpulan-simpulan bahasa berikut, kemudian tiap-tiap satu yang kamu pilih itu gunakan dalam karangan pendek dua tiga ayat supaya dapat difahamkan maknaya. (1973)

i. anak angkat
ii. anak bulan
iii. anak jantan
iv. anak gahara
v. anak kandung
vi. anak buah
vii. anak tiri

இத்தகைய கேள்விகளில் நீங்கள் மரபுத்தொடர்களை விளக்கவேண்டியதில்லை. அதற்கு மாறாக இரண்டு, மூன்று, நான்கு வாக்கியங்கள் அடங்கிய ஒருபத்தி எழுதவேண்டும். நீங்கள் தேர்ந்தெடுத்த மரபுத் தொடரும் அப்பத்தியில் இருக்க வேண்டும்; பத்தியைப் படித்தவுடன், அந்த மரபுத்தொடரின் பொருள் விளங்குமாறு இருக்கவேண்டும்.

ஐந்து மரபுத் தொடர்களுக்குச் சரியாக ஐந்து பத்திகள் எழுத வேண்டும். ஒரே நீண்ட வாக்கியத்தை ஒரு பத்தியாக எழுதி முடித்துவிடாதீர்கள். கண்டிப்பாக இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்களால் பத்தி அமையவேண்டும். இத்தகைய பத்தியைத்தான் Karangan pendek என்று கேள்வியில் குறிக்கப்பட்டுள்ளது.

இ. மரபுத்தொடர்களை உருவாக்கி அவற்றை வாக்கியங்களில் அமைத்தல்

Perkataan-perkataan yang berikut boleh dijadikan simpulan bahasa jika di pasangkan dengan satu atau dua patah perkataan lain. Pilih lima daripadanya, kemudian jadikan simpulan bahasa daripada tiap-tiap satunya dan buatkan contoh memakai tiap-tiap satu simpulan bahasa itu di dalam ayat. Misalnya:

buah — buah tangan

Masing-masing ada membawa buah tangan kecuali seorang. (1970)

emas	angin
batu	makan
kasih	pandang
perut	kilat

முன்னால் காட்டப்பட்ட இரு வகைக் கேள்விகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டதாகும். தரப்படும் சொற்களைக்கொண்டு நீங்களே

மரபுத்தொடர்களை உருவாக்கி, ஒவ்வொரு மரபுத்தொடரையும் கொண்டு தனித்தனி வாக்கியங்கள் அமைக்கவேண்டும். (மேலே உள்ள எடுத்துக்காட்டைக் கவனியுங்கள்) ஒருசொல் -ஒரு மரபுத்தொடர் - ஒரு வாக்கியம். ஒரு மரபுத்தொடருக்கு இரண்டு மூன்று வாக்கியங்கள் அமைக்காதீர்கள்.

இத்தகைய கேள்வி *1974*-ஆம் ஆண்டிலும் இடம் பெற்றது. Undi, dingin, hidung, kuman, hati, tikam, langkah ஆகிய சொற்கள் தரப்பட்டன.

1975-ஆம் ஆண்டில் இதே மாதிரியான கேள்வி ஓரளவு வேறுபாடுகளுடன் இடம்பெற்றது.

i. Buat tiga simpulan bahasa yang berasingan dari tiap-tiap satu perkataan berikut.

ii. Buat ayat bagi tiap-tiap simpulan bahasa itu supaya jelas maknanya: (1975)

tangan, batu

Tangan எனும் சொல்லைக் கொண்டு மூன்று மரபுத்தொடர்களும் (Buah tangan, berat tangan, cepat tangan, kena tangan, panjang tangan, ringan tangan முதலியவற்றுள் ஏதேனும் மூன்று), batu எனும் சொல்லைக் கொண்டு மேலும் மூன்று மரபுத்தொடர்களும் உண்டாக்க வேண்டும். அவற்றைக்கொண்டு தனித்தனியாக ஆறு வாக்கியங்கள் அமைக்க வேண்டும்.

ஈ. விளக்குதலும் வாக்கியத்தில் அமைத்தலும்.

i. Terangkan maksud simpulan bahasa yang berikut:

gulung tikar
jalan keluar
menyinsing lengan
penyambung lidah

ii. Buat ayat bagi tiap-tiap simpulan bahasa itu untuk menunjukkan penggunaannya yang betul. (Julai 1976)

இத்தகைய கேள்விகள் வருமெனில் முதலில் பொருளை விளக்க வேண்டும்; பின் வாக்கியத்தில் அமைக்கவேண்டும். வாக்கியங்கள் தெளிவானவையாகவும் நீளமானவையாகவும் இருக்கவேண்டும்.

இங்குக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றையொட்டியே தேர்வில் கேள்விகள் இடம்பெறும் என்று பெரும்பாலும் நம்பலாம். இப்படிப்பட்ட பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

பழமொழிகள், மரபுத்தொடர்கள், சொற்றொடர்கள் முதலியவற்றில் உங்களுக்கு ஆழமான, விரிவான அறிவு இருந்தால் எப்படிப்பட்ட கேள்விகள் வந்தாலும் நிறைவான விடையெழுத இயலும்.

முயற்சி திருவினை ஆக்கும்.

எங்கள் தலைவர்களே...!

காரைக்கிழார்

வாழ்க்கை மரபுகளை வையகத்தார் யாவருக்கும்
தாழ்ச்சி உயர்ச்சியின்றித் தந்ததோர் தமிழினத்துத்
தாய்வயிற்றுப் பிள்ளைகளே! தமிழ்க்கடலின் முத்துகளே!
ஆய்ந்தறிந்த அரசியலின் தலைவர்களே, தொண்டர்களே!

நல்லிளநீர் தேவையென்று நட்டுவைத்த தென்னைமரம்
மல்லுக் கிழப்பார்கை மட்டையாய் ஆவதுண்டு!
தாகம் தவிர்க்கத் தடம்போட்ட நீர்க்குளத்தில்
நாகம்போல் ஆழத்தில் நச்சினங்கள் தோன்றலுண்டு!
நிழலுக்குப் பந்தலிட்டு நிம்மதியாய்த் தூங்கையிலே
விலகிச் சரிந்து உயிர்வாங்கும் காதையுண்டு

ஆனாலும் எங்கள் அருமைத் தலைவர்களே!
தேனூறும் தெய்வத் தமிழறிந்த தொண்டர்களே!
சமுதாயம் என்னும் தங்கத்தேர் தன்னை
அமுதோடும் பாதை அமைத்தே நகர்த்திவரும்
சங்கிலித் தொடரைத்தான் தந்தோம் கரங்களிலே!
எங்கிழுத்துச் செல்வீரோ அங்கெல்லாம் யாம்வருவோம்!
வருவதற்குத் தயங்கவில்லை! வழியில் துணையெடுத்துத்
தருவதற்கும் தயங்கவில்லை! தமிழ்மரபும் அதுவன்றோ!

எங்கள் தலைவர்களே! எமைக்காக்கும் தொண்டர்களே!
சங்கிலியைத் துண்டாக்கும் தந்திரங்கள் தேவையில்லை!
சமுதாய மேம்பாடு சாற்றுதற்கு நேரமின்றித்
தமதான காரியத்தில் தலையெடுத்தல் நன்றாமோ?
உயிரைத் தருவோம் உங்களுக்கே ஒன்றானால்!
பயிர்கள் விளையப் பயனாகி நில்லுங்கள்!
கூப்பிட்ட குரலுக்குக் கூடுவோம் ஆயிரம்பேர்!
சாப்பிட்ட எச்சிலுக்குக் காத்திருக்கச் செய்யாதீர்!

எங்கள் தலைவர்களே, எமைக்காக்கும் தொண்டர்களே!
தங்கம்போல் தமிழினம் தலையெடுக்கச் செய்யுங்கள்!
சரிந்தது போதும் சரிப்படுத்திக் கொள்வதற்கு
விரிந்தது காலம் எனவிளம்பி வாருங்கள்!
உங்கள் தலைமைஓர் உன்னத வரலாற்றை
எங்கள் தலைமுறையில் எழுதிவிடச் செய்யுங்கள்!
நாளை மலரும் நலமான சந்ததிக்கு
மூளை இருப்பதுபோல் முன்னோடிச் செயல்புரிக!

எங்கள் தலைவர்களே, எமைக்காக்கும் தொண்டர்களே!
மங்களமாய் என்றும் வளம்சூழ வாழ்கவென்று
மக்கள்யாம் வாழ்த்துகிறோம், மனந்திறந்து வாழ்த்துகிறோம்
சக்தியுடன் வாழ்க தழைத்து!

(*1977*-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் *31*-ஆம் நாள் ம. இ. கா. தேசியத் தலைவர், துணைத்தலைவர், உதவித்தலைவர்கள், பொதுச்செயலாளர், பொருளாளர், பதவி உயர்வு பெற்ற மாண்புமிகு கு. பத்மநாபன்; தேசிய-மாநில ரீதியில் விருது பெற்ற ம. இ. கா. பிரமுகர்கள் ஆகியோருக்கு நெகிரி ம. இ. கா., சிரம்பானில் அளித்த சிறப்பு விருந்தில்வாசித்து வழங்கப்பெற்ற வாழ்த்துப்பா)

தூரத்து இடி

அ.உ. இளஞ்சேரன்

கல்யாண வீட்டில் உள்ள எல்லாரும் சுழற்காற்றில் சிக்கின மாதிரி அல்லோலகல்லோலப்படுகிறார்கள். ரமணியம்மாள்! நீயும்தான் என்னமாய்ப் பறக்கிறாய் மனசுக்குள்.

இந்த ஜோடனைக்குட்பட்ட பந்தலுக்குள்ளிருந்து கிட்டின தொலைவிலிருக்கும் தெருக்கரையில் வந்து நிற்கிற மணமக்கள் வாகனம், பச்சை தென்னங்கீற்றோலை வேய்வுக்கிடையேயும், மஞ்சள் தென்னங் குருத்துப் பின்னல் தொங்கலுக் கிடையேயும் 'பளிச்' செனத் தெரிந்தாலும் உன் கலங்கிய விழிகளுக்கு மங்கியே புலனாகிறது.

இதோ... இங்கிருந்த நிரம்பப் பேர்வழிகள் ஓட்டமும் நடையுமாக மணமக்களின் ஜோடி சேர்ப்பை வேடிக்கை பார்க்கக் கிட்டிப்போய்க் குழுமி நிற்கின்றார்கள். சிலர் உள்ளுக்கிருந்து கதவண்டை நிற்கும் உன்னையும் தாண்டிக்கொண்டு வெளிவாசலுக்குப் புறப்பட்டுக் கரங்களில் ஆரத்தித்தட்டை ஏந்திக் காத்திருக்கிறார்கள். ஆனால் நீயோ விவரந் தெரியா பீதிக்குள் மூங்கித்தவித்துப் போய் அதையெல்லாம் வெறித்து நோக்குகிறாய்.

இதோ மல்லிகைச் சரத்துக் கிடையே கண்ணாடிக்குள் முகம் காட்டி இருந்த மாப்பிள்ளையும் பெண்ணும் வாகனத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளிவந்து, வாழைமரத்துக்கூடே வரவேற்புச் சடங்கைப் பெற்றுக்கொண்டு சோர்வுடன் சிரித்தபடி உள்ளுக்குள் வருகின்றனர். அதே சமயத்தில் நீ என்னவோ விடாப்படியாக பழங்கால வழக்கப்படி அவர்களுக்கு முன்னே நிற்காமல் ஒதுங்கி நிற்கிறாய்.

காலையில் உன் மகன் கமலன், வேட்டியும் ஜிப்பாவுமாக மாப்பிள்ளைக் கோலத்தில் கோயிலில் நடைபெறவிருக்கும் முகூர்த்தத்துக்குப் புறப்பட்டபோது அவனை ஆசீர்வதித்து எத்துணை உற்சாகமாக வழியனுப்பி வைத்தாய். அப்போது அவன் உன்னை எவ்வளவு வற்புறுத்தியும், மற்றவர்கள் கேட்டும் நீ போக மறுத்தாய்.

அதற்கப்புறம் பின் கட்டுக்குப் போய்த் தாறுமாறாகக் கிடந்த தட்டுமுட்டுப் பொருட்களை எடுத்துப் போட்டுக் குழாயடியில் அலம்ப முற்பட்டபோது... அந்தண்டை வெற்றிலையை மென்று துப்பிக் கொண்டிருந்த சில பெண்கள் உன்னை அன்பாக விரட்டிவிட்டுத் தங்கள் முந்தானையை இடுப்பில் சொருகிக் கொண்டார்கள். அப்போதுதான் நீ இறுதியாகச் சிரித்திருக்க வேண்டும்-சந்தோஷமாக.

அங்கிருந்த ஒரு முக்காலியைத் சாய்த்துப் போட்டுஅதில் ஒரு காலைக் குத்திட்டு மறுகாலை நீட்டி நீ உட்கார்ந்து கொண்டபோது தட்டுக்களைத் தண்ணீரில் முழுக்கியெடுத்துத் தேய்த்துக் கொண்டிருந்த பெண்கள் பேசிக்கொண்டது உனக்குத் தெளிவாகக் கேட்டது.

"அடியே பாருங்க. இந்தக் கல்யாண வீட்டில் இப்படி அலம்பிக்கிட்டிருக்கும்போது எனக்கு எங்க பக்கத்து ஊர்லே நடந்ததுதான் நெனப்புக்கு வர்றது. அங்கும் நான் இப்படித்தான் பிள்ளையோட தாயை உட்கார்த்தி வெச்சு உற்சாகப்படுத்தினேன். அதுக்கப்புறம் அவள் உற்சாகமா உட்கார்ந்ததே கிடையாது. ஏன்னா அவளுக்கு வந்த மருமகள் அவ்வளவு சரியில்லை. அவளை மாமியார்னு மதிக்காததோட, அவள் மகனையும் இல்லே கைக்குள்ளே வளைச்சுப் போட்டுக்கிட்டாள். பாவி! அதனாலே அந்த அப்பாவி மனுசி மிகவும் கஷ்டப்பட்டாள்... சொல்லறப்பவே எனக்கு அழுகை தொண்டையை அடைச்சுக்கிறது....ம்..."

அதைச் செவியுற்றபோது உனக்கு என்னமாய் அடிவயிறே குலுங்கிப் போய்விட்டது. நீ அவர்களைக் கிண்டிக் கிளறி எவ்வளவு பயங்கரமான சமாச்சாரங்களையெல்லாம் அறிந்து கொண்டாய். ஆனால் ஊடவே உனக்கு அப்படியெல்லாம் நடக்கப்போறதில்லை என்று நெஞ்சு உறுதி இருந்தாலும் அதையெல்லாம் பிய்த்துப் பறிப்பது போல் அவர்கள் உன்னையும் அந்தக் கதையோடு ஒப்பிட்டு வித்தியாசமில்லாமல் காட்டியபோது...

"எதுக்கும் சொல்லி வைக்கிறேன் ரமணியம்மாள். நீ என்னதான் உன் மகன் கமலன் மேலே இதுவரை பாசத்தைக் கொட்டியிருந்தாலும் இனியாவது கொஞ்சம் ஒதுங்கியிரு. அவனுக்கு உன்னைவிட அவன் மனைவிதான் முக்கியம்னு மூலைக்குப் போயிடு"

ஓ...அவர்களின் அந்த அறிவுரைகளில் — அறிவிப்புக்களில் நீதான எப்படி உருகித் தணிந்து இறுகிப் போனாய். உன் உள்ளம்தான் எவ்வளவு நாழி கொதித்து ஆவியாகி இடம் தெரியாது மறைந்தது...

ரமணியம்மாள், நீ ஓர் இருண்ட மூலையில் நின்றுகொண்டு உனக்கு முன்னால் நடக்கிறதையெல்லாம் வண்ண விளக்கு வெளிச்சத்தில் கிசுகிசுத்துச் சிரித்து மகிழும் தம்பதியரை உன் மகன் கமலனையும், அவனுக்குக் காதலியாக இருந்து கைப்பிடித்து வந்த குமுதினியையும் வெறித்துப் பார்க்கும்போது உன் வயதான வெள்ளை மனம் விபரீதமாக வெந்து போய்விடுகிறது.

நீ நினைக்கிற மாதிரி நடந்து விடும் என்பதற்கு இப்போதே ஆதாரம்-அஸ்திவாரம் கிடைத்து விட்ட மாதிரி உனக்கு இந்த மனக் கஷ்டம் ஏறபட்டிருக்கிறது. அதெல்லாம் நிஜமாகவே நடக்கத்தான் போகின்றன என்று நீ முணுமுணுத்தபடி கண்களைக் கசக்கிக் கொள்கிறாய்.

நேற்று வரை - ஏன் இன்று காலைவரை -உன்னையே வலம் வந்து கொண்டிருந்த உன் மகன் அதோ தனக்கென்று ஒருத்தி வந்த கொஞ்ச நேரத்தில் உன்னை அடியோடு மறந்துபோய் விட்டானே. தாயில்லாமலேயே தாலி கட்டிய அந்தத் துர்பாக்கியசாலி உன் புண்ணிய தரிசனத்துக்காக இப்போதாவது உன் காலில் விழாவிடினும்-கையைப் பற்றியாவது ஆசிர்வாதம் பெற முயலலாமே! இப்போதே இப்படியென்றால்...

கல்யாணத்துக்கு முன்னால் தாயைக் கண் கண்ட தெய்வமாய் மதித்தவன், பின்னால் கால் செருப்பாய் மிதிக்கத்தான் போகிறானா? வேண்டாம்... அதெல்லாம் ஒருக்காலும் நடக்கவே வேண்டாம் தள்ளி வைக்கப் பட்டவள் நீ, தள்ளியே போய்க்கொள். உன்னாலே இனி யாருக்கும் தொல்லை வேண்டாம்...

ரமணியம்மாள், கல்யாண வீட்டுக்குள்ளேயே குமுறும்போதும் எப்படியோ உணர்ச்சிகளை பத்திரப்படுத்திக்கொண்டு மௌனமாக வெளியேற முயல்கிறபோதும்என்ன மாதிரி கெஞ்சிப் பார்வையிடுகிறாய் கமலனை. அவன் உன்னை முறைக்கிற மாதிரி அல்லவா இருக்கிறது. சில வார்த்தைகள் பேச நினைப்பதற்குள் அவன் வெறுத்துத் திரும்புகிறானே.

ஆங்காங்கே நடந்து கொண்டும், நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் இருக்கும் உறவுக்காரர்களையும் தெரிந்தவர்களையும் சந்திக்காமல் உன்பாட்டில் வேகமாக நடக்கிறாய். உனக்கே தெரியாத திசையில் நடந்து போகிறாய். பின்னுக்கு மற்றவர்கள் சிரிப்பது உன் நிலைமையைச் சுட்டிக் காட்டித்தானா? ஒலி பெருக்கியில் பாடல் வருகிறதே, அதுவும் உன்னைக் கேலி செய்யத்தானா?

நீ ஒரு வழியாக உன் தோழியின் வீட்டு வாசற்படிவரை போய் நிற்கிறாய். மொட்டை வெய்யிலில் வியர்த்துக் கொட்டிப்போன நிலையில் இருக்கும் நீ, இருட்டிக்கிடக்கும் உள்ளறையிலிருந்து கேள்வி பாவத்துடன் துடித்தோடி வருபவளை ஏக்கமாகப் பார்த்துவிட்டு அடக்கமாட்டாமல் வாய் விட்டே ..

உன்னை நாற்காலியில் சாய்த்து விட்டுக் காற்றாடியைச் சுழல விட்டு உனக்குக் குளிர்ந்த நீரைப் பருகக் கொண்டுவரும் அந்தத் தோழியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பயமும் பதற்றமும் திரக் கதறி அழுகிறாய். என்னென்னவோ சொல்லிச் சொல்லி...

"அடியேய் கேளுடி... எதிர் காலத்துலே எனக்கு என்ன நடக்கப் போகுது தெரியுமா? என் மருமகள் என்னை ஏசுவாள். என் மகன் என் தலைமுடியைப் பிச்சுத் 'தரதர'ன்னு இழுத்துப்போய்த் தெருவுக்குத் தள்ளுவான். நான் பலமில்லாதவள் இல்லியா, அதான் சாக்கடையோரமா பொத்துனு விழுந்துடுவேன். உடம்பெல்லாம் உரசல் ஏற்படும். ரத்தம் வரும். அத்துடனே நான் தள்ளாடித் தள்ளாடிக் கண்காணாத இடத்துக்குப் போயிடுவேன். நான் வயசானவள் இல்லியா. அதான் வேலை செய்யக்கூட முடியாமல் தெருவோரமா உட்கார்ந்து அங்கு வர்றவங்க போறவங்க முன்னே கையேந்திப் பிச்சை எடுப்பேன். கடைசியிலே ஒருநாள் அநாதியா செத்துப்போயிடுவேன்!"

நீ இப்படிச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து குமுறி அழுவதைக் கண்ட தோழி உன்னை ஆதரவாகத் தட்டிக்கொடுத்தபடி தேறுதல் வார்த்தைகளை ஒப்புவிக்கிறாள். உனக்கோ, என்னென்னவோ எல்லாம் நினைப்புக்கு வந்து போகின்றன.

நீ பார்த்துப் பேசியவள் மருமகளாக வந்திருந்தாலும் பரவாயில்லை. யாரோ ஒருத்தி - எப்படிப்பட்டவளோ அல்லவா விளக்கேற்றித் தொலைத்திருக்கிறாள் என்று வருந்துகிறாய். இப்படி எந்தக் கோணத்தை எடுத்துக்கொண்டாலும் உன் மனப் புகைச்சலுக்குத்தான் எண்ணெய் வார்த்துக் கொள்கிறாய்.

இதோ இந்த சுண்ணாம்பு பூசிய சுவரையும் மீறிக்கொண்டு உன் மகனின் கல்யாண வீட்டுச் சப்தம் மெல்ல வருகிறது. யாரோ பாடுகிறார்கள். யார் யாரோ ஆட வேண்டும். எல்லாரும் வாழை இலை போட்டு சாம்பார் சாதம் சாப்பிட்டுக்கொண்டிருக்க வேண்டும். மணமக்கள் மணவறையில் கம்பீரமாக வீற்றிருந்து பரிசுகளைப் பெற்றுக்கொண்டிருப்பது உன் மனக் கண்ணில் தெரிகிறது.

ரமணியம்மாள், வெகு நேரத்துக்கப்புறம் நீ விழுந்து விழுந்து சிரிக்கிறாய். பின் கேவிக்கேவி அழுகிறாய் பைத்தியம் போல். பெத்த மனம் பித்து அல்லவா? பதறுகிறாய். பிச்சைக்காரியைப்போல் பாசத்தைப் பிச்சைகேட்டு குடியிருப்புக்கு அப்பாலே உள்ள தெருவோரத்து மரத்தடியில் நிற்கிறாய்.

எப்படி இங்கு வந்தாய்? என்ன இது. உன் உடம்பெல்லாம் நனைந்து போயிருக்கிறது? எப்போது அந்த இருண்ட வானம் உன்னுடன் இணைந்துகொண்டு இப்படி அடம் பிடித்து அழத் துவங்கியது? ஏன் நீ தலைமுடியை விரித்துப் போட்டுக் கொண்டு சேலை முன்தானையைப் பிழிந்தபடியே நின்று கொண்டிருக்கிறாய்?

இந்த இருட்டுக்கிடையேயும் மழையோடு மழையாகவும் நீ இந்தத் தெருவில் ஓடுகிறாய். வீடுகளையெல்லாம் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறாய். இவ்வளவு நேரமும் எத்தனை வீடுகளையும் தெருக்களையும் தேடிப் போய் மனம் பொறுமியவள் இப்போது எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு கட்ட உன் மகனின் கல்யாண வீட்டுக்கே ஓடுகிறாய்.

அதோ, இதுவரை குதூகலப்பட்டிருந்த கல்யாணப்பந்தல் இப்போது வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது. ஆங்காங்கே நாற்காலி மேசைகளைக் கவிழ்த்துக்கொண்டு பாயையும் கம்பளியையும் சுருட்டிக் கொண்டு சிலர் குறட்டை விடுகிறார்கள். ஓ... நள்ளிரவுப்பொழுதில் தான் நீ திரும்பியிருக்கிறாயா? உனக்கே திகைப்பு.



அந்த அமைதியான சூழ்நிலையில் நிம்மதியற்றுக்கிடந்த உன்னிடம் மிஞ்சியிருக்கும் குரலையெல்லாம் ஒன்று திரட்டி "ஓ" வெனக் கத்துகிறாய். அதைத் துளியேனும் எதிர்பார்க்காத மாதிரி எல்லோரும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுகின்றனர்.

நீ ஓடிப்போய்க் கதவைப் பலங்கொண்ட மட்டும் தட்டுகிறாய். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்தவர்கள் கூடக் கதவைத் திறந்து கொண்டு இரவு உடையோடு எட்டிப் பார்க்கிறார்கள். இதோ, கமலன் விளக்கைப் போட்டுக் கொண்டு வந்து நின்று திகைத்துப் போகிறான்.

உன் மகன் முகம் மலர்வதை நேருக்குநேர் பார்க்க விருப்பப்படாமல் தலையைத் திருப்பிக் கொண்டு அவனை வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் பேசுகிறாய்-ஏசுகிறாய். ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத விஷயங்களையெல்லாம் சொல்கிறாய். இப்போது கொட்டிக் கொண்டிருக்கும் மழையைப் போல்-வானத்தில் பளீரிடும் மின்னலைப் போல்-எங்கும் எதிரொலிக்கும் இடியைப் போல்...


"டேய்...நீ என் மகன் கமலன் இல்லே! அதோ வந்திருக்கா பாரு... அந்த குமுதினியோட புருஷன். என்னை விட அவ உனக்குப் பெரிசாப் போயிட்டாப் பாரு. ஒண்ணு மட்டும் சொல்றேன்டா. ஆசைக்கு ஆயிரம் பெண்டாட்டி எடுக்கலாம். ஆனால் அன்புக்கு ஒரு தாயை எடுக்க முடியாது. பத்தாயிரம் கொடுத்தாலும் பெற்ற தாய் கிடைக்க மாட்டாள்"டா. இதோ... உன்னை மார் மேலேயும், தோள்மேலேயும் போட்டு வளர்த்த இந்த விதவைத் தாய் உன்னை விட்டுட்டுப் போறேண்டா. எங்காவது போறேண்டா."

நீ பதறுகிறாய். ஆனால் உன் மகன் அதைக் கேட்டு சந்தோஷப்படவில்லை. "நான் என்ன தப்புப் பண்ணியிருந்தாலும் மன்னித்து விடுங்கள். தயவு பண்ணி வீட்டை விட்டு மட்டும் போகாதீர்கள்" என்று கெஞ்சுகிறான். நீ அதற்கெல்லாம் காத்திருந்தாலும் பிடிவாதமாக மறுக்கிறாய்.

யார் யாரோ என்னென்னவோ சொல்கிறார்கள். எல்லாரும் உன்னை அன்புடன் தடுக்கிறார்கள். ஆனால் எவள் உன் பாசத்தோடு பங்கு போட வந்தாளோ-அந்த மருமகள் குமுதினி இப்போதுதான் திரைச் சீலையை விலக்கிக்கொண்டு ஓடி வந்து காலில் விழுகிறாள். தான் உன் பாசத்துக்கு எப்போதுமே குறுக்கே நிற்க மாட்டேன் என்று குறுக்கிடுகிறாள்.

"இல்லேம்மா. நீயே சொன்னப்புறம் நான் ஏன் போறேன். உன்னைப் போன்ற நல்ல மருமகள் கிடைச்ச பின்னாடி எனக்கு எந்தக் கஷ்டமும் வராது. அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு..குமுதினி" என்று நீ, நீண்ட தயக்கத்தையடுத்து தெரிவிக்கிறாய்.

இப்போது ஒரு பேரிடி விழுகிறது; ஆனால் தூரத்தில்! இனி ஆபத்தில்லை! ■



21 வயதுக்கு மேற்பட்டவர்கள் உயரமாக வளருவது அபூர்வம்; ஆனால் இந்த வயதுள்ள ஓர் இளைஞன் மேலும் வளர முடியுமா என்பது பற்றி, நாளமில் சுரப்பி இயலில் தேர்ச்சிபெற்ற டாக்டரே தீர்மானமாகக் கூற முடியும்.

அவனது மணிக்கட்டு மூட்டின் எக்ஸ்ரே படங்களை அந்த டாக்டர் பார்க்க விரும்புவார். வளர்ச்சிக்கு இடம் இருக்கிறதா, இல்லையா என்பதை அந்த எக்ஸ்ரே படம் அவருக்குத் தெரிவிக்கும். இந்த மூட்டுக்கள் வழக்கமாக 18-20 வயதில் முதிர்ச்சி அடையும்; ஆனால் இதற்கு விதிவிலக்குகளும் உண்டு.

உடற்பயிற்சியைப் பெருமளவுக்குப் பயன்படுத்தலாம். நீச்சல், பலவிதமான உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் ஆகியவை உடல் உயரத்திற்குப் பயன்படும். ஆனால் பளு தூக்குதல் என்னும் பயிற்சி கூடாது; இதனால் எலும்புகளும் தசைகளும் கெட்டியாகிவிடும்.

உங்கள் அங்க ... தோற்றப் பொலிவையும் உயர்த்துவதற்கான சில பயிற்சி வரிசைகள் கீழே தரப்பட்டுள்ளன. நீங்கள் நன்கு தோற்றம் அளிக்க விரும்பினால், உங்கள் உடலினை குறித்துத் திருப்தியடைய விரும்பினால், ஒவ்வொரு நாளும் இந்தப் பயிற்சிகளை 15-20 நிமிடம் செய்யுங்கள். உங்கள் உடம்பை ஒல்லியாக வைத்திருக்கவும், நீங்கள் உயரமாக வளர்ந்திருப்பதுபோல் தோற்றம் அளிக்கவும் இவை உதவும்.

1. தொடக்கநிலை - கால்களை விரித்து நிற்றல்.

பக்கவாட்டிலிருந்து கைகளை உயர்த்தவும்; தலைக்குமேல் உள்ளங்கைகளை உயர்த்தி, கைகளை இணைக்கவும்; கைகளைப் பார்க்கவும்; மூச்சை உள்ளே இழுக்கவும்; கைகளைத் தணித்து ஆரம்ப நிலைக்குக் கொண்டு வரவும்; மூச்சை வெளியே விடவும். இவ்வாறு 6-8 தடவைகள் திரும்பச் செய்யவும்.

2. தொடக்கநிலை - கால்களை ஒன்று சேர்த்து, விரல்களைக் கோத்து நிற்றல்.

உள்ளங்கை வெளியே இருக்குமாறு கைகளைத் திருப்பி, இணைந்த கைகளை முன்னால் நீட்டியவாறு கால்விரல்கள் மீது எழுந்து நிற்கவும்; மூச்சை உள்ளே இழுத்து, தொடக்க நிலைக்கு வரவும்; மூச்சை வெளியே விடவும். (6-8 தடவைகள் செய்யவும்).

3. தொடக்கநிலை - இடது பக்கத்தில் சுவருக்கு அருகே ஓர் எட்டு தள்ளி நிற்கவும், இடது முழங்கையைச் சுவரில் ஊன்றவும்.

இடுப்பை இடதுபுறம் வளைக்கவும்; வலது கையைப் பக்கவாட்டில் தலைக்குமேல் உயர்த்தி சுவரைத் தொடவும்; மூச்சை வெளியே விடவும்; தொடக்க நிலைக்கு நிமிர்ந்து நிற்கவும்; மூச்சை உள்ளே இழுக்கவும்; சுவருக்கு வலதுபுறம் நின்று கொண்டு திரும்பச்செய்யவும். (ஒவ்வொரு புறமும் 3-4 தடவைகள்).

4. தொடக்கநிலை-ஒரு நாற்காலியின் ஓரத்தில், நாற்காலியின் முதுகுக்குப் பின்னால் கைகளைக் கட்டிக்கொண்டு அமருதல்.

கால்களை நீட்டவும்; கால்களை மாற்றி மாற்றி வேகமாக 40-45 டிகிரி உயர்த்தவும்; தாராளமாக மூச்சு விடவும். (ஒவ்வொரு காலையும் 4-5 தடவை உயர்த்தவும்).

5. தொடக்க நிலை-பாதங்களை ஒன்று சேர்த்து, கைகளைத் தலைக்குப் பின்னால் வைத்துக் கொண்டு நிற்றல்.

பின்னால் குனியவும்; குனிந்த நிலையில் மூச்சை வெளியே விடவும்; நிமிரவும்; மூச்சை உள்ளே இழுக்கவும். (6-8 தடவைகள்).

6. ஓட்டம்.

வேகமாகவும் மெதுவாகவும் 20 மீட்டர் தூரம் ஓடவும். (2-3 தடவைகள்).

7. மெதுவாக நடக்கவும்.

—என். ஜருபினு.

அக்டோபர் 10 வரை

15 நாள் பலன்

(15 நாள் பலன், பிறந்த தேதியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. ஆகவே, அவரவர் பிறந்த தேதிக்குள் அடங்கிய ராசியில் கண்டுள்ள பலனைத் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம். எடுத்துக்காட்டாக, ஜனவரி 20ஆம் தேதி முதல் பிப்ரவரி 18ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுக்குக் கும்பம் (ஜன. 20-பிப். 18) என்பதன் கீழுள்ள பலன் பொருந்தும்)

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

உறவினர்கள் உங்களுக்கு உருப்படியான யோசனைகளை வழங்குவார்கள். மேலதிகாரிகளுடன் கொஞ்சம் மனக்கசப்பு ஏற்படலாம். பணச் சேமிப்பு பெருகுவதற்கும், கூட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள நேரலாம். அந்தப் பயணமும் பொருளாதாரம் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

நல்ல நாட்கள்; 26, 6, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 4

மீனம் (பிப் 19 - மார்ச்சு 20)

கூட்டு முயற்சிகள் முழு வெற்றி தரும். பெரியோர்களின் உதவியை எதிர்பார்த்துத் தோல்வி காண வேண்டாம். நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருடன் மிக எளிதாகக் கருத்து வேற்றுமை தோன்ற வாய்ப்புண்டு. கவனமாக இருங்கள். மனமாகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். தம்பதிகளானால் மேலும் உறவு வலுப்படும்.

நல்ல நாட்கள்: 29, 30, 9
எச்சரிக்கை நாட்கள்: 28, 4

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

குடும்பத்தினர், மற்றும் பெரியோர் உங்கள் யோசனைகளுக்கு ஒத்துப்போக மாட்டார்கள். அதனால் ஏற்படும் வீண் விவகாரங்களைத் தவிர்க்க நீங்கள்தான் சற்றுப் பொறுமையுடன் இருந்தாக வேண்டும். என்றாலும் அக்டோபர் மாதத் துவக்கத்தில் அவர்கள் உங்கள் வழிக்கு வரலாம். குடும்பத்திலும் வீடு சம்பந்தப்பட்டவற்றிலும் செய்ய நினைக்கும் மாற்றங்களை ஒத்திப்போடுவது மிகவும் நல்லது.

நல்ல நாட்டகள்: 26, 30, 10
எச்சரிக்கை நாட்கள்: 28, 3, 7

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அதனால் வேலைகளில் தவறுகள் ஏற்படலாம். நிதானமாக எதையும் செய்யுங்கள். உறவினர்களின் உதவி உண்டு. வேறு தொழிலில் ஈடுபட இது ஏற்ற தருணமல்ல. வாகனப் போக்குவரத்தைக் கூடுமானவரை தவிருங்கள்.

நல்ல நாட்கள்: 26, 6, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 28

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

தீராத பிரச்சனைகளை உங்கள் நண்பர்கள் தீர்த்துவைக்க வாய்ப்பு உண்டு. என்றாலும் அவர்கள் உங்கள் பண விஷயத்தில் சம்பந்தப்பட அனுமதியாதீர்கள். விளையாட்டு வீரர்களுக்கு வெற்றி கிட்டும். பொதுவாக உங்களுக்கு எல்லா வகையிலும் மகிழ்ச்சியே கிடைக்கும். கடிதப் போக்குவரத்தில் முக்கிய செய்திகள் வரும்.

நல்ல நாட்கள்: 26, 30, 6
எச்சரிக்கை நாட்கள்: 27, 5

கடகம் (ஜூன்21 - ஜூலை 20)

வீட்டை அலங்கரிப்பதிலும், திருத்திக் கட்டுவதிலும் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். நண்பர்கள் பண உதவி கேட்கக்கூடும். உடலாரோக்கியம் பாதிக்கும் என்பதால் ஓய்வு தேவை. பெரியோர்களின் உதவியால் பணம் கிடைக்க வழியுண்டு. வாகனப் போக்குவரத்தால் பலன் ஏற்படலாம்.

நல்ல நாட்கள்: 30, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 4

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

எந்தவகையான புதிய ஒப்பந்தங்களையும் செய்வதற்கு ஏற்ற தருணம். செய்தொழிலில் மேன்மை உண்டாகும். அதற்கு உங்களது முழுமுயற்சிதேவை. சகோதரர்களின விவகாரங்களைக் கவனிக்க வேண்டியிருக்கும். ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றோருக்கு இந்த நாட்களில் வேலைப்பளு அதிகமாகும். உடலாரோக்கியம் நல்லபடியாக இருக்கும்.

நல்ல நாட்கள்: 30, 9
எச்சரிக்கை நாள்: 4

கன்னி (ஆக 22 - செப் 22)

பணம் சம்பந்தப்பட்டவற்றில் கூட்டுத் தொழிலில் பங்காளிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வெறும்யூகத்தையும்வீண் செலவையும் தவிருங்கள். பெரியோர்களின் ஆலோசனைகள் பலனளிக்காது. வெளியூரிலுள்ள உங்களுக்கு வேண்டியவர்களால் நன்மை உண்டு. உடலாரோக்கியத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள்: 26, 30
எச்சரிக்கை நாட்கள்: 27, 8

துலாம் (செப் 23-அக் 22)

காதலர்களுக்கு யோககாலம்; கல்யாணமானவர்களுக்கு நிதான். கூட்டுத் தொழில் — அதிலும் குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட தொழில் விருத்தியடையும். தொழிலாளர்களாக இருந்தால் மேலதிகாரிகளின் ஆதரவையும், மேலதிகாரியாக இருந்தால் தொழிலாளர்களின் ஆதரவையும் பெறுவது கடினமாக இருக்கும்.

நல்ல நாட்கள்: 29, 30
எச்சரிக்கை நாட்கள்: 27, 3

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

வழக்கு சம்பந்தப்பட்ட வகையிலும் வெளியூர் விவகாரங்களிலும் செலவு ஏற்படலாம். தொலைபேசி அல்லது கடிதமூலம் நல்ல சேதி வரும். பொது விஷயங்களில் அதிகம் ஈடுபாடு காண்பிக்கவேண்டாம். உடல் நலம் கெடும். குடும்பத்தினர் உங்களுடன் ஒத்துப்போகமாட்டார்கள்.

நல்ல நாட்கள்: 26, 30
எச்சரிக்கை நாள்: 28

தனுசு (நவ. 23 - டிச. 20)

நீண்டகாலத் தொழில் திட்டங்களை மேற்கொண்டால் பயன்தரும். பொதுவில் வியாபார முயற்சிகளுக்கு ஏற்ற தருணம். அதிர்ஷ்ட மங்கை உங்களை அணைக்க வரும் நேரத்தில் நீங்கள் முயற்சி எதுவுமே செய்யாமல் கோட்டை விட்டுவிடாதீர்கள். வியாபார முயற்சியில் முழு மூச்சாக இறங்குங்கள். பொது விஷயங்களில் ஈடுபடுவீர்கள். அதுவும் உங்களுக்கு பயனுகவே அமையும்.

நல்ல நாட்கள்: 30, 10
எச்சரிக்கை நாட்கள். 27, 5

மகரம் (டிச. 21- ஜன 19)

யாரிடமும் வார்த்தையை அளந்துபேசுங்கள். எக்கச்சக்கமாகப் பேசி வம்பை விலைக்கு வாங்க வேண்டாம். கைத்தொழிலால் நன்மை அடைவீர்கள். பெரியோர்கள் பயனுள்ள தகவல்களைத் தருவார்கள்; பயன்படுத்திக் கொள்ளுங்கள். மணமாகாதவர்களுக்கு மகிழ்ச்சி. அப்படியென்றால், மணமானவர்களுக்கு...... சில வம்பு வழக்குத்தான்.

நல்ல நாட்கள்: 26, 29, 30,
எச்சரிக்கை நாட்கள்: 27, 7

—தஞ்சை நகுலன்

தமிழறிவுப் போட்டி-7

இறுதிநாள் 10-10-77

■	1.	■	2.	3.	■
4.					5.
■		■		■	
6.		7.		■	■
8.			■	■	9.
10.		■	11.	■	

பெயர். ____________

அடையாள அட்டை எண். ____________

முகவரி ____________

____
கையொப்பம்.

இடமிருந்து வலம்:

2. இது அவ்வளவு எளிதாக மாறாது.
4. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று.
6. பெண்கள் தத்தம் கணவரை இப்படி அழைப்பது இப்போது குறைந்து வருகிறது.
8. பருவங்களில் ஒன்று.
10. தோட்டப் பாட்டாளிகளுக்கு இவரைத் தெரியாமல் இருக்குமா?
11. இதை விரும்பாத பெண்களும் உண்டோ?

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.
8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
10. இறுதிநாள் 10-10-1977.
11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.

மேலிருந்து கீழ்:

1. 'தமிழ்நாடு' என்று சென்னைக்குப் பெயர் வைத்தவர்.
2. தோர்ப்பாக்கை இப்படியும் அழைக்கலாம்.
3. திமை தலைகீழாகிவிட்டது.
5. ஒழுங்குபடுத்தினால் புண்ணிய ஸ்தலம்.
6. உணவுக்கு இப்படியும் ஒரு பெயர்.
7. அண்மையில் விலை குறைந்திருப்பதாக அறிவிக்கப்பட்ட இது மாறிக்கிடக்கிறது.
9. ஆண்கள் இதை வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துவார்கள்.

போட்டி 6 முடிவு

■	1 க	■	2 அ	றி	வு
3 தி	ட்	ட	ம்	■	■
■	டை	■	4 மா	5 து	வி
6 ப	■	7 ஆ	■	லை	■
8 க்	9 கு	ட	வ	■	10 ஆ
11 தி	லை	ல்	■	12 ஏ	ணி

தமிழறிவுப் போட்டி-6க்கு ஆயிரக் கணக்கில் கூப்பன்கள் வந்து குவிந்தன. அவற்றில் பெரும்பாலானவை ஒரே பிழையுடன் இருந்தன.

"இது இல்லாமல் தமிழ்ப் படமா?" என்று நாங்கள் கொடுத்திருந்த குறிப்புக்குப் "பாடல்" என்று அவர்கள் விடை எழுதியிருந்தனர். ஆனால் எங்களின் விடை "ஆடல்" என்பதாகும்.

ஒரே பிழையுடன் எழுதியிருந்த அனைவரையும் மிஞ்சி ஒரே ஒருவர் மட்டும் "ஆடல்" எனச் சரியாகக் குறிப்பிட்டிருந்தார். அவருக்கு $100 பரிசு வழங்கப்படும். அந்த அதிர்ஷ்டசாலியின் பெயர்:

ரா. த. நாகரத்தினம், எண் 68, நெடுஞ்சாலை, பாஜம், மந்தின், நெகிரி செம்பிலான்.

தமிழறிவுப் போட்டியின் பரிசுத் தொகையை $100ஆக உயர்த்திய பிறகு முழுத்தொகையையும் பரிசாகப் பெறும் முதல் அதிர்ஷ்டசாலி இவர்.

நம் கலை நிகழ்ச்சிகள்

வி.கே.பதி

கலையைக் கட்டிக் காக்கும் அல்லது மேம்படுத்தும் பணியைப் பொறுத்தவரையில் தமிழ்ச் சமுதாயம் பொதுவாக இந்தியச் சமுதாயம் இன்று மிகவும் நகைப்புக்கிடமாக நடந்து கொள்வதற்கு இப்பொழுதெல்லாம் வாரம் தவறாமல் நடைபெறும் தமிழ்க் கலைநிகழ்ச்சிகள் நல்ல எடுத்துக்காட்டாகும்.

நாட்டின் பிரதான தகவல் சாதனங்களான வானொலியும், தொலைக்காட்சியும் போதிய அளவுக்குத் தரமில்லாதபடியும், எண்ணிக்கையில் குறைவாகவும் படைக்கும் நிகழ்ச்சிகளால் அதிருப்தியும், ஆத்திரமும் அடைந்த நமது மக்கள், தாங்களே தமிழ்க்கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிப் பணியில் இன்னும் வேகமாக ஈடுபடத் துவங்கிவிட்டது வெள்ளிடைமலை. ஆனால், இந்த வேகம் விவேகமாக இல்லாததை மிகவும் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நோக்கம்:

தகவல் சாதனங்களின் ஆதரவு, தொய்வு நிலையை அடைந்த தருணத்தில் சமுதாயத்திலுள்ள கலைஞர்களும், கலாரசிகர்களும், மேற்கொண்டுள்ள மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளதாகக் கூறலாம்:-

(அ) தமிழ், இயல் - இசை -நாடகத்துறையின்பால் இன்னும் அதிக ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் தமிழரிடையே உருவாக்க வேண்டும்.

(ஆ) "அ" பிரிவில் குறிப்பிட்ட ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் கொண்டு புதிய வளர்ச்சியும்அதேவேளையில் பாரம்பரிய கலைகளைப் புகுத்தும் பணியையும் செய்தல்.

(இ) "அ" "ஆ" ஆகிய பிரிவுகளில் உள்ளபடி அடைந்த வெற்றியால் புதுப்புதுக் கலைஞர்களையும் கலைப் படைப்பாளர்களையும் தோற்றுவித்தல்.

(ஈ) இறுதியாக, மேற்குறிப்பிட்ட முயற்சியின் பயனாகத் தமிழ்க்கலை இந்நாட்டில் ஆழமாக வேரூன்ற வித்திடுதல்.

இந்த நோக்கங்களில் நாம் வெற்றி பெறுவோமா என்று ஐயுற வைக்கின்றன இன்று படைக்கப்படும் நமது கலை நிகழ்ச்சிகள். நாமும் ஒரு கலை நிகழ்ச்சி படைக்கின்றோம் என்று நாட்டுக்குத் தெரியட்டுமே, நமது நடவடிக்கைகளில் ஒன்றெனக் கூறிக்கொள்வதற்காக ஒரு கலை நிகழ்ச்சியைப் படைப்போமே என்று "தடியெடுத்தவர்களெல்லாம் தண்டல்களாக" விரும்பும்ஒரு நிலை உருவாகி விட்டதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரை கடந்த ஆறு மாதங்களில் கண்டு அறிந்த 14 கலை நிகழ்ச்சிகளால் எழுந்த அனுபவத்தில் இக்கட்டுரையை எழுதுகின்றேன். இது ஒரு சாதாரண ரசிகனின் கண்ணோட்டமாகத்தான் கருதப்பட வேண்டும் என்பதை முன்கூட்டியே தெளிவுபடுத்திக்கொள்கின்றேன்.

இந்தக் கட்டுரை யார் மனதையும் புண்படுத்தவோ, யார் மீதும் உள்ள காழ்ப்புணர்ச்சியாலோ வரையப்பட்டதல்ல. படைப்பாளர்கள், தமிழ்க்கலை, கலாச்சாரம் வளர எத்துணை உணர்வு கொண்டுள்ளனரோ அத்துணை உணர்வுடனேயே இக்கட்டுரையும் வரையப்பட்டுள்ளது. நாம் நமது தரத்தை உயர்த்தினால்தான் நமது கலையும் வளரும். இனிவரும் நிகழ்ச்சிகளாவது தரத்தில் உயர்ந்து விளங்கும் என நம்புகின்றேன். திறமையுள்ளவர்களை ஒவ்வொரு துறையிலும் தக்கபடிப் பயன்படுத்தித் தரமான நிகழ்ச்சிகளைப் படைக்க இனியாவது பலர் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்பதே எனது ஆசை.

—கட்டுரையாசிரியர்

நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மற்றொன்றினின்று தரத்தில் மிஞ்சியோ, விதத்தில் மாறுபட்டோ காணப்படுவதில்லை. பொதுவாக ஒரே விதமாகக் குண்டு சட்டியில் எல்லா இயக்கங்களும் குதிரை ஓட்டுவதாகத் தெரிகின்றது. குறைபாடுகளை கீழ்க்காணுமாறு பிரிக்கலாம்:

(அ) ஒவ்வொரு படைப்பையும் சிரத்தையுடன் தயாரிப்பதாக எடுத்துக்காட்டும் "முத்திரை" தென்படுவதில்லை.

(ஆ) ஒரு படைப்பிற்கும் மற்றொரு படைப்பிற்கும் இடையில் தகுந்த தொடர்பை ஏற்படுத்துவதில்லை.

(இ) ஒரு கலைநிகழ்ச்சியின் கால வரையறையை நிர்ணயித்து அதன வரம்பிற்குள் படைப்புக்களை நடத்தும் கட்டுப்பாடு காணப்படுவதில்லை.

(ஈ) ஒவ்வொரு கலைநிகழ்ச்சியிலும் புதுமைகளைப் புகுத்தும் நோக்கம் பிரதிபலிக்கப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்ட இந்தப் பொதுவான குறைகளைத் தெளிவாகப் புலப்படுத்துவதானால் ஒவ்வொரு படைப்பையும், கலைநுணுக்கத்தையும் தனித்தனியாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இப்படி நான் செய்வதற்கான காரணம் நமது கலைஞர்களும், கலைவல்லுனர்களும் தத்தம் நிகழ்ச்சிகளின் குறைபாடுகளை எடைபோடுவதற்கு உதவியாக இருக்கும் என்பதுதான். முதலாவதாக, நிகழ்ச்சிகளின் தனித்தனிப் படைப்புகளை மட்டும் ஆராய்வோம்.



ஆடல்:

ஆடலில் ஓர் "ஒரிஜினலிட்டியைக்" காண்பது அரிது. இதற்கு நாட்டியமணிகளையே முழுக்க முழுக்கக் குறைகூற முடியாது. அவர்கள் கற்கவேண்டிய அளவு வசதியும், வாய்ப்பும் உள்நாட்டில் இல்லை. அத்துடன் ரசிப்பவர்களும் அபூர்வம். அனேகமாக எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர்கள் இசைத்தட்டுப் பாடல்களுக்கு அபிநயம் பிடிப்பதையே கடைப்பிடிக்கின்றார்கள். அது ஓரளவு முறையாகக் கற்ற பரதம் போன்ற நாட்டியப் படைப்பாகவும் இருக்கலாம்; அல்லது வெறும் டப்பாங் கூத்து போன்ற ஆட்டங்களாகவும் இருக்கலாம். எப்படி ஆனாலும், நாட்டியத்தின் முதல் கூறு, முறையான பாடலைத் தேர்ந்தெடுப்பது; அதுவும் தெளிவாக நாடாவில் பதிவு செய்யப்பட்டதாகவோ அல்லது நல்ல இசைத்தட்டாகவோ இருக்க வேண்டும்.

நாட்டியமணிகள் முதல் அசைவுடன், சில சமயங்களில் ஒற்றைக் காலில் திரைக்கு முன்னர் வந்து நின்றபடி பாடல் ஒலிக்காகக் காத்

இருப்பது ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்கிறது. அதுகூட ஒரு பொருட்டல்ல. கலைஞர்களின் கௌரவத்தைப் பாதிப்பதாக அது அமைந்து விடுவதுதான் வேதனைக்குரியது. எத்தனையோ நிகழ்ச்சிகளில் ரசிகர்கள் எள்ளிநகையாடுவதையும் கலைஞர்களுக்காகப் பரிதாபக்குரல் எழுப்புவதையும் நாம் காண்கிறோம். இது தயாரிப்பாளர் அல்லது மேடை இயக்குனரின் அலட்சியத்தையும் முறையான முன்னேற்பாடுகள் அல்லது ஒத்திகைகள் செய்யாததையும்தானே காட்டுகின்றது! ஏதோ தவிர்க்க முடியாத காரணங்களால் வழக்கத்திற்கு மாறாக இது நடந்தால் பொறுத்துக் கொள்ளலாம். இதுவே வழக்கமாக நடைபெற்றால் பணம் கொடுத்த அப்பாவி ரசிகன் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும்? ஒரு நிகழ்ச்சியில் ஒற்றைக் காலில் நின்று காத்திருந்த பெண்மணி பலமுறை வலி பொறுக்காமலும் நிலை தடுமாறியும் அவதிப்பட்டு ஆத்திரமடைந்து வேகமாகத் திரைக்குப் பின்னால் ஓடியதையும் பார்த்திருக்கிறேன். அந்நிகழ்ச்சியின் பின்னர் அவர் ஆடவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சில கலைஞர்கள் ஒரே ஆடலை மட்டும் தனது "ஸ்பெசாலிட்டி"யாக வைத்துக்கொண்டு எல்லா மேடைகளிலும் வந்து ஒப்புவித்துப் போவது போன்ற போக்குகள் தவிர்க்கப்பட வேண்டும். சில வேளைகளில் ஆட்டங்களைப் பண்பட்ட உள்நாட்டுக் கலைஞர்கள் படைப்பது வரவேற்கத்தக்கது தான். ஆனால், அதற்காக ஒரே கலைநிகழ்ச்சியில் அவர்களே பல முறை தோன்றுவது அவர்களது கௌரவத்திற்கும், கவர்ச்சிக்கும் குந்தகமாக அமைகின்றது.



பாடல்:

இத்துறை இப்போது மிகவும் செல்வாக்கு மிக்க ஒன்றாகும். ஒரு கலைநிகழ்ச்சியில் தோன்றிய அதே குழு வேறு பல நிகழ்ச்சிகளிலும் தோன்றுவதோடு ஒரே நிகழ்ச்சியில் பெருமளவு நேரத்தை அபகரித்துக் கொள்வதும் கலை தர்மம் அல்ல. புதுப்புதுப் பாடகர்களை அறிமுகப்படுத்தி ஆர்வமூட்டுவது பெருந்தன்மையும் நமது கலை வளர்ச்சியின் கூறும் ஆகும். ஒரே ஒரு நிகழ்ச்சியில் மட்டும் இந்த முயற்சி மிகவும் பெருமனதுடன் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டு மிகவும் பரவசம் அடைந்தேன். முற்றிலும் புதுமுகங்களை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் புகுத்துவது நிகழ்ச்சியின் வெற்றிக்கும், கவர்ச்சிக்கும் உத்தரவாதம் அளிக்காது என்பது உண்மைதான்.

ஆனால், முறையாகத் திறமையுடன் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சியில் நல்ல புதுப் பாடகர்கள் ஓரிருவரையாவது சேர்த்துக்கொள்வது வெற்றிக்கு ஒரு காரணமாக அமையும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

பாடலைப் பொறுத்தவரையில், இன்னொரு அருவருப்பான போக்கு மிகவும் வலியுறுத்திக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதாவது, இப்போதெல்லாம் கையில் ஓர் ஏட்டையோ, புத்தகத்தையோ ஏந்திக்கொண்டு அசைவின்றி அய்யனார் கோயில் சிலைபோல நின்று பாடல்களைப் பாடுவது ஒரு ஃபேசனாகிவிட்டது. அவர்கள் மிகவும் பேர் பெற்றிருக்கலாம், அல்லது இசைக் கலைத்துறையில் வல்லுனர்களாகவும் இருக்கலாம். ஆனால், ரசிகர்களைத் திருப்திப்படுத்த இவையெல்லாம் போதா. ரசிகர் முன்னால் வரும் பாடகன் பாடலை முழுதாக மனனம் செய்திருந்து பாடலுக்கேற்றபடி அபிநயம் பிடிக்கவும் வேண்டும்.

மேடையில் வந்து நின்று மரக்கட்டை மாதிரி நின்று பாடுவதும், புத்தகத்தை வைத்து முகத்தை மறைத்துக்கொண்டு பாடுவதும் கலைஞர்களுக்கு அழகல்ல. ரசிகர்களுக்கும் அது மகிழ்வூட்ட முடியாது. அண்மையில் ஒரு பிரபல்யமான மன்றத்தினர் படைத்த கலை நிகழ்ச்சியில், ஒரு பாடகி தாங்கிய புத்தகத்தின் நிழல் அவரது முகத்தில் சரியாக விழுந்து அகோரமாகக் காட்சியளித்தது. இன்னொரு கலைஞர் தனது வாத்தியக்குழுவை மேடையில் ஏற்றி அமர்த்திக் கொண்டு தனது முதுகும், பிட்டமும் ரசிகர்களுக்குத் தெரிய இசைக் குழுவினரை ஆட்டிப்படைத்ததும் ஒரு முழு நேர "நிகழ்ச்சியாக" இருந்தது வெறுப்பைத்தான் ஊட்டியது. இனியாவது சீராக உடுத்தாத இசைக்கலைஞர்கள் தேவையில்லாமல் மேடையில் அமராது மேடைக்கு முன்னர் ரசிகர் நிலையில் அமர்வார்களாக.

பாடல்களில் இன்னொன்றையும் கூறவேண்டும். பாடகர்கள் தமக்குப் பிடித்த அண்மைய வெளியீடுகளை மட்டும் எப்போதும் பாடாது, நல்ல சங்கீதம் கொண்ட இனிமையான பழைய, புதிய பாடல்களை வழங்குவதும் தேவைதான்.

நகைச்சுவை / நாடகம்

இது ஓர் அங்கமாக எல்லாக் கலை நிகழ்ச்சிகளிலும் இப்பொழுதெல்லாம் இடம் பெறுவது ஏனோ? எந்த ஒரு படைப்பிலும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். சமுதாய நலன் கருதி நல்ல கருத்துக்களை விளக்கமாக, கவர்ச்சியாகக் கூறும் நோக்கமுடையதாகச் சுருக்கமான படைப்பாக இருக்க வேண்டும்.

இந்தக் கொள்கை பல நகைச்சுவை உரையாடல்களில் காணப்படுவதில்லை. அர்த்தமில்லாத வெறும் நகைச்சுவை உரையாடல்களாகவே பல அமைவது காதுக்கு இனிமையாகச் சில வேளை அமைவதுண்டு. ஆனால், அது உண்மையில் ஒரு முழுப் பயனுள்ள படைப்பாகக் கருதப்பட முடியாது.



சில நிமிடங்கள் நடைபெறும் நல்ல சமூக/இலக்கிய நாடகங்களைப் பார்ப்பதும் இப்போதெல்லாம் அரிதுதான். கலை வளர்ச்சியில் நாடகங்கள் ஆற்றும் தொண்டு சொல்லித் தெரிவதல்ல. எனவே, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், 15-20 நிமிட நேரத்தில் கருத்திலும், தரத்திலும் உயர்ந்த நல்ல நாடகங்களைப் படைக்க முயலுவது நல்லது. அண்மையில் நடந்த ஓர் அரசியல் கட்சியின் இளைஞர் படைப்பில் அரிய இரு இலக்கியப் படைப்புக்கள் இடம் பெற்றன, அந்நிகழ்ச்சிக்குச் 'சிகரம்' வைத்தது போன்று இருந்தது. அதில் நடித்த நடிகர்களின் திறன், இந்நாட்டில் இருக்கும் ஏனைய கலைஞர்களின் திறனுக்கு ஒரு நல்ல பிரதிபலிப்பு என்று கூறலாம்.

ஒரு சில நகைச்சுவை நாடகங்களில் கலைஞர்கள் ஒப்பனை இன்றித் தோன்றுவதும் ஏற்புடையதல்ல. ஒரு கலைஞர் இயற்கையாக நடிக்க ஆசைப்படலாம். ஆனால், சற்றுச் செயற்கையான அழகூட்டுவதுதான் ரசிகர்களின் கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தர முடியும். பார்வைக்கு அழகானவர் என்றால் சரி, அதுவும் குறைந்தவர்கள் மேடையில் அப்படியே தோன்றுவது அருவருப்பாகத்தான் இருக்கின்றது.

மேடைப் பேச்சும் கவர்சசித்தாரகைகளின் அணிவகுப்பும் போட்டிகளும்.

பிரபல சமூகத் தலைவர்களை மேடைக்கு அழைத்து வாழ்த்துரை வழங்கக் கோருவது ஒரு வழக்கமாகவும், தேவையாகவும் அமைவது உண்டு. கூடியவரை கலைநிகழ்ச்சியில் இதனைத் தவிர்க்க முயல்வது நல்லது. இதற்கு முக்கிய காரணம், கலை நிகழ்ச்சிகளில் தலைவர்கள் பேசுவது ஒரு பெரிய சோதனை. நிகழ்ச்சிகள், பேச்சுக்கு முன் சிறப்பாக அமைந்திருந்தால் உரையாற்றுபவர் பாக்கியசாலி. ஆனால், அதற்கு முரண்பாடாகத் தரம் குறைந்திருந்தால் ரசிகர்களின் வெந்த புண்ணில் வேகும் நெருப்பைப்போட்ட கதையாகத்தான் போகும். பல சந்தர்ப்பங்களில் பெருந்தலைவர்களையும் பேச்சுக்கிடையே ரசிகர்கள் கைதட்டிக் கீழிறங்கச் செய்யும் தர்பசங்கடமும் எழுவது உண்டு. எல்லாம் சிறப்பாக இருக்கவேண்டுமானால் தயாரிப்பாளர்கள் தலைவர்

களை உரை நிகழ்த்த அழைக்கும் முயற்சிக்கு முன்னர் நிகழ்ச்சியின் தரத்தைச் சீர்தூக்கிப்பார்ப்பது நல்லது.

இன்னொரு காட்சி, மேடைக் கலைநிகழ்ச்சிகளில் பெண்களை ஆடை அணிவகுப்பு நடத்தச் சொல்லுவதும், அழகுராணிப் போட்டிகள் நடத்துவதுமாகும். இது வரவுக்காகச் செய்யப்படும் முயற்சியாயினும், இதனையும் சற்றுச் சிரத்தையுடன் செய்வது நலம். அண்மைய நிகழ்ச்சி ஒன்றில் அறிவிப்பாளர் வாசித்துக்கொண்டே போக, பெண்மணிகள் அவர் கூறுவதற்கு முரண்பாடாக மேடையில் தோன்றுவதையும் கண்டோம். பாவம், அறிவிப்பாளர்! அருமையான தமிழில் சொல்லலங்காரத்துடன் பெண்களின் உடுப்பை வருணிக்க, ரசிகர்களுக்கு நிமிர்ந்து பார்க்கவும் சந்தர்ப்பம் அளிக்காமல் பெண்கள் வேகமாக ஒருவர் பின் ஒருவராக மின்னலென மேடையில் தோன்றி மறைந்தனர். இது முறையான ஒத்திகை செய்யாததைத்தானே கண்கூடாகக் காட்டுகின்றது! இத்தகு நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகவும், கவர்ச்சியாகவும் நடத்த முயல்வார்களாக! குறிப்பாக மேடை அணிவகுப்பு நிகழ்ச்சிகளை பெரும் அறுவைகளாக மாற்றிவிடுவது தவிர்க்கப்படவேண்டும்.



அறிவிப்பாளர்

கலைநிகழ்ச்சிகளில் ஒரு பிரத்தியேக அறிவிப்பாளர் தேவையா என்ற ஐயம் என் மனத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் தோன்றுவதுண்டு. உதாரணமாகத் தமிழ்நாட்டிலிருந்து வந்த பிரபல பாடகர், தானே நிகழ்ச்சியை ரசிகர் முன்னிலையில் கவர்ச்சிகரமாக நடத்தவல்லவர். அவர் நிகழ்ச்சிக்கும் ஓர் அறிவிப்பாளர் தோன்றினர். பாடல் மாற்றிப்பாடல். அவர் வந்து போட்ட அறுவை ஒரு பெரிய எரிச்சல். இதே மாதிரி பல நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளர்கள் தோன்றித் தங்கள் கருத்துக்களை ரசிகர் முன்னர் படைப்பதில் பரிதாபமாகத் தோற்பதையும் கண்டபோது இம்மாதிரியான காலவிரயம் தேவையா என்று தோன்றுகின்றது.

ஒரு கலைநிகழ்ச்சியில் 38 படைப்புக்கள் இடம் பெற்றன. அக்கலைநிகழ்ச்சியோ 4¾ மணி நேரம் நடைபெற்றது. அதில் அறிவிப்பாளர் எடுத்துக்கொண்ட நேரமே 39 நிமிடங்கள். எந்தப் படைப்பும் இத்தனை பெரிய அளவு நேரத்தை அன்று எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு பாடகரை மூன்று முறை அதே மேடையில் கண்ட ரசிகர் காட்டிய அதிருப்தியே அலாதி. அதில் அறிவிப்பாளரால் ரசிகர்கள் அடைந்திருக்கக் கூடிய வெறுப்பு எவ்வளவு என்று கூறத் தேவையில்லை. என்னைப் பொறுத்தவரையில் மேடைக்கு ஓர் அறிவிப்பாளர் அத்தியாவசிய காரணங்களின்றித் தேவையில்லை. எல்லாக் கலைநிகழ்ச்சிகளும் 2 முதல் 2½ மணி கால வரையறையில் திட்டமிடப்படலாம். கூடியவரை மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் பின்னணியிலிருந்து ஒவ்வொரு படைப்பிற்கும் முன் விளக்கம் அளிக்கலாம்.

இவ்வாறு செய்வதின்வழி நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றிச் சுமுகமாக நடைபெறவும் கால விரயத்தைத் தவிர்க்கவும் முடியும். உதாரணமாக ஒரு போட்டி நிகழ்ச்சியை நடத்த அறிவிப்பாளர் தேவைதான். ஆனால் ஒரு பாடல் முடிந்து இன்னொரு பாடல் வரும்போது அறிவிப்பாளர் எதற்கு? ரசிகர்கள் காண வருவது கலைஞர்களை, அறிவிப்பாளர்களான "அதிகப் பிரசங்கிகளை" அல்ல. நிகழ்ச்சிகளைப் படைப்பவர்கள் முறையாக முழு ஒத்திகை நடத்தியிருந்தால் அறிவிப்பாளர் என்று ஒருவர் தோன்றிக் கலைநுணுக்கங்களில் ஏற்படும் தங்கு தடைகளால் உண்டாகும் இடைவெளியை நிரப்ப வேண்டிய அவசியம் எழாது. இதற்கு முன்மாதிரியான முயற்சியை அண்மையில் இரண்டு நிகழ்ச்சிகளில் கண்டேன். படைப்புக்கள் ஒன்றன்பின்ஒன்றாகக் கோவைபோல் தோன்றியதையும் அறிவிப்பாளர் யார் என்பதையே காட்டாததையும் ரசிகர்கள் பெரிதாக வரவேற்றனர் என்பதில் ஐயமில்லை.

தங்குதடைகள்:

ஒரு படைப்புக்கும் மற்றொன்றுக்கும் இடையில் அவ்வப்போது தடைகளும் ஒலிபெருக்கிக் கோளாறுகளும் ஏற்படுவது சாதாரண அம்சமாகிவிடுகின்றது. ஒலிபெருக்கியின் ஏற்றத்தாழ்வும் "கீச் கீச்" ஒலியும் ரசிகர்களை மிகவும் அசௌகரியத்துக்கு ஆளாக்குவது அவர்களுக்குத் தயாரிப்பாளர்கள் செய்யும் நன்றிக்கடனாகாது. தெளிவாகக் கேட்காவிட்டால் நிகழ்ச்சியின் தரம் வெகுவாகப் பாதிக்கப்படுவதைச் சற்றுக் கடுமையாகக் கருதவேண்டும்.

மேலும் நிகழ்ச்சிக் கோவை இயன்றவரை நிகழ்ச்சி நிரலையும் காலவரையறையையும் ஒட்டியே போகவேண்டும். தேவையில்லாத பாடல்களையோ, ஆடல்களையோ புகுத்தக்கூடாது. இயன்றவரை ஒரு கலைஞருக்கு ஓரிரு முறைகளுக்கு மேல் ஒரே நிகழ்ச்சியில் தோன்ற வாய்ப்பளிக்கக் கூடாது.

பெருங்கருணையாளன்

எந்தை யாய்எம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை யாய்தம் பிரான்தனக்கு அஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே!

யாவரும் மனத்தாலும் அறிதற்கரிய முத்திப் பெருஞ் செல்வனாகிய இறைவன், எமது தந்தையாகியும் எம் பெருமானாகியும் விளங்குபவன்! மற்றுமுள்ள எல்லார்க்கும் தந்தை தாயாகுபவனும் அவனே! அனைவருக்கும் தலைவனும் அவனே!

எனினும், அவன் தனக்கொரு தாயும் தந்தையும் தலைவனும் இல்லாதவன்! எனக்கு அவனடியைச் சார்தற்குரிய பக்குவகாலம் வருவதற்கு முன்பாகவே, அவன் தன் பெருங்கருணையினால் என் உள்ளத்தே வந்து புகுந்து என்னை ஆட்கொண்டனன்!

—திருவாசகம் 5: 47

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

எஸ். மனோகர், கம்போங் தொக்காங், கோலக்குரோ

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆர். முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இவர் நடித்த படங்கள் தமிழகத் திரையரங்குகளில் நூறு நாட்கள் வரை ஓடவில்லையாமே?

ப: முதலமைச்சர் ஆனதால் படங்கள் ஓடவில்லை என்பது சரியல்ல. நல்ல படமாக இருந்தால் நூறு நாட்கள் வரை ஓடவே செய்யும்.

கே: ஒரு புதுமுக இளம் நடிகை சிறந்து விளங்க என்னென்ன தகுதிகள் வேண்டும்?

ப: "எல்லோரிடமும் இணங்கிப்போகும்" மனம் வேண்டும் என்றுதான் சில சினிமா பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் சுஜாதாவின் முன்னேற்றத்தைப் பார்க்கும்போது திறமையாலும் சிறந்து விளங்கமுடியும் என்பது தெளிவாகிறது.

க. சுந்தர், கம்போங் சுங்கை துக்காங்

கே: தாய்லாந்து நடிகை மேட்டாவிற்குத் திருமணம் ஆகிவிட்டதா?

ப: எனக்குத் திருமண அழைப்பு வரவில்லையே!

ஏ. கே. எஸ். ராஜா, சொகமானா

கே: அண்ணா, இந்தி, ஆங்கில, சீனப் படங்களுக்கு விமர்சனப் படச்சுருள் தியேட்டர்களில் திரையிடப்படுகின்றன. ஆனால் தமிழ்ப்படங்களுக்குக் காட்டப்படுவதில்லையே, ஏன்?

ப: அது இல்லாமலேயே படத்தைப் பார்க்க நாம் தயாராக இருக்கும்போது பணத்தையும் நேரத்தையும் ஏன் வீணாக்கவேண்டும் என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும்.

டி. கே. ஆறுமுகம், சுங்கை கிரை (பெல்டா)

கே: சினிமாப் பகுதி தேவையில்லை என்று வீண் ஜம்பமடித்துக்கொள்ளும் சிலர் புதுப்படம் வந்ததும் முதலில் போய்ப் பார்த்துவிடத் துடிப்பது ஏன்?

ப: மனிதனுக்கு எப்போதும் இரண்டு மனங்கள். ஒன்று வெளிப்படையாகத் தெரிவது. இது அவர்களை நல்லவர்கள் என்று எண்ண வைக்கும். மற்றொன்று இதற்கு நேர்மாறானது.

குமாரி எம். நாகம்மா,
சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: நடிகை சுஜாதா சினிமாவில் தொடர்ந்து நடிக்கப்போவதாகக் கூறப்படுகிறதே, உண்மையா?

ப: தொடர்ந்து நடிப்பார் என்றே இப்போதைய செய்திகள் கூறுகின்றன.

கே: நடிகை ஜெயலலிதா ஏன் இப்பொழுது படங்களில் நடிப்பதில்லை?

ப: அவர்தான், தான் இப்போது நடிகையல்ல என்றும், தனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்றும் முன்பே கூறிவிட்டாரே!

கே: நடிகை சரோஜாதேவியின் கடைசிப்படம் எது?

ப: சரோஜாதேவி பட உலகிலிருந்து போய்விடவில்லை. அவர் நடித்த ஸ்ரீராம பட்டாபிஷேகம் இப்போது வெளியாகியுள்ளது.

ஏ. எஸ். சிவன், பாமோல், குளுவாங்

கே: நீங்கள் ஒரு மாதத்தில் எத்தனை சினிமாப் படங்கள் பார்ப்பீர்கள்?

ப: ஏன், உதவலாம் என்று நினைக்கிறீர்களா?

எம். குணசேகரன், பாரிட்புந்தார்

கே: கதாநாயகி இல்லாமல் ஏதேனும் தமிழ்ப்படம் வெளிவந்துள்ளதா?

ப: அப்படி ஒரு படம் வந்தால் யாராவது பார்ப்பார்களா?

அரையன் ராஜராஜன்,
அந்தாரா தோட்டம், பாகான் திராப்

கே: மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனை எதிர்பார்க்கிறோம். இன்னும் ஏன் வரவில்லை?

ப: எம். ஜி. ஆர். நடித்துள்ள படங்களில் அடுத்து வெளிவரவிருப்பது "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" தான்!

ஏ. எஸ். சிவநேசன், குளுவாங்

கே: இந்தி, தமிழ்ப்படங்களில் "வழவழ" என்று இரண்டரை மணிக்கு மேல் ஏன் கதையை இழுத்தடிக்கிறார்கள்? இரண்டுமணி நேரத்தில் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடக் கூடாதா?

ப: கதை இருந்தால் இரண்டு மணி நேரத்தில் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடலாம். அது இல்லாததால்தான் எப்படி முடிப்பது என்று தெரியாமல் இழுக்கவேண்டியிருக்கிறது.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: "பத்ரகாளி" ராணி சந்திரா உயிருடன் இருந்தால் இவ்வளவு புகழ்பெற்றிருப்பாரா?

ப: நிச்சயம் பெற்றிருக்கமாட்டார். மாண்ட பிறகு தானே நாம் எப்போதும் புகழ்பாடுவோம்!

குமாரி லதாவாணி, நெகாரா தோட்டம், சுங்கை

கே: நீங்கள் சிவாஜி ரசிகரா, எம். ஜி. ஆர். ரசிகரா?

ப: எப்படி இருந்தால் தேவலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?



"இறைவன் கொடுத்த வரம்" படத்தில் படாபட் ஜெயலட்சுமி.

பாசத்தினால் அல்ல

செங்கதிரோன், பெட்டாலிங்

சாமி, ஆசிரியர் உத்தியோகம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அங்குக்கிடந்த நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தான்.

"சாப்பாடு எடுத்து வைத்திருக்கிறேன் வந்து சாப்பிடுங்க" என்றாள் புனிதா.

முகத்தில் உள்ள சுருக்கத்தின் மடிப்புகளை ஒன்று சேர்த்துக் கொண்டு அடிவயிற்றை ஒரு கையால் தடவி விட்டுக் கொண்டிருந்த சாமி மறு கையைத் தலையின் பின்புறம் வைத்துக்கொண்டு அண்ணாந்தபடியே கண்களை மூடியிருந்தான். புனிதா சாப்பிடச் சொல்லி அழைத்ததையும் காதில் போட்டுக் கொள்ளாமல் உடம்பை நெளித்துச் சுழித்தான். அவன் வலுவற்றிருந்த உடலை இன்ன வியாதி என்று பிரித்துக் கூற இயலாத புதிரான நோய்கள் வாட்டி வதை செய்தன. உத்தியோகம் முடிந்து வீடு திரும்பி வந்ததும் சாப்பிட வேண்டுமென்ற கவலை சிறிதுமின்றி எந்நேரமும் படுத்துப் புரள்வான். தன்னிடம் உள்ள பலவீனத்திற்காகத் துணைக்குத் தெய்வங்களின் பெயர்களை முணு முணுத்துக் கொள்வான்.

சாமியின் உடல் நிலையைப் பார்க்கும் போதெல்லாம் புனிதாவின் உள்ளம் ஏதோ பழக்க தோஷம் போல் மரத்துப் போயிறது. பசையும் பிடிப்பும் எதுவுமே ஏற்படவில்லை. விசனமும் சலனமும் சுடுகாட்டு வாயிற்கதவைத் திறந்து விட்டுக் கொண்டிருந்தன. மனக்கதவு இலேசாக திறக்கப்படுகிறது.

"உனக்கு என்னம்மா கொற வரப் போகுது; பாழுங்கிணத்திலியா தள்ளப் போறோம்; மாப்பிள்ளைக்குப் பிறவியில் காலும் கையும் கொஞ்சம் ஊனம். கொஞ்சம் தாங்கலா நடப்பாரு. அதனால் என்ன! வாத்தியாரு வேலை பார்க்கறாரு. கையிலெ அழுக்குப் படாம சாப்பிடலாம்; பையனுக்கும் தங்கமான மனசுன்னு சொல்றாங்க; .. அதுக்காகத்தாம்மா...உன் சம்மதம் கேட்காமலே எல்லா ஏறபாடும் செய்திட்டோம்; நீ மாட்டேன்னா... எங்க மானம் மரியாதையெல்லாம் போயிடும்" -அழாக் குறையாகக் கெஞ்சினார்கள் பெற்றோர்கள்.

புனிதாவுக்கு அழுது அழுது கண்கள் சிவந்தன இளமையின் எழில் கோலத்தின் அழகு பிம்பம் வாடியது. மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வந்த அன்றே புனிதாவுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை. அப்போதே அவள் மனம் துணுக்குற்றது. ஊனமான உடலின் தோற்றம் அவள் இதயத்தை ஊனப்படுத்தியது. அவள் எதிர்கால வாழ்க்கை என்னும் அற்புதமான வடிவு அமைப்பு அவள் கண்முன்னாலேயே அழிந்து போவதைத் தாங்கிக் கொள்ளச்சக்தியற்றிருந்தாள். இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டுமென்ற முடிவில் வலுவோடுதான் இருந்து வந்தாள். கடைசி நேரம்வரை கூட அவள் முடிவில் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்திக் கொள்ளாமல்தான் இருந்தாள்.

பெற்றோர் தரப்பினர் எடுத்து வைத்த கருத்துக்கள் அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. எது சரி, எது சரியில்லை என்று முடிவு செய்வதில் தடுமாறினாள்... அவர்கள் சொன்னவை நியாயம் போலத் தோன்றியன. அவர்கள் பேச்சை மறுத்துப் பேசுவது அவர்களை அவமதிப்பது போன்றிருக்குமே என்ற ஓர் உந்தல். இரும்பு மனத்தை இளகவிட்டுக் கொண்டாள்.

நீண்ட நேரம் நாற்காலியில் சாய்ந்திருந்து அசதியைப் போக்கிக் கொண்டிருந்த சாமி... திடீரென... எதையோ நினைத்துக்கொண்டவன் போல் ஒரு வாரமாக படுத்த படுக்கையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் இரு குழந்தைகளையும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்துக்கொண்டான். பிறகு கால் கைகளை அலம்பி விட்டுச் சாப்பிடச் சென்றான்.

சோற்றைப் பிசைந்து உருட்டி இரண்டு கவளம் அள்ளி வாய்க்குள் போட்டான் அதற்குமேல் உணவு உட்கொள்ள முடியவில்லை. அன்னக் குழாய்முரண்டுபிடிவாதம்செய்தது. உணவு விஷமாகக் கசந்தது. மேற்கொண்டு சாப்பிடவும் மனமின்றி எழுந்திருக்கவும் மனமின்றி இருந்தபோது நெஞ்சைக் குமட்டியது. லொட...லொடவென சாப்பிட்டதெல்லாம் வெளியே வந்து விழுந்தது.

புனிதா மெதுவாக அவன் உச்சந்தலையில் கைவைத்து வருடிவிட்டாள். தண்ணீரை அள்ளி ஊற்றிச் சிமிண்டு தரையை சுத்தப்படுத்தினாள். அவனைக் கைத்தாங்கலாகப் பற்றி வந்து, ஆடையை மாற்றச் சொல்லி படுக்கச் செய்தாள். வாங்கி வைத்திருந்தமருந்தை ஊற்றிக் குடிக்கச் செய்து, நெஞ்சை நீவி விட்டுக் கொண்டே சாமியின் உடல் நிலையை மனத்திரையில் அளந்தாள்.

ஒட்டிய வயிறு, குழி விழுந்த கன்னங்கள், எலும்புகளின் சரியான கணக்கை அவனது நெஞ்சக் கூட்டைப் பார்த்து எண்ணி விடுவதைப் போன்ற பிரமை. ஒரு விதர்ப்பமான உடல் சிலிர்ப்பு, அவள் மனதை நோகச் செய்தது. அதன் பிரதிபலிப்பு அவள் கண்களில் நீராக வழிந்தது.

அவள் "செய்கின்ற பணிவிடை பூரணத்துவமாக இருந்தாலும் அது அன்பினாலா, கடைமையினாலா என்பதை அவனால் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்த போதிலும், தன்னுள்ளே எழுகின்ற சந்தேகத்தின் பலவீனத்தை எண்ணி அவனால் திருப்தி கொள்ள முடியவில்லை.

"புனிதா! நீ ஏன் அழணும்? என்னைப் பார்க்கவே வெறுப்பா இருக்கு இல்ல. முன்பு இருந்ததை விட இப்ப ரொம்ப இளைத்துப் போயிட்டே. என்னால உனக்கு எவ்வளவு சிரமம். என்னையும் கெடுத்துக்கொண்டு உன்னையும் கெடுத்திட்டேன். தொட்டுத் தாலி கட்டியதிலிருந்து நீ சிரித்து நான் பார்த்ததே இல்லை. நான் பெரிய தப்புப் பண்ணிட்டேன்." - நெஞ்சுருக, கண்ணீர் மல்க சன்னமான குரலில் கூறினான் சாமி.

"இப்ப அதைப் பற்றி ஏன் பேசணும். நான் உங்களுக்கு செய்ய வேண்டிய கடமையை ஒழுங்காதானே செய்யிறேன்."

"புனிதா! கடமை வேறு; அன்பும் பாசமும் வேறு."

"அன்பும் பாசமும் என்னிடம் இருந்தாத்தானே! பட்டமரம் துளிர் விட்டாலும் விடலாம்; வரண்டு போன என் இதயத்தில் எந்த உணர்ச்சியுமே இல்லியே!"

புனிதாவின் தத்துவப் பேச்சால் விக்கித்துப் போனான் சாமி.

ஒரு சூன்யமான பிரதேசத்தில் இருவரும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு வெறிக்கப் பார்த்துக் கொண்டனர்.

புனிதா திடீரென தனது நெஞ்சை அழுத்திப் பற்றிக் கொள்கிறாள்.

"என்னது...? என்னது?" -சாமி துடிதுடிக்கிறான்.

"ஒண்ணுமில்லே... வழக்கமா வர்ற நெஞ்சு வலிதானே! மருந்து சாப்பிடுறேன். எல்லாம் சரியாய் போயிடும்."

அவனுக்கு ஆறுதல் வந்தது. குழந்தைகளை அணைத்துக் கொண்டு நிசப்தமானான்.

"சாமிக்குக் கடுமையான நோய். காப்பாற்றுவது கடினம். எந்தச் சந்தர்ப்பத்திலும் எதுவும் நடந்து விடலாம்; அதே நோய் உனக்கு ஆரம்பமாகிறது. உன் பிள்ளைகளையும் தொடர்வதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. இரத்தக் கலப்பினத்தால் ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப் படுத்துவது சிரமம். எனவே நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்"

என்ற ஆலோசனையை டாக்டர் மூலம் அறிந்து வைத்திருக்கும் போது என்ன காரணத்திற்காக வாழ்க்கையில் நம்பிக்கையோடு எதிர் நீச்சல் போட முடியும்? எச்சரிக்கையான வசதிகளைத் தேடி வைத்துக்கொண்டுதான் என்ன பிரயோஜனம்? பாழ்பட்டுப்போன மனப் புண்ணைச் சீர்படுத்திக்கொள்ள வழிதான் ஏது? ஆற்றாமை என்னும் கிறலை அழித்து எழுதுவது எங்ஙனம்? அவளுக்கேற்பட்ட மனக்குழப்பத்திற்கு விடைகாண வெகு நேரம் சிந்

தனையோடு போராடிக் கொண்டிருந்தாள். இரவு நேர கடமைகளுக்குப் பின்னும் சிந்தித்துக் கொண்டுதான் இருந்தாள். அமைதியின்றி பொழுது விடியும் மட்டும் சிந்தனையோடுதான் போராடிக் கொண்டிருந்தாள்.

அன்று காலை சாமி பள்ளிக்குச் செல்லத் தயாரானான். உடல்நிலை பலவீனமாக இருந்தாலும், கூடுமானவரை பள்ளிக்குச் சென்றுவிட வேண்டும் என்பதில் கவனமாக இருப்பவன். உடல் நிலை மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கும்போது மட்டும் போகாமல் இருந்து விடுவது வழக்கம். சாமியின் நிலைமைக்காகத் தலைமையாசிரியர் முதல் சக ஆசிரியர்கள் வரை அனுதாபப்படுவதோடு, சாமியினால் தன் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாத நேரங்களில் சக ஆசிரியர்கள் உதவியும் வந்தனர்.

இன்று பள்ளிக்குப் போகத்தயாரானாலும் உள்ளம் போக மறுக்கிறது. புனிதாவிடம் ஒரு வார்த்-தை சொல்லிவிட அவளை எதிர்நோக்கி நிற்கிறான்.

அவளும் புரிந்து கொண்டவள் போல்தலையசைத்து விடைகூறினாள்.

தலைவாசலில் பல்லி கிச்...கிச்... என்கிறது. திகைத்து நிற்கிறான். அதில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. இன்று மட்டும் அவனுக்கு என்னவோபோல் இருக்கிறது. தினந்தோறும் பல்லி கத்துகிறது, இன்று மட்டும் ஏன் பிரமாதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என மனம் தெளிகிறது. இருந்தாலும் அவனையுமறியாமல் விழிகளில் நீர் சுரந்து நிற்கிறது. "பிள்ளைகளை கவனிச்சிக்க" என்றவன், பிள்ளைகள் பக்கம் திரும்பிப் பார்த்தான். மனத்தில் ஏதோ சலனம். அந்த நேரம் அர்த்தம் புரிந்துகொள்ள அவனுக்கும் தெரியவில்லை. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொள்கிறான். மீண்டும் "வருகிறேன்" என்று சொல்லி வெளியேறினான்.

புனிதா உடம்பை அலட்டிக் கொள்ளாமல் மனத்தில் எதையோ உறைய வைத்துக் கொண்டிருப்பவள் போல் தனது பார்வையிலிருந்து மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு ஒரு கார் வந்து சாமி வீட்டின் முன் நிற்கிறது. அவசர அவசரமாகக் காரின் கதவு திறக்கப்படுகிறது. காரைச் செலுத்தி வந்தவன் கீழே இறங்கி ஓடுகிறான்.

"அம்மா... ! அம்மா ! வாத்தியார் வீட்டு அம்மா...!" - பல முறை கூப்பிட்டும் சத்தம் எதையும் காணோமே! கதவு மூடிக்கிடக்கிறது. "அவசரமான விஷயம்... சாமியாசிரியரை ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு போயிருக்காங்க... தலைமையாசிரியர் சொல்லிவிட்டு வரும்படி அனுப்பினாரு. இப்ப என்ன செய்யிறது?" தனக்குத்தானே முணுமுணுத்துக் கொள்கிறான்.

கதவைப்பலம் கொண்டமட்டும் தட்டிப் பார்க்கிறான். கதவு தாழிட்டிருந்தது. சன்னல் பக்கம் ஓடுகிறான். சன்னல் மூடிய நிலையில் தாழிடாமல் இருந்தது. திறந்து திரைச் சீலையை நீக்கிவிட்டு விட்டினுள் கவனித்தான். என்னவோ போல் தெரிகிறதே! முகம் குப்பென வியர்க்கிறது.

"அம்மா...அம்மா..." கத்திப் பார்க்கிறான. நிதானித்துக்கொண்டு உற்றுப் பார்க்கிறான். "ஐயோ, இதென்னகொடுமை! இந்த அம்மாவின் உடலில் உயிர் இருப்பதாகத் தெரியவில்லையே!" - தொண்டை கரகரக்கிறது. இலேசாகக் கனைத்துக் கொண்டு மறுபடியும் மறுபடியும் பார்க்கிறான். பக்கவாட்டில் இரு குழந்தைகள் வாழைத் தண்டுபோல் சோர்ந்துகிடக்கின்றனவே! ஐயோ இதென்ன கொடுமை இதென்ன சோதனை. நடு நடுங்கி பதை பதைத்து திகைத்து காரை நோக்கி ஓடுகிறான்.

அதுவரை இலேசாக வீசிக் கொண்டிருந்த காற்று பலமாக வீசியது. பழுத்து உதிர்ந்த பூவிதழ்களின் கருகிய சருகுகளின் குப்பைக் குவியல்கள் சுழன்றடித்து மேலும் கீழும் அலைமோதின. இடையிடையே தூறிய மழைத்துளிகளின் விசும்பல் இயற்கை அன்னையின் கசிந்துருகும் கண்ணீர்த் துளிகளாக மாறின.

மலர்களின் நறுமணம் மட்டும் காற்றில் எங்கோ அடிபட்டுப் போனது.

இப்படி நம்மால் முடியுமா?



உச்சந்தலையில் இருந்த கரகத்தைக் கைகளால் தொடாமல் முதுகில் இறக்கிக்கொண்டு பன்னிரண்டு ஆரஞ்சு போத்தல்களை வாயினாலேயே திறந்து அவற்றிலுள்ள குளிர்பானத்தை யாராவது குடிக்க முடியுமா? முடியும் என்று நிரூபிக்கிறார் மேலே படத்திலுள்ள திரு பாண்டுரங்கன்.

இவரைப் போன்று இன்னும் பலர் ஏணியில் அந்தரமாகப் படுத்துக்கொண்டு காவடி எடுப்பது, தலைகீழாகக் காவடி ஆடி வருவது, நெருப்பில் பாய்வது முதலான பலவித அதிசயங்களை நிகழ்த்திக் காண்பிக்கும் வல்லமை பெற்றவர்களும் உள்ளனர்.

நமது பண்டைய கலைச்செல்வங்களான புரவியாட்டம், (பொய்க்கால் குதிரை ஆட்டம்) வில்லுப்பாடல் போன்றவற்றையும் அவற்றுடன் இணைத்து இவர்கள் நமக்குக் கலை விருந்து வழங்குவர்.

தமிழகத்தைச் சேர்ந்த உலகப் புகழ் புரவியாட்டச் சக்கரவர்த்தி டி. சி. சுந்தரமூர்த்தி குழுவினரான இவர்களின் நிகழ்ச்சிகள் அக்டோபர் 6 ஆம் தேதி முதல் நாடெங்கும் நடைபெறும். இந்நிகழ்ச்சியைத் தலைநகர் சாந்தி புரொடக்ஷன்சார் ஏற்பாடு செய்கின்றனர்.

கரகம் மற்றும் காவடி ஆட்டங்களை வெறும் ஆட்டங்களாக மட்டுமல்லாமல் புராண- இதிகாச கதைகளாக நடத்துவது சுந்தரமூர்த்தி குழுவினரின் தனிச் சிறப்பாகும்.

சுந்தரமூர்த்தி குழுவினர் ஏற்கனவே மலேசியாவுக்கு வந்து நிகழ்ச்சிகளை நடத்தி வெற்றிக்கொடி நாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது அந்த நிகழ்ச்சிகளைக் கண்டவர்களை இன்று கேட்டாலும் 'அப்படியே ஆடாமல் அசையாமல் கற்சிலைகளாக மாறி நாம் ரசிக்குமளவுக்கு நிகழ்ச்சிகள் அமைந்திருக்கும்' என்று கூறுகின்றனர்.

கேளுங்கள்

இர. வீராசாமி சௌந்தரவள்ளி, டோவன்பி தோட்டம்

கே: சமயப் பகுதியை ஆரம்பித்தால் புதிய சமுதாயம் மேலும் சிறப்புறும் என்று எண்ணுகிறேன் அண்ணா!

ப: சித்தாந்த வித்தகர் எழுதும் "சிந்தையில் நிற்கும் சிவனடியார்கள்" கட்டுரைத் தொடரைத் தொடர்ந்து வெளியிட ஆவன செய்கிறோம்.


ஏ. கே. எஸ். ராஜா. சொகமானா தோட்டம், பேராக்

கே: அண்ணா, 'புதிய சமுதாயம்' மாதத்திற்கு இரு இதழ்கள் வெளியாகிறது. இதை மாற்றி விலையைக் கூட்டிப் பக்கங்களையும் கூட்டி மாதத்திற்கு ஓர் இதழாக வெளியிட்டால் நன்றாக இருக்குமே?

ப: வார இதழாகப் புதிய சமுதாயத்தைப் பவனி வரச் செய்வதே எங்கள் நோக்கம். மாத இதழாக மாற்ற விரும்பவில்லை.

ப. ஆறுமுகம், டேசுன் துவா, சிலாங்கூர்

கே: தொலைக்காட்சியில் மதுபானத்தைப் பற்றித்தான் தமிழில் விளம்பரம் காண்பிக்கப்படுகிறது. மற்ற விளம்பரங்கள். ஏன் தமிழில் காட்டப்படுவதில்லை?



ப: பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தமிழில் விளம்பரம் செய்ய வேண்டிய அவசியமில்லையென்று தவறாகக் கருதுவதுதான் இதற்குக் காரணம். ஆங்கிலம், அல்லது மலேசிய மொழியில் செய்யும் விளம்பரங்கள் தமிழ்மக்களையும் எட்டிவிடுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். அதனால்தான் சீனம், மலேசியமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் மட்டுமே தொலைக்காட்சியில் அதிகமான விளம்பரங்கள் வருகின்றன. இந்தத் தவறான கருத்தை மாற்றுவதற்குச் சமூக இயக்கங்களும், ம. இ. கா.வும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆர். ஷண்முகம். அரச மலேசிய ஆகாயப்படை, கோலாலம்பூர்

கே: சங்கீதம் கற்க விரும்புகிறேன். கோலாலம்பூரில் சங்கீத வகுப்பு எவ்விடத்தில் நடத்தப்படுகிறது?

ப: 1. குமாரி சிவகங்கைமுருகேசு, 3, ஜாலான் மங்கா, காசிப்பிள்ளை கம்பம். 2. திருமதி யோகேஸ்வரி நாகலிங்கம், 3, ஜாலான் சுப்பையாபிள்ளை, காசிப்பிள்ளை கம்பம். 3. குமாரி ராஜேஸ்வரி ராஜரத்தினம், 6, ஜாலான் சான் சின் நூய், ஸ்தாப்பாக். 4. திருமதி விஜயலட்சுமி குலவீரசிங்கம், ஜாலான் தம்பி அப்துல்லா, பிரிக்பீல்ட்ஸ்.

இவர்களில் குமாரி சிவகங்கை வாய்ப்பாட்டு படித்துக் கொடுக்கிறார். மற்ற மூவரும் வயலின் கற்றுக்கொடுக்கிறார்கள். இவை தவிர சங்கீத வகுப்பு ஏதும் கோலாலம்பூரில் நடப்பதாகத் தெரியவில்லை.

சா. ராஜேஸ்வரன், நார்த்ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: கடவுள் ஏன் நமக்கு இறக்கைகளைக் கொடுக்கவில்லை?



ப: இப்பொழுதே ஆகாயத்தில் சாலைப்போக்குவரத்தைப்போல நெரிசலும் நெருக்கடியும் விமானப் போக்குவரத்தினால் ஏற்பட்டுள்ளது. மனிதனுக்கும் இறக்கை இருந்துவிட்டால் அவனுடைய கால் தரையில் பதியாது. ஆகாயப் போக்குவரத்தில் மேலும் நெரிசலே ஏற்படும்.

தமிழ்ப்பாணன், தங்கா

கே: பேய், பிசாசு, பூதம் முதலியன உண்மையாகவே உலகில் உண்டா?

ப: உண்மையான பேயையோ பிசாசையோ சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு இதுவரை அதிர்ஷ்டவசமாகக் கிட்டவில்லை. ஆனால் மனித உருவில் நடமாடும் பேய்களையும் பூதங்களையும் தரிசிக்கின்ற துரதிர்ஷ்டம் அவ்வப்போது எனக்கு ஏற்படுவதுண்டு

என். என். கிருஷ்ணவேணி, கம்போங் சீரே, சிமினி

கே: "புதிய சமுதாயம்" இதழ் எங்களுக்குக் கிடைப்பதறகுச்சிரமமாக இருக்கிறது. ஆதலால் வீட்டு முகவரிக்கு அனுப்பிவைப்பீர்களா?

ப: தாராளமாக அனுப்பிவைப்போம். சந்தா 12 இதழ்களுக்கு 6 வெள்ளி, 26 இதழ்களுக்கு 12 வெள்ளி, 52 இதழ்களுக்கு 23 வெள்ளி- இதில் நீங்கள் விரும்பும் சந்தாவை அனுப்பி வைத்தால் இதழ்களை உங்கள் வீட்டு முகவரிக்கே அனுப்பிவைப்போம்.

கு. சா. சுசிலா கண்ணன், மாடார் தோட்டம், பெர்லிஸ்

கே: ஐந்து அல்லது அதற்குமேல் "புதிய சமுதாயம்" அனுப்பும்படிக் கேட்டால் கழிவுத்தொகை தருவீர்களா?

ப: கழிவுத்தொகை கிடைக்கும். தங்களுக்குவேண்டிய பிரதிகளுக்குக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்: பாகான் புக் ஸ்டோர் No.9&28, ஜாலான் கம்போங் காஜா, பட்டர்வொர்த்.


ஏ. முத்து, பெர்ணம் தோட்டம், ஊத்தான் மெலிந்தாங்

கே: சினிமா நடிகர்களின் படங்களை அச்சடித்த சட்டைகளை அணிந்துகொண்டு காவடி எடுப்பவர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?



ப: மதுபானங்களைக் குடித்துவிட்டுக் காவடி எடுப்பவர்களைவிட இவர்கள் எவ்வளவோ மேல்.

கே: முன்பெல்லாம் இளைஞர்கள் அரும்பு மீசை வைத்துக்கொள்வார்கள். இப்போதோ கட்டபொம்மனைப் போல் மீசை வைத்துக் கொள்கிறார்களே, ஏன்?



ப. காலந்தோறும் மீசைகள் மாறும். இதற்கெல்லாம் காரணம் கிடையாது!

சா. ராஜேஸ்வரன், நோர்த்ஹம்மோக் தோட்டம், கிள்ளான்.

கே: அண்ணு, நான் எப்பொழுதும் கவலையின்றி சிரித்துக்கொண்டே இருக்கிறேன். இதிலிருந்து என் எதிர்காலம் எப்படி இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: சிட்டுக்குருவியைப் போல எப்போதுமே நீங்கள் கவலையின்றி வாழ்வீர்கள்.

கே. பி. கண்ணன், சொகமானு தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: அடுத்த ஆண்டு முதல் எல். சி. இ. சோதனை நடைபெறுதாமே!

ப: அடுத்த ஆண்டு எல். சி. இ. சோதனை முற்றிலும் மலாய்மொழியில் எஸ். ஆர். பி. சோதனையாக நடைபெறும். ஆங்கிலத்தில் நடந்துவந்த சோதனைகள் மட்டுமே நிறுத்தப்படும்.

வள்ளி மணாளன், சுங்கை திங்கி தோட்டம்

கே: துரித முன்னேற்றம் கண்டுவரும் நமது ம. இ. கா. விற்கு ஏன் ஒரு சின்னமோ அல்லது கொடியோ இல்லாமல் இருக்கிறது?

ப: ம. இ. கா.விற்கு என்று தனியாகச் சின்னமும் கொடியும் இருப்பது உங்களுக்குத் தெரியாதா?

திருமதி பாக்கியம், பெட்டாலிங்

கே: கோதுமை மாவு, மைதா மாவு இரண்டும் ஒன்றா?

ப: இரண்டும் ஒன்றுதான்!

இராசிதுரை, பூபாலன், தைப்பிங்

கே: பிரபல எழுத்தாளர்களின் நாவல்களைப் படிப்பதன் மூலம் தனிமையில் இனிமை காண முடியுமல்லவா?



ப: இனிமையும் காணலாம்; பயனும் அடையலாம்.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: பெண் எழுத்தாளர்கள் எதை எழுதினாலும் சில ஆண்கள் குறை கூறுகிறார்களே?

ப: அவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டும். பெண் எழுத்தாளர்கள் விடாமுயற்சியோடு தொடர்ந்து எழுதவேண்டும்.

தி. முனியாண்டி, ஈப்போ

கே: அண்ணு, மூச்சுத் திணறுகிறதே எனக்கு! இதற்கு என்ன செய்யலாம்?

ப: ஒருவேளை ஆஸ்த்மா நோயாக இருக்கலாம். டாக்டரைப் பாருங்கள்.

கே: அண்ணு, இக்காலத்தில் தமிழ்ப் பெண்கள் எப்படி இருக்கவேண்டும்?

இக்காலத்திலும் சரி, எக்காலத்திலும் சரி, தமிழ்ப் பெண்கள் நமது அடிப்படைப் பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழவேண்டும்.

கே: இங்கு ஒருவர் "புதிய சமுதாயம்" இதழைப் படிக்காதீர்கள் என்று என்னைப் போன்ற சில மாணவர்களிடம் கூறுகின்றார். இவருக்கு நீங்கள்தான் நல்ல அறிவுரை கூறவேண்டும்.

ப: புதிய சமுதாயத்தை விரும்பாத அப்படி ஒரு பத்தாம் பசலி, கோலப்பிலாவில் நடமாடுகிறார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை.


எஸ். ஏ. மாடசாமி, ஜொகூர்

கே: தலைகுப்புறக் கவிழ்ந்து கிடக்கும் நம் சமுதாயம் நிமிர்ந்து நிற்பது எப்போது?

ப: உங்களைப் போன்ற ஒவ்வொருவரும் நிமிர்ந்து நேர்வழியில் காரியநோக்கோடு நடக்க ஆரம்பித்துவிட்டால் தலைகுப்புறக் கவிழ்ந்து கிடக்கும் நமது சமுதாயம் நிமிர்ந்து பீடு நடைபோடும்.

ஏ. லில்லி ராணி, சொகமானு தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: ஒருசிலர் மாயம் மந்திரம் என்று சொல்லுகிறார்களே, இது உண்மையா?



ப: பெரும்பாலும் மந்திரம் மாயம் என்று மோசடி செய்பவர்களே அதிகம்.

பி. செல்வராஜு, போ தேபிலை தோட்டம், கேமரன் மலை

கே: நம்மவர்களுள் சிலர், தங்கள் வீட்டில் நடிகர் திலகத்தின் படங்களையும், மக்கள் திலகத்தின் படங்களையும் கொண்டு வீட்டை அலங்கரித்து வைத்திருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: என் கருத்தைச் சொன்னால் திலகங்களின் ரசிகர்கள் கோபப்படுவார்கள்!

என். பச்சைமுத்து, சுங்கை சோ தோட்டம், ரவாங்

கே: மேதைகளின் வாழ்க்கையில் நடந்த சுவைமிக்க நிகழ்ச்சிகளை எழுதி அனுப்பினால் பிரசுரிப்பீர்களா அண்ணு?

ப: சுவைமிக்க எதையும் பிரசுரிப்போம்.

கே: தனக்கு வாய்க்கும் மனைவி ஓர் இலட்சிய மனைவியாக இருக்க வேண்டும் என்று ஓர் இளைஞன் எதிர்பார்ப்பதில் தவறு ஏதும் உண்டா?

ப: இதில் தவறு காண்பதற்கு இடமே இல்லை. எல்லா இளைஞர்களுமே இப்படித்தான் மனக்கோட்டை கட்டுவார்கள்.

எஸ். டி. சிகாமணி, டைப்பிங்

கே: தற்போதைய நிலையில் நம் சமுதாயம் விழிப்படைய என்ன தேவை?



ப: கல்வி, பொருளாதாரம் ஆகிய இரு துறைகளிலும் முழு மூச்சான ஈடுபாடு தேவை.

அரச மலேசிய விமானப்படை, கோலாலம்பூர்

கே: நம் சமயம் சைவம் என்று உணர்ந்தும் ஏன் நம் மக்கள் பண்டிகையன்று இறைச்சி போன்ற உணவுகளைச் சமைத்து பரம்பொருளை வழிபடுகிறார்கள்?



ப: அறியாமைதான் காரணம்.

என். வி. சுப்பராவ், பினாங்கு

கே: புதிய சமுதாயம் இதழுக்குக் கோலாலம்பூரைத் தவிர்த்து, மற்ற இடங்களில் நிருபர்கள் இருக்கின்றார்களா...?

ப: எல்லா இடங்களிலுமே பேட்டிக் கட்டுரைகள், ஆங்காங்கு நடக்கும் நிகழ்ச்சிகளிலிருந்து சுவையான துணுக்குகள், தினசரிப் பத்திரிகைகளில் வெளிவராத புதுமையான செய்திகள் முதலியவற்றை எழுதி அனுப்புவதற்கு நமது வாசகர்கள் முன்வர வேண்டும். இதனைத்தவிர தனித்தனியாக நிருபர்களை நியமிக்க இப்போது திட்டமில்லை.

கே: மலாய்மொழியில் வந்த ஒரு கதையை மட்டும் மொழிபெயர்த்து தமிழில் வெளியிட்டிருந்தீர்கள். பிறகு நிறுத்திவிட்டீர்களே, காரணம் என்ன?

ப: அவ்வப்போது இடையிடையே இத்தகைய மொழிபெயர்ப்புக் கதைகள் இடம்பெறும்.

குமாரிகள் கண்ணு, கமலா, பத்மா, விஜி, காஜாங்

கே: அண்ணா, இக்காலத்தில் ஒரு சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் தங்களுக்கு உதவியாக வைத்துக்கொள்கிறார்கள்; இதுபற்றி உங்கள் கருத்தென்ன?



ப: இது மன்னிக்கமுடியாத மிகப்பெரிய குற்றம். பிள்ளைகளுக்குக் கல்வியை எப்பாடு பட்டேனும் வழங்குவது பெற்றோரின் கடமையாகும்.

வேலு. இராமரெட்டி,
விக்டோரியா தோட்டம், பாடாங் சிராய்

கே: அண்ணா, சிலருடைய பெயர்களுக்குப் பின்னால் ரெட்டி, பிள்ளை, கவுண்டர், நாயர் போன்ற பெயர்கள் இருப்பதன் அவசியமென்ன. (என் பெருக்குப் பின்னால் இருப்பதையும் சேர்த்தே கேட்கிறேன்) என் பெற்றோர்களைக் கேட்டால் அவர்களுக்கும் தெரியவில்லை என்று கூறுகிறார்கள்.

ப: இவை ஜாதிப் பெயர்கள். இன்றைய புதிய தலைமுறை இத்தகைய ஜாதி அடைமொழிகளை தங்கள் பெயருக்குப் பின்னால் சேர்த்துக்கொள்வதை விரும்பவில்லை. அவற்றுக்கு அவசியம் இருப்பதாகவும் சொல்லமுடியாது.

பெ. முத்துசாமி, சுபாங்

கே: அண்ணா, 'அரசனை நம்பி புருஷனைக்கைவிட்டமாதிரி' என்னும் பழமொழி உயர்ந்த பொருளுக்கு ஆசைப்பட்டு, கையிலுள்ள பொருளை இழப்பதைக் குறிக்குமா, அல்லது அரச மரத்தை மட்டும் சுற்றிவந்தால் போதாது, புருஷனையும் சுற்றி வந்தால்தான் குழந்தைப்பேறு கிட்டும் என்பதைக் குறிக்குமா?

ப: தாங்கள் சொல்கிற இரண்டு கருத்துகளையும் இந்தப் பழமொழி குறிப்பதாகவே கொள்ளலாம்.

கே: "புதிய சமுதாயம்" வெளிநாடுகளுக்குச் செல்கின்றதா?

ப: வெளிநாடுகளில் பல சந்தாதாரர்களைப் "புதிய சமுதாயம்" பெற்றிருக்கிறது.

ப. செல்லம்மா, கோலாலம்பூர்

கே: வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்கிற துடிப்பும் உத்வேகமும் உள்ள ஒருவனுக்குத் தோல்விக்கு மேல் தோல்வி வந்தால் வாழ்க்கை சலித்துப்போய் எதிர்காலமே இல்லை என்று கருதிவிடுகிறான். அவன் என்ன செய்யவேண்டும்?



ப: மனம் தளரக்கூடாது. சோதனைகளும் தோல்விகளும் வாழ்க்கை வெற்றிக்கு அடிப்படையாக அமையும்படி மனவுறுதியோடு முன்னேக்கிச் செல்ல வேண்டும்.

கே: நான் நன்றாக ஓவியம் வரைவேன். தங்களுக்கு அனுப்பினால் ஏற்று, பிரசுரிப்பீர்களா?

ப: அனுப்புங்கள். ஏற்றதாக இருந்தால் பிரசுரிப்போம்.

"ஆர்விசரோ" ஜெயா, சுங்கை

கே: ஒரு நாட்டின் புகழ் எதைக்கொண்டு மதிப்பிடப்படுகிறது?

ப: அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமே உரைகல்.

எம். சாமிக்கண்ணு, பாரிட் புந்தார்

கே: தன் மனைவியிடம் சொல்லாத ரகசியத்தை நண்பனிடம் சொல்லலாமா?



ப: அப்படி மனைவிக்கு மறைத்து நண்பருக்குச் சொல்லக்கூடிய ரகசியங்களும் இருக்கக்கூடும்.

செல்வராஜு குமரன்,
புக்கிட் ராஜா செம்பனை ஆலை, கிள்ளான்

கே: தொல்லைகள் அற்ற உலகம் எங்கே உள்ளது?

ப: எல்லாரும் அத்தகைய உலகைத்தான் தேடித் தேடிக் காண முடியாமல் வாடுகிறார்கள்.

கே. அசோதா, டப்ளின் தோட்டம், கெடா

கே: இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியக் கதைகள் உண்மையிலேயே நடந்தவையா?

ப: உண்மையிலேயே வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கற்பனைக் காவியங்களாக அவற்றைக் கொள்ளலாம்.

பூவையர் பக்கம்

சிக்கனம் தேவை

சம்பளம் உயர்ந்துவிட்டது. உண்மைதான்! ஆனால் விலைவாசிகளும் கூடவே இரட்டிப்பாக உயர்ந்துவிட்டதே! குடும்பப் பெண்களுக்குச் சிக்கனம் தேவைதான்! எப்படி, எந்த வழியில் அதைக் கடைப்பிடிப்பது?

இதுபோன்ற கேள்விகள் இன்றைய குடும்ப மாதர்களிடம் எழுவது சகஜமே.

ஒரு குடும்பப் பெண்ணிடமே இதுகுறித்து விளக்கம் பெற்றால் சுவையாகவும், பயனுள்ளதாகவும் இருக்குமல்லவா?



இதற்காகக் கோலாலம்பூர் ஸ்காட் ரோட் பகுதியில் வசிக்கும் திருமதி வேணி மாதவனைச் சந்தித்தேன்.

"சம்பளம் உயர்ந்தது போலவே விலைவாசிகளும் உயர்ந்துவிட்டதே. உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள்?

"வருடம் ஒருமுறை உயரும் சம்பள உயர்வோடு நாள்தோறும் உயரும் விலைவாசியை ஒத்துப் பார்க்கவே பயமாக இருக்குது. ஒரு வருஷத்துக்கு முன்னாலே கூட்டி 40 காசு விற்ற கடுகுக்கீரை இன்றைக்கு 80 காசுக்கு விற்குதி என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இப்படிக் காய்கறி, பழங்கள், இறைச்சி, சமையல் பொருட்கள் எல்லாமே விலை ஏற்றம் கண்டுவிட்டன" என்றார் திருமதி வேணி.

"குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவப் பெண்களின் பங்கு எப்படி இருக்கவேண்டும்?"

"ஆடம்பரத்தைக் குறைத்து, வீண் செலவுகள் செய்யாமல் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும், புரிந்துணர்வோடு நடந்துகொள்ளவும் பெண்கள் பழகிக்கொள்ளவேண்டும். இதன்மூலம் குடும்பத்தில் ஆனந்தமும், அமைதியும் நிலவச் செய்வதில் பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகும்."

"இன்றைய நிலையில் சிக்கனத்தை எந்தெந்த வகையில் கடைப்பிடிக்க முடியும்? கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்."

"காலையில் பசியாறச் சிலர் கடையில் இட்டலி, தோசை, ரொட்டி என்று தினந்தோறும் வாங்குகிறார்கள். அதைத்தவிர்த்து சிரமத்தைப் பாராமல் அதிகாலையிலேயே எழுந்து இட்டலி, தோசை, மீ போன்ற காலை உணவுகளைச் செய்துகொண்டால் ஓரளவு கணிசமான பணத்தை மாதந்தோறும் மிச்சப்படுத்தமுடியும்.

மாதத்திற்கு இரண்டு மூன்று சினிமாவுக்குப் போவதை அவசியம் தவிர்க்கவேண்டும். பண்டிகை, விருந்து போன்ற நாட்களைத் தவிர மற்ற நாட்களில் தேவைக்கு அதிகமான மேங்கறிகளைச் சமைக்காமல், கச்சிதமாகச் சமைத்துக்கொள்வதன் மூலமும் செலவைக் குறைக்கலாம்! வீட்டில் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே கொஞ்சம் பொறுப்புடன் வேலைகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும் செலவுகளை மேலும் கொஞ்சம் கட்டுப்படுத்தலாம்!" என்று சிக்கனத்திற்குச் சில ஆலோசனைகளை எடுத்துக்கூறிய திருமதி வேணியிடம் நானும் சிக்கனமாகவே பேட்டியை முடித்துக்கொண்டேன்.

பேட்டி: மனோ

ம.இ.கா. தையல் வகுப்பு



மாலிம் நாவார் ம. இ. கா. வின் முயற்சியில் பெண்களுக்குத் தையல் வகுப்பு நடைபெற்று வருகின்றது. இவ்வகுப்பில் மலாய் மற்றும் சீனப் பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

11-7-77 முதல் இவ்வகுப்பு வாரத்திற்கு மூன்று முறையாக நடந்து வருகிறது. இதற்கான முழுச் செலவையும் சமூகநல இலாகாவும், கிந்தா வேலி மாவட்ட அலுவலகமும் ஏற்றுக் கொண்டுள்ளன. படத்தில் இடமிருந்து ஏழாவதாக இருப்பவர் சமூகநல இலாகா அதிகாரி திருமதி கண்ணபிரான்.